2024 ජූලි 10
2024 யூலை 10
10 July 2024

NAOSL

වාර්තාවේ අංකය : MED/B/PR/2022/09
அறிக்கை இல. : MED/B/PR/2022/09
Report No : MED/B/PR/2022/09

ශ්‍රී ලංකාවේ පෞද්ගලික සෞඛ්‍ය සේවාව නියාමනය කිරීමේ ක්‍රියාවලියේ කාර්යසාධනය ඇගයීම

இலங்கையின் தனியார் சுகாதார சேவைகளை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகளின் செயலாற்றுகையை மதிப்பீடு செய்தல்

Evaluation of the Performance of the Private Health Service Regulatory Process in Sri Lanka

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

இலங்கையின் தனியார் சுகாதார சேவைகளை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகளின் செயலாற்றுகையை மதிப்பீடு செய்தல்

அறிக்கை இலக்கம் : MED/B/PR/2022/09

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

உள்ளடக்கம்

1. நிறைவேற்று சாராம்சம்………………………………………………………………….…4
2. அறிமுகம்……………………………………………………………………………………8
2.1. பின்னணி……………………………………………………………………………….…8
2.1.1. தனியார் சுகாதார சேவையின் ஆரம்பம் மற்றும் விரிவாக்கல்……………………………8
2.1.2. சுகாதார காப்புறுதி…………………………………………………………………………9
2.2. தனியார் சுகாதார பிரிவின் பலம் மற்றும் பலவீனம்…………………………………………………………………………..…10
2.3. ஒழுங்குபடுத்தல்……………………………………………………………………………11
2.4. காணக்காய்விற்கான அதிகாரம்…………………………………………………………...13
2.5. காணக்காய்விற்கான பிரவேசம்……………………………………………………………13
2.6. கணக்காய்வின் நோக்கம் மற்றும் பிரமாணங்கள்…………………………………………15
2.7. கணக்காய்வு நடைமுறை…………………………………………………………………..18
2.8. கணக்காய்வு விடயப் பரப்பு………………………………………………………….……18
2.9. கணக்காய்வு விடயப் பரப்பை மட்டுப்படுத்தல்………..,,,,…………………………………19
3. விரிவான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள்…………………………………………………20
3.1. சுகாதார கொள்கை மற்றும் திட்டம்…………………………………………………….20
3.1.1. தேசிய சுகாதார கொள்கை…………………………………………………………………..20
3.1.2. சுகாதார பொதுத் திட்டம் (2016 – 2025) (Health Master Plan)………………………..20
3.1.3. தேசிய சுகாதார மூலோபாய பொது அபிவிருத்தி திட்டம் (National Health Strategic Master Plan) 2016 - 2025…………………………….………………………21
3.2. 2006 இன் 21 இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்கள (பதிவு செய்தல்) சட்டம்`………………………………………………………..……22
3.2.1. சட்டத்தை அங்கீகரிப்பதன் நோக்கங்கள்……………………………………………….22
3.2.2. தனியார் சுகாதார சேவை சபையின் அமைவு………………………………………………23
3.2.3. கட்டுப்பாட்டு சபை அமைவு தொடர்பாக மதிப்பிற்குரிய உச்ச நீதிமன்றம வழங்கியுள்ள தீர்ப்பு……………………………………………………………………………...…24
3.3. மாகாண சபைகளின் பிரதிநிதித்துவம்……………………………………………………..24
3.4. “அதிகாரமுடைய அலுவலர்கள்” சரியாக வரைவிளக்கணப்படுத்தாமை…………………….25
3.5. தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையினால் நடாத்தப்படும் கட்டுப்பாட்டுச் சபை கூட்டங்கள் மற்றும் கூட்டங்களிற்காக உறுப்பினர்களின் பங்குபற்றல்.27
3.6. ஒழுங்குபடுத்தல் சபையின் பணிகள் மற்றும் கடமைகளை மேற்கொள்வதற்காக ஒப்படைத்தல் …………….………………………………...29
3.7. சட்டத்தின் கடமைகளை மேற்கொள்வதற்காக கட்டளைகளை தயாரித்தல்………………..32
3.7.1. தனியார் மருத்துவ நிறுவனங்களை அங்கீகரிப்பு (Accreditation) செய்தல்………………..32
3.7.2. சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் கட்டளைகளை தயாரித்தல்……………………………33
3.8. சட்டத்தின் கடமைகளை மேற்கொள்வதற்காக விதிமுறைகளை தயாரித்தல்……..………..34
3.9. சட்டத்தினால் மேவுகை செய்யப்படாத துறைகள்……………………………………………36
3.10. சட்டத்தில் குறிப்பிடப்படும் நோக்கங்களை அடைந்து கொள்ளமை………………………...36
3.11. தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்தல்……………………………………….37
3.11.1 தனியார் மருத்துவ நிறுவனங்களை நடாத்திச் செல்ல பதிவு அத்தியவசியமானதென…….37
3.11.2 பதிவு சான்றிதழின் செல்லுபடியாகும் தன்மை……………………………………………38
3.11.3. பதிவு விண்ணப்பங்களை மதிப்பீடு செய்யும் உப குழு……………………………………..38
3.11.4. ஆய்வுகூடங்களை பதிவு செய்தல்…………………………………………………………40
3.11.5. பதிவு செய்யப்பட்ட ஆய்வுகூடங்கள் தொடர்பான தரவுகள் முரண்படல்……………..……40

3.12. தனியார் மருத்துவ நிறுவனங்களில் மனிதவள அபிவிருத்தி……………………………….41
3.12.1. தனியார் மருத்துவ நிறுவனங்களில் மனிதவள பயிற்றுவிப்பு………………………………42
3.12.2. பயிற்றுவிப்பு உப குழு……………………………………………………………………44
3.12.3. மனிதவளம் தொடர்பான முறைப்பாடுகள்…………………………………………………45
3.13. தனியார் மருத்துவ நிறுவனங்களில் கட்டண ஒழுங்குபடுத்தல்…………………………..45
3.13.1. கட்டணங்கள் தொடர்பான கட்டளைகளை தயாரித்தல்……………………………………46
3.13.2. தனியார் துறையின் வைத்தியசாலை மற்றும் நிறுவனங்களில் நிபுணத்துவ சேவை, மருத்துவ சேவை மற்றும் அறுவை சிகிச்சைகளிற்கு திட்டவட்டமான கிரய முறைமையொன்றை தயாரித்து செயற்படுத்தும் நிகழ்சித் திட்டம் …………………..47
3.13.3. ஆய்வுகூட பரிசோதனைகளிற்காக அறவிடப்படும் கட்டண ஒழுங்குபடுத்தல்……………….47
3.13.4. உச்ச கட்டணங்களிற்கு முரணாக பணம் அறவிடும் போது தண்டப்பணம் விதித்தல்………………………………………………………………………..53
3.13.5. தனியார் சுகாதார சேவை ஒடுங்குபடுத்தல் சபையின் கட்டண அறவீட்டு உப குழு……...53
3.13.6. மருத்துகளிற்காக அறவிடப்படும் விலைகள் தொடர்பாக கவனம் செலுத்தாமை…………..53
3.14. தனியார் மருத்துவ நிறுவனங்கள் சுற்றாடல் சட்டங்களுடன் இணங்குதல்………………….54
3.15. தனியார் மருத்துவ நிறுவனங்களை தரப்படுத்தல்…………………………………………...57
3.16. தனியார் மருத்துவ நிறுவனங்கள் தொடர்பாக கிடைக்கப் பெறும் முறைப்பாடுகள்………..57
3.16.1. தனியார் மருத்துவ நிறுவனங்கள் தொடர்பாக கிடைக்கப் பெறும் முறைப்பாடுகளை தீர்த்தல் ……………………………………………………………………………57
3.16.2. முறைப்பாடுகள் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு…………………………………….59
3.16.3. முறைப்பாட்டு புலனாய்வு உப குழு………………………………………………………59
3.16.4. ஏனைய தரப்பினரால் முறைபாடுகள் விசாரணை செய்யப்படல்……………………………61
3.16.5. தனியார் மருத்துவ நிறுவனங்களில் பௌதீக வளங்கள் / இட வசதிகளை ஒழுங்குபடுத்தல் ……………………………………………………………………..62
3.17. தனியார் மருத்துவ நிறுவனங்கள் தொடர்பான தரவுத் தொகுதி……………………………62
3.18. தனியார் சுகாதார சேவை நிறுவனங்கள் அரச துறைக்கு ஆற்றும் பங்களிப்பை மதிப்பிடல் ..……………………………………………………………………………..64
3.19. தனியார் சுகாதாரத் துறை அபிவிருத்திப் (PHSD) பிரிவின் மற்றும தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையின் (PHSRD) நிறுவன கட்டமைப்பு…………………………………………………………………67
3.19.1. ஆளணியினர்…………………………………………………………………………67
3.19.2. நிதிய அமைவு…………………………………………………………………………68
3.19.3. சபையின் நிதி ரீதியான செயலாற்றுகை……………………………………………...70
4. கணக்காய்வு பரிந்துரைகள்………………………………………………..………72

1. நிறைவேற்று சாராம்சம்

உலக சுகாதார அமைப்பின் வரைவிளக்கணத்தின் பிரகாரம், சுகாதாரம் என்பது முழுமையான உடல் உல மற்றும் சமூக ஆரோக்கிய தன்மையொன்றாவதுடன் ஒரு நோய் அல்லது சில பலவீனங்கள் இல்லாதிருத்தல் மாத்திரம் ஆரோக்கியம் அல்லாததுடன் அன்றாட வாழ்கைக்கு அது வளமொன்றாவதுடன் சமூக மற்றும் தனிநபர் வளம் தொடர்பாக பகுத்தாயும் சார்பு எண்ணக்கருவாகும். இதன் காரணமாக உலகின் அனைத்து அரசாங்கங்களும் தனது மக்களின் சுகாதார நலனிற்காக அதிக முன்னுரிமை வழங்குகின்றன. ஆதிகாலம் தொட்டே அனைத்து இலங்கையர்களுக்கும் இலவச சுகாதார சேவை உரித்தாவதுடன் இது வரை அனைத்து அரசாங்கங்களும் மக்களின் சுகாதாரத்தை மேம்படுத்த கனிசமான பங்களிப்பை வழங்கிய காரணத்தால் 2022 ஆண்டில் தெற்காசியாவின் அனைத்து நாடுகளையும் மிகைத்து மனிதவள சுட்டியில் (Human Capital Index) 0.782 ஆன உயர் பெறுமானத்தை இலங்கை அடைந்து கொண்டிருந்தது.

இலங்கையில் இலவச சுகாதார சேவையொன்று நிறுவப்பட்ட போதும், தற்போது நாடு முழுவதும் தனியார் மருத்துவ நிறுவனங்கள் நிறுவப்பட்டு சுகாதாரத் துறைக்கு உயர்ந்த பங்களிப்பை வழங்கிவருகின்றன. இதன் காரணமாக பாராளுமன்றத்தினால் தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்தல், முறையாக்குதல், மேற்பார்வை செய்தல் மற்றும் பரிசோதிப்பதற்கான ஏற்பாடுகளை வழங்குவதற்காகவும், அந் நிறுவனங்களின் வளர்ச்சியை மேம்படுத்தவும், அதனுடன் தொடர்பான அல்லது இடை நேர்விளைவான அனைத்து விடயங்களிற்காகவும் ஏற்பாடுகளை வழங்குவதற்காகவும் சட்டமொன்றாக 2006 இன் 21 இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல்) சட்டத்தை அங்கீகரித்திருந்தது. அதன் பணிகளிற்காக 2007 ஆண்டு முதல் தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபை நிறுவப்பட்டிருந்ததுடன் தனியார் சுகாதார துறையின் அபிவிருத்திக்காக சுகாதார அமைச்சினால் தனியார் சுகாதார அபிவிருத்தி பிரிவு எனும் பெயரில் வேறான பிரவொன்றும் நிறுவப்பட்டுள்ளது.

அரச வைத்தியசாலை தொகுதியில் காணப்படும் நெரிசல், அறுவை சிகிச்சை மற்றும் பரிசோதனைகளிற்காக நீண்ட காலம் காத்திருப்பு பட்டியலில் இருக்க வேண்டியுள்ளமை, பொருளாதார நெருக்கடி காரணமாக அரசினால் சுகாதார துறைக்கு கூடிய பங்களிப்பை வழங்க முடியாதமை, தரத்தில் குறைந்த மருந்துகள் அரச வைத்தியசாலைகளில் பயன்படுத்தப்படுவதாக வெகுசன ஊடகங்களினூடாக பிரச்சாரம் செய்யப்பட்டமை போன்ற காரணங்களால் தனியார் துறைக்கு செல்லும் நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு காணப்பட்டன. அதற்கு ஒத்ததாக தனியார் மருத்துவ நிறுவனங்களிற்கு எதிராக முறைபாடுகள் கிடைப்பதில் அதிகரிப்பும் ஏற்பட்டுள்ளதால் தனியார் மருத்துவ நிறுவனங்கள் தொடர்பாக சட்ட பின்னணி, அவற்றின் செயற்பாடுகள் மற்றும் ஒழுங்குபடுத்தல் தொடர்பான குறித்த அரச நிறுவனங்களின் செயலாற்றலை மதிப்பீடு செய்வதற்காக இந்த செயலாற்றுகை கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

இங்கு இனங்காணப்பட்ட முக்கிய கணக்காய்வு அவதானிப்புக்களிற்கிடையே தனியார் சுகாதார துறையினை ஒழுங்குபடுத்துவது தொடர்பான பிரச்சினைகள் மற்றும் அவற்றை குறைத்துக் கொள்வதற்காக உத்தேச மூலோபாயம், தேசிய சுகாதார மூலோபாய பொது அபிவிருத்தி திட்டத்தில் (2016 - 2025) இனங்கண்டிருந்த போதும் அந்த மூலோபாயத்தை பின்பற்றி சுகாதார அமைச்சினால் சாதகமான முன்னேற்றமொன்றை அடைந்து கொள்ளாதமை, அதாவது தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபைக்கு உத்தியோகபூர்வமாக நியமிக்கப்படும் அங்கத்தவர்களின் எண்ணிக்கையை விட அமைச்சரினால் நியமிக்கப்படும் அங்கத்தவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதனூடாக இந்த சபையின் யாப்பு சவாலிற்குட்பட்டுள்ள காரணத்தால் 2006 இன் 21 இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்யும் சட்டத்தை திருத்தும் செயன்முறை சுகாதார அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ள போதும் சட்டத்தை திருத்த பொறுப்புவாய்ந்த தரப்பினரால் 2023 வரையும் நடவடிக்கை எடுத்திருக்காதமை, ஒழுங்குபடுத்தல் சபையின் மொத்த அங்கத்தவர்கள் 28 பேர்களில் 16 பேர்கள் அதாவது மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் 57 சதவீதம் விடயப் பொறுப்பு அமைச்சரினால் நியமிக்கப்பட்டுள்ளமை மற்றும் ஒழுங்குபடுத்தல் சபையின் கூட்டமொன்றின்

நிறைவெண் 07 பேர்களாக இருப்பதில் அந்த 16 அங்கத்தவர்களில் 07 பேர்கள் ஒன்றுகூடி சபை கூட்டமொன்றை நடாத்த மற்றும் தீரமானம் எடுக்கும் இயலுமை காணப்படல் மற்றும் ஒழுங்குபடுத்தல் சபையின் ஒழுங்குபடுத்தலிற்கு உட்படும் தனியார் சுகாதார நிறுவனங்களின் உரிமையாளர்கள் ஒழுங்குபடுத்தல் சபையின் அங்கத்தவர்களாக இருப்பதன் காரணமாக கடப்பாடு தொடர்பான பிரச்சினையொன்று (Conflict of Interest) காணப்படுவது அவதானிக்கப்பட்டது. அவ்வாறே சட்டத்தின் 11 ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் பணிகளை மேற்கொள்ள மற்றும் கடமைகளை மேற்கொள்வதற்காக தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையினால் 08 உப குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்ததுடன் இந்த உப குழுக்களினுள்ளும் மேற்குறித்த நிலைமைகள் அவதானிக்கப்பட்டன.

அவ்வாறே 2023 ஆண்டினுள் தனியார் சுகாதார ஒழுங்குபடுத்தல் சபையில் பதிவு செய்யப்பட்டிருந்த தனியார் வைத்தியசாலைகளின் எண்ணிக்கை 171 ஆன போதும் கட்டுப்பாட்டு சபைக்கு அங்கத்தவர்களை நியமிக்கும் போது தொடர்ந்தும் சில வைத்தியசாலைகளை மாத்திரம் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டுள்ளமை, 2006 இன் 21 இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல்) சட்டத்தின் பிரகாரம் அனைத்து தனியார் மருத்துவ நிறுவனங்களும் பதிவு செய்யப்பட வேண்டிய போதும் பதிவு செய்யப்பட வேண்டிய தனியார் மருத்துவ நிறுவனங்களை இனங்காண, பதிவு செய்ய மற்றும் பதிவு செய்யப்படாத நிறுவனங்கள் தொடர்பாக சட்டத்தின் 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளை செயற்படுத்த ஒழுங்கான முறைமையொன்றை ஒழுங்குபடுத்தல் சபை தயாரித்து செயற்படுத்தியிருக்காதமை, 2007 ஆண்டில் ஒழுங்குபடுத்தல் சபையினால் அறிமுகம் செய்யப்பட்ட பதிவுக் கட்டணம் 2023 ஆண்டு வரை திருத்தப்படாமை, சட்டத்தின் 13 பிரிவின் பிரகாரம் தனியார் மருத்துவ நிறுவனங்களை அங்கீகரிப்பதற்கான பிரமாணங்கள், உள்ளடங்கும் வசதிகள், சேவைகள் மற்றும் ஏதேனும் ஏனைய காரணிகள் உள்ளடங்களாக சபையின் அறிவுறுத்தல் மீது வர்த்தமானியில் வெளியிடப்படும் நியமமொன்றின் மூலம் செயற்படுத்த வேண்டிய போதும், அறிக்கையின் திகதி வரை இந்த கட்டளைகளை தயாரித்து அமுல்படுத்தாதமை அவதானிக்கப்பட்டது.

மேலும் அறிக்கை திகதி வரை தயாரித்து அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்து அமுல்படுத்த மற்றும் சட்டத்தின் கீழ் கட்டளைகளை தயாரிக்க அதிகாரம் கிடைத்துள்ள அநேக விடயங்கள் தொடர்பாக கட்டளைகளை தயாரிக்க நடவடிக்கை எடுத்திருக்காதமை ஒழுங்குபடுத்தல் சபையினால் விதிகளை தயாரித்து அமைச்சரினால் அங்கீகரித்து அரச வர்த்தமானியில் வெளியிட வேண்டிய எவ்வித விடங்கள் தொடர்பாகவும் அறிக்கை திகதி வரை விதிகளை தயாரித்து அமுல்படுத்தி இருக்காதமை அவதானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் சட்டம் செயற்படுத்தப்பட்டு 17 ஆண்டு காலம் கடந்துள்ள போதும், இதன் கட்டளைகள் மற்றும் விதிகளை தயாரித்து முறையாக அவற்றை அமுல்படுத்தியிருக்காதமை மற்றும் அதன் காரணமாக தனியார் சுகாதார சேவையினூடாக பொது மக்களிற்கு வினைத்திறனான சேவையை வழங்குவதாக உறுதி செய்யும் வகையில் ஒழுங்குபடுத்தும் பொறுப்பு சுகாதார அமைச்சினால் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படவில்லையென அவதானிக்கப்பட்டது.

தனியார் துறை வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களின் சேவைக்காக கட்டணங்களை தீர்மானிக்கும் போது அந்த மருத்துவ நிறுவனம் தரப்படுத்தப்படாது பொதுவான அடிப்படையில் உச்ச கட்டணத்தை தீர்மானித்தமைக்கு எதிராக தனியார் வைத்தியசாலைகளினால் வழக்கு தாக்கல் செய்து விலை கட்டுப்பாடொன்றிற்காக உடன்பாட்டை வெளியிடாத காரணத்தால் அறிக்கையின் திகதி வரை அவ்விடயம் தீர்க்கப்பட்டிருக்காததால், அவ்வாறே இந்த நிறுவனங்களிற்கு எதிராக தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபை, சுகாதார அமைச்சு மற்றும் அதன் அவசர சுற்றிவலைப்பு பிரிவிற்கு போன்றே நுகர்வோர் அதிகார சபைக்கு மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளமை மற்றும் தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபைக்கு கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பாக மற்றும் எடுக்கப்படும் தீர்மானங்கள் தொடர்பான பிரச்சினைகள் காணப்படுவதால் முறைப்பாடுகளிற்காக நியாயமான தீர்வு கிடைக்குமா என நிச்சமற்றதாக உள்ளமை, 2017

ஆண்டிலிருந்து 2023 ஜுன் 30 வரை நடாத்திய முறைப்பாடுகள் தொடர்பான உப குழுவிற்கு 99 சந்தர்ப்பங்களில் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகளிற்கிடையில் தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையின் கட்டுப்பாட்டுச் சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் நாட்டின் 09 முன்னோடி தனியார் வைத்தியசாலைகள் தொடர்பாக கிடைத்திருந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 51 அதாவது மொத்த முறைப்பாட்டு எண்ணிக்கையில் 52 சதவீதமானதுடன் இம் முறைப்பாடுகளிற்கு இடையில் நியாயமற்றதாக கட்டணம் அறவிடல், வைத்திய மற்றும் ஏனைய ஆளணியினர் தொடர்பான பிரச்சினைகள், சிகிச்சை அளித்தல் தொடர்பான குற்றச்சாட்டுகள், தொழிற்துறை நட்பண்புகள் தொடர்பான குற்றச்சாட்டுகள், நோயாளர்கள் மரணித்தல் தொடர்பான குற்றச்சாட்டுகள், சிறுநீரக வியாபாரம் தொடர்பான குற்றச்சாட்டுகள் காணப்படுவதனைப் போன்றே மனிதவள பற்றாக்குறையின் மீது தனியார் வைத்தியசாலைகள் அரச சுகாதார சேவைகளின் தொழிற்துறையினர்களின் மீது தங்கியுள்ளதன் காரணமாக அந்த தொழிற்துறையாளர்கள் கடமை நேரத்தினுள் அரச வைத்தியசாலைகளில் கடமையாற்றாது தனியார் வைத்திய மத்திய நிலையங்களினுள் கடமையாற்றுவது தொடர்பாக சுகாதார அமைச்சின் அவசர சுற்றிவலைப்பு அலகிற்கு 2019 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரையான 04 ஆண்டு காலப் பகுதியினுள் 72 முறைப்பாடுகள் கிடைத்திருந்தன.

அவ்வாறே தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையின் ஒரு பணியாக குறித்த சுகாதார தகல்கள் மற்றும் புள்ளிவிபரங்களை திரட்டுதல் மற்றும் வெளியிட வேண்டுமென சட்டத்தில் குறிப்பிட்டுள்ள போதும், தனியார் சுகாதார சேவை தொடர்பான தரவுகளை தேசிய தரவுத் தொகுதிக்குள் உட்படுத்தியிருக்கவில்லை. அவ்வாறே கம்பனி பதிவாளர் திணைக்களத்திடமும் நிறுவன குழுகள் பிரகாரம் பதிவுத் தரவுகளை பெற்றுக்கொள்ளும் செயல்முறையொன்று காணப்படாததுடன் தனியார் சுகாதார நிறுவனங்கள் தொடர்பான சரியான தரவுத் தொகுதியொன்று எந்தவொரு அரச நிறுவனத்திடமும் காணப்படாமை அவதானிக்கப்பட்டது.

தனியார் மருத்துவ நிறுவனம் / மத்திய நிலையங்களில் கழிவுகள் முறையாக வெளியிடல் / அழித்தல் தொடர்பான தீர்மானங்களை எடுத்தல் மற்றும் தற்காலிக அடிப்படையில் அந்த அந்த மாகாண சபைகளிற்கு கழிவுப் பொருட்களை வெளியிட தேவையான உபகரணங்களை (Insilarater Machine) வழங்குவது தொடர்பாக பரிந்துரைகளை சமர்ப்பிக்கும் நோக்கில் தொழிநுட்ப மதிப்பீடு மற்றும் கழிவுப் பொருள் முகாமைத்துவம் தொடர்பான உப குழு 2017 முதல் 2023 திசெம்பர் 31 வரை ஒன்றுகூடாதிருந்தமை, கடந்த 3 ஆண்டு காலத்தினுள் தனியார் சுகாதார சேவை நிறுவனங்களினால் சுற்றாடல் சட்ட திட்டங்களிற்கு மாற்றமாக செயற்படல் அதாவது பிணி ஆய் கழிவுகளை முறையாக வெளியிடாதது தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு கிடைத்திருந்த 19 முறைப்பாடுகளில் 10 முறைப்பாடுகள் அதாவது 52.6 சதவீதம் தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையின் கட்டுப்பாட்டு சபை அங்கத்தவர்கள் பிரதிநிதிப்படுத்தும் தனியார் வைத்தியசாலைகளாக காணப்பட்டமை போன்ற விடயங்கள் முக்கியமாக அவதானிக்கப்பட்டன.

இலங்கையினுள் நிறுவப்பட்டுள்ள தனியார் சுகாதார நிறுவனங்கள் தொடர்பாக நிலவும் இவ்வாறான குறைபாடுகளை குறைத்துக் கொள்வதற்காக தனியார் சுகாதார நிறுவன ஒழுங்குபடுத்தலிற்கான புதிய ஒழுங்குபடுத்தல் சட்டமொன்றை பாராளுமன்றத்தால் அங்கீகரித்தல் அல்லது காணப்படும் சட்டத்தில் குறிப்பிடப்படும் ஒரு நோக்கமான தனியார் மருத்துவ நிறுவனங்களின் வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கத்தை சட்ட நோக்கங்களிலிருந்து அகற்றி காணப்படும் சட்டத்தை தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தலிற்காக பொருத்தமான கட்டுப்பாட்டு சபையொன்றுடன் திருத்துவது, சட்டத்தினுள் குறிப்பிடப்படும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்கள் என்று திருத்தி ஒழுங்குபடுத்தல் நிறுவனத்தை மீள்திருத்துதல், சட்ட பிரகாரம் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்து அங்கீகரித்துக் கொள்ளல் மற்றும் விதிகளை தயாரித்து அவற்றை அமைச்சரினால் வர்த்தமானியில் வெளியிட்டு அமுல்படுத்தல், தனியார் மருத்துவ நிறுவனங்களிற்கு தேவையான பயிற்றப்பட்ட ஆளணியினர் உள்ளதனை உறுதி செய்து கொள்ளல் மற்றும் தொழிற் துறையாளர்களை ஆட்சேர்க்கும் போது தேசிய ஆட்சேர்ப்பு

பிரமாணங்களை பின்பற்றுவதனை உறுதி செய்ய வேண்டியமை, பல சேவைகளிற்கும் வைத்தியசாலை கட்டணம் தொடர்பாக நியமமொன்றை தயாரித்தல், தொழிற்துறை சார்ந்தவர்கள் மற்றும் நிறுவன ரீதியாக நட்பண்புகள் தொகுதியொன்றை பின்பற்றுவதனை வளர்த்து உறுதி செய்ய வேண்டியமை, தேசிய தகவல் தொகுதிக்கு தனியார் சுகாதார நிறுவனங்களிலிருந்து தகவல்கள் கிடைப்பதனை உறுதி செய்தல், தனியார் மருத்துவ மத்திய நிலையங்களை பிராந்திய மட்டத்தில் ஒழுங்குபடுத்துவதற்காக சுகாதார மருத்துவ அலுவலர் அலுவலகங்களின் சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலரொருவரின் ஒருங்கிணைப்பின் கீழ் நியமிக்கப்பட வேண்டியமை, கட்டண அறவீட்டு முறைமை தகவல்கள் தொடர்பாக வெளிப்படைத் தன்மையை உறுவாக்குதல் மற்றும் இத் தகவல்கள் தொகுதி குறித்து இணையத் தளத்தில் நாளாதுவரையாக்குவதன் ஊடாக அரச மற்றும் தனியார் எனும் இரண்டு துறைகளினதும் பங்களிப்புடன் நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் இலக்கம் 3 இன் கீழ் எதிர்பார்க்கப்படும் ஆரோக்கிய வாழ்வொன்றை உறுதி செய்தல் மற்றும் அனைத்து வயதினர்களினதும் நல்வாழ்வை மேம்படுத்துவதனை அடைந்து கொள்வதற்காக பரிந்துரைக்கப்படுகின்றன.

2. அறிமுகம்

2.1. பின்னணி

2.1.1. தனியார் சுகாதார சேவையின் ஆரம்பம் மற்றும் விரிவாக்கல்

தனியார் சுகாதார சேவையின் ஆரம்பம் இலங்கை சுதந்திரத்தை வெற்றி கொள்ள முன்னர் வெகு தூர கடந்த காலம் வரை செல்கின்ற ஒன்றாகும். அறிக்கையிடப்படும் தகவல்களின் பிரகாரம் இரண்டாம் உலக மகா யுத்தம் முடிவடைவதுடன் பிரித்தானிய அரசு இலங்கை மக்களிற்கு தனியார் மருத்துவ சேவையின் தேவைப்பாட்டை இனங்கண்டு காயமடைந்த படையினர் தங்கியிருந்த படையினர் வைத்தியசாலையை சுவீகரித்து சிலோன் ஹொஸ்பிடல் எனும் பெயரில் 1945 இல் நிறுவப்பட்ட வைத்தியசாலையானது தற்போது டேடன்ஸ் வைத்தியசாலை ஆகும். அவ்வாறே பராமரிப்பு சேவை மத்திய நிலையமெனும் பெயரில் நிறுவப்பட்ட மத்திய நிலைய ஒழுங்குபடுத்தலிற்காக 1949 இன் 16 இலக்கம் கொண்ட பராமரிப்பு சேவை இல்லம் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தையும் அறிமுகம் செய்திருந்தது. கொள்வனவு சக்தி உயர் நிலையில் காணப்பட்ட நடுத்தர பிரபூக்களின் சிகிச்சை முறைக்காக நிறுவப்பட்ட இந்த வைத்திய நிறுவனம் பிற்காலத்தில் 1977 திறந்த பொருளாதார முறையுடன் நாட்டின் முக்கிய நகரங்களை மையமாகக் கொண்டு அமையும் வகையில் ஆரம்பிக்கப்பட்டது. மிக உயர்தர வைத்திய உபகரணங்கள், கவர்ச்சியான பராமரிப்பு மற்றும் சேவைகள், வினைத்திறனான சேவைகளை வழங்கல் போன்ற விடயங்களின் மீது போன்றே மருத்துவ நடவடிக்கைகளிற்காக தனது வருமானத்திலிருந்து ஒரு பகுதியை அர்பணிப்பு செய்ய முடியுமான மக்கள் இந்த தனியார் வைத்தியசாலையை நோக்கி வருவதற்கு முற்பட்டனர்.

உலக வங்கியின் Human Development Network எனும் கருத்திட்டத்தின் கீழ் Health Care in Sri Lanka – What can the Private Health Sector Offer எனும் தலைபின் கீழ் 2014 இல் வெளியிடப்பட்ட கணிப்பீட்டு அறிக்கை பிரகாரம் 1977 ஆண்டின் பின்னர் அரச மருத்துவர்களிற்கு இரட்டை கடமை பயிற்சியில் (Dual Practice) ஈடுபட அங்கீகாரம் வழங்கப்பட்டவுடன் அரச வைத்தியசாலைகளில் நிலவிய அதிக நெரிசலின் முன்னால் சிகிச்சைக்காக நீண்ட வரிசைகளில் நின்ற மக்கள் படிப்படியாக இந்த வைத்தியசாலையை நோக்கி வர முற்பட்டனர். அவ்வாறே 2020 தேசிய சுகாதார தகவல் வெளியீட்டின் பிரகாரம் நாட்டில் காணப்பட்ட அரச வைத்தியசாலைகளின் எண்ணிக்கை 646 ஆனமை மற்றும் மக்கள் தொகையில் 100,000 இற்கு காணப்படும் வைத்தியர்களின் எண்ணிக்கை 98 உம், பல் மருத்துவ வைத்தியர்களின் எண்ணிக்கை 7 உம், தாதிகளின் எண்ணிக்கை 212 ஆகவும் காணப்பட்டமை மற்றும் சனத்தொகையில் 1,000 இற்கு காணப்படும் வைத்தியசாலை கட்டில்களின் எண்ணிக்கை 04 ஆன குறைந்த நிலையில் காணப்பட்டமை, விஷேட நிபுணத்துவ மருத்துவர்களிடம் சாதாரண சிகிச்சையை பெற்றுக் கொள்ளவும் பொது மக்கள் பழகியதுடன் இந்த மத்திய நிலைய விரிவாக்கல் வளர்ச்சியடைந்தது. அவ்வாறே அரச துறையால் வழங்கப்படும் சுகாதார சேவைகளின் பிரச்சினைகளினால் அல்லது மிகச் சிறந்த தரமான சிகிச்சை காரணமாக பொருளாதார சாத்தியப்பாடு இல்லாத குழுவினரும் தனியார் பிரிவின் சேவைகளை தேடுகின்றனர். தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையினால் கணக்காய்விற்கு வழங்கிய தகவல்களின் பிரகாரம் நிறுவனத்தில் பதிவு செய்திருந்த தனியார் மருத்துவ நிறுவனங்கள் தொடர்பாக சுருக்கமான குறிப்பு பின்வருமாறு.

தனியார் மருத்துவ நிறுவன வகை	2020	2021	2022	2023
தனியார் வைத்தியசாலை	107	131	162	171
மருத்துவ நிலையம்	154	154	183	261
ஏனைய மருத்துவ நிலையம்	51	65	66	149
தனியார் நோயாளர் வண்டி சேவை	8	8	10	12
முழுநேர நிபுணத்துவ மருத்துவ சேவை	2	3	02	03
பகுதிநேர நிபுணத்துவ மருத்துவ சேவை	4	3	03	06
முழுநேர பல் மருத்துவ சேவை	35	26	36	42
பகுதிநேர பல் மருத்துவ சேவை	24	14	19	45
முழுநேர சாதாரண மருந்துச்சாலை	157	133	111	152
பகுதிநேர சாதாரண மருந்துச்சாலை	276	219	204	430
தனியார் இரசாயணகூடம்	381	438	469	648
மொத்த கூட்டுத்தொகை	1199	1194	1265	1919

2.1.2. சுகாதார காப்புறுதி

(அ) ஆயுள் காப்புறுதி முறை / சுகாதார காப்புறுதி முறை

காப்புறுதியின் புதிய தடைதாண்டலாக ஆயுள் காப்புறுதி முறை / சுகாதார காப்புறுதி முறை அறிமுகம் செய்யப்பட்டதுடன் தனியார் துறை ஊழியர்களின் நலன்களை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறு காப்புறுதி மேவுகைகளின் கீழ் ஊழியர்களை காப்புறுதி செய்தல் எனும் விடயத்தின் மீது மருத்துவ உதவிகளை மீள்நிரப்பும் வசதி வழங்கப்பட்டதுடன் மக்கள் தனியார் மருத்துவ நிறுவனங்களிற்கு செல்லும் வேகம் அதிகரித்தது. 2017 ஆம் ஆண்டு வரை 11,893 ஆகவிருந்த சுகாதார காப்புறுதி உறுதிகளின் எண்ணிக்கை 2021 ஆண்டளவில் 31,380 வரை வளர்ந்துள்ளதில் இது உறுதியாகின்றது. இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் 2021 ஆண்டறிக்கையின் பிரகாரம் சாதாரண காப்புறுதி வியாபாரத்தின் இரண்டாம் இடத்தை பெற்றுள்ளது சுகாதார காப்புறுதி துறையானதில் இது மேலும் உறுதி செய்யப்படுகின்றது.

(ஆ) அக்ரஹார காப்புறுதி

அக்ரஹார காப்புறுதி உத்தேச முறை இலங்கையின் பெறிய மருத்துவ காப்புறுதி முறையாவதுடன் 2006 ஆண்டின் பின்னர் அரச ஊழியர்களிற்கான அக்ரஹார காப்புறுதி முறை அறிமுகம் செய்யப்பட்ட பின்னர் அதன் அங்கத்துவம் 845,000 இனைத் விஞ்சியுள்ளது. 2.3 மில்லியனிற்கு கிட்டிய இலங்கையர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் இதனூடாக மேவுகை செய்யப்படுகின்றன. இது பங்களிப்புத் தொகை செலுத்தும் முறையாவதுடன் ஓய்வூதியத்துடன் கூடிய அனைத்து அரச ஊழியர்களினது மாதாந்த பங்களிப்பு அறவிடப்படுகின்றது. அரை அரச ஊழியர்களிற்கும் இந்த அக்ரஹார காப்புறுதி முறை செயற்படுகின்றது. 2016 மே முதல் அறிமுகம் செய்யப்பட்ட அக்ரஹார ஓய்வூதிய காப்புறுதி உத்தேச முறைக்காகவும் அதிக கேள்வி காணப்படுவதுடன் இதன் பிரகாரம் சேவையில் ஈடுபட்டுள்ள அரச ஊழியர்கள் மற்றும் ஓய்வு பெற்ற அரச ஊழியர்கள் சிகிச்சைக்காக தனியார் மருத்துவ நிறுவனங்களிற்கு செல்லும் வேகம் அதிகரித்தது. 2022 ஆண்டில் அக்ரஹார உரிமை செலுத்திய விபரம் பின்வருமாறு.

	உரிமை வகை	செலுத்தப்பட்ட உரிமைகளின் எண்ணிக்கை	உரிமைகளின் பெறுமதி (ரூபா மில்லியன்)
	---------------------	--------------------------	-----------------------
முழு அரச உரிமை செலுத்துதல்			
1	தனியார் வைத்தியசாலையில் தங்குதல்	15,479	1,286.68
2	அரச வைத்தியசாலையில் தங்குதல்	58,775	750.46
அரை அரச உரிமை செலுத்துதல்			
1	தனியார் வைத்தியசாலையில் தங்குதல்	1,764	158.21
2	அரச வைத்தியசாலையில் தங்குதல்	1,968	24.43
ஓய்வூதிய அரச உரிமை செலுத்துதல்			
1	தனியார் வைத்தியசாலையில் தங்குதல்	1,450	66.46
2	அரச வைத்தியசாலையில் தங்குதல்	1,158	7.02







(மூலாதாரம் - அக்ரஹார காப்புறுதி நிதியத்தில் 2023 ஆகஸ்ட் 23 திகதியன்று உத்தியோகபூர்வ இனையம்)

2.2. தனியார் சுகாதார பிரிவின் பலம் மற்றும் பலவீனங்கள்

தேசிய மூலோபாய மொத்த அபிவிருத்தி திட்டத்தின் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு தனியார் சுகாதார பிரிவின் உட்கட்டமைப்பு வசதிகள் பாரிய அளவிலானதாகுமெனவும், அதற்காக ரூபா மில்லியன் அளவில் முதலீடு செய்யப்பட்டுள்ளதாகவும், எவ்வாறாயினும், அநேக வசதிகள் மற்றும் உயர் தொழிநுட்ப உபகரணங்கள் மற்றும் தொழிநுட்ப வசதிகள் காணப்பட்ட போதும் அதற்கு சமமான மனிதவளங்களின் பற்றாக்குறை, அதாவது அரச துறை சுகாதார சேவைகளில் ஈடுபட்டுள்ள சுகாதார சேவை தொழிலாளர்கள் மீது அந்த வைத்தியசாலைகளின் நடவடிக்கைகள் தங்கியுள்ள காரணத்தால் அதிக தடைகளிற்கு முகங்கொடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறே தனியார் சுகாதார பிரிவின் கேள்வியை பூர்த்தி செய்ய மனிதவளத்தை அபிவிருத்தி செய்ய வேண்டுமெனவும் குறிப்பிட்டுள்ளதுடன் இப் துறையின் பணிக்கூற்றாக தனியார் சுகாதார நிறுவனங்களை பதிவு செய்வதனை முறையாக்குதல், நியமம் மற்றும் வழிகாட்டல்களை தயாரித்தல், மனிதவள அபிவிருத்திக்கான தொழிநுட்ப வழிகாட்டல் மற்றும் உதவிகளை வழங்குவதனூடாக தனியார் சுகாதார பிரிவின் செயற்பாட்டை வளர்த்தல் ஆகிய விடயங்களும் இந்த அபிவிருத்தி திட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் தனியார் சுகாதார பிரிவினால் வழங்கப்படும் சுகாதார சேவைகளின் தரத்திற்கு 24 மனிநேரமும் தகைமையுடைய பயிற்றப்பட்ட ஆளணியினர் போதாமை அதிக சவாலாக உள்ளதாகவும், நிதிரீதியான நலன்கள் காரணமாக தனியார் பிரிவின் சுகாதார நிறுவனங்களிற்கு கூடிய கவனம் செலுத்துவதால் அரச பிரிவின் ஊடாக சுகாதார சேவைகளை வழங்கும் தரத்திற்கு தடை ஏற்பட முடியுமெனவும், தனியார் சுகாதார பிரிவின் கேள்விக்கு பொருந்தும் வகையில் ஆரம்ப

கல்வி பாடநெறி மற்றும் புதிய பாடநெறி / தாதி மற்றும் தாதி உதவித் துறையின் வெற்றிடங்களை நிரப்பும் பாடநெறிகளை செயற்படுத்துவதாகவும், பல் அறுவை சிகிச்சை உதவியாளர்களிற்காக ஆரம்ப பாடநெறி மற்றும் புதிய / வெற்றிடங்களை நிரப்பும் பாடநெறி ஒற்றையும் நடாத்திக் கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய சுகாதார மூலோபாய மொத்த திட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தனியார் சுகாதார துறையினால் அறவிடப்படும் அதிக கட்டணம் தொடர்பாக கடந்த காலம் முதல் விவாதத்திற்கு உட்பட்டுள்ளதாகவும், தனியார் வைத்திசாலை, சுகாதார தொழில் துறையினர் மற்றும் தனியார் மருத்துவ ஆய்வுகூடங்களும் கூட அதிக பணம் அறவிடப்படுவது தொடர்பாக தனி நபர் நோயாளிகள் மற்றும் உறவினர்கள், சமுதாய குழுக்கள், நோயாளர்களிம் உரிமை அமைப்பு, ஊடகவியலாளர்கள், தொழிற்துறை குழுக்கள் மற்றும் அரசியல் வாதிகள் குரல் கொடுக்க ஆரம்பித்ததுடன் பொது மக்கள் தேவைப்பாடு உருவாகியுள்ளதாகவும், தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபை குறித்த தரப்பினரின் அதிக ஆலோசனையுடன் நிலைமையை நன்றாக பகுப்பாய்வு செய்து உடனடியாக பதில் வழங்கியதுடன் நிபுணத்துவ ஆலோசனைக்காக உச்ச கட்டணம் மற்றும் நிபுணத்துவ ஆலோசனைக்காக நிர்வாக கட்டணத்தை அபிவிருத்தி செய்ய ஆரம்பித்துள்ளதாகவும், இரண்டாவதாக, பாரியளவிலான ஆய்வுகூடங்கள் போன்ற நடுத்தர மற்றும் சிறியளவிலான ஆய்வுகூடங்களிற்காக அதிகமாக மேற்கொள்ளும் 33 மருத்துவ ஆய்வுகூட பரிசோதனைகளிற்காக உச்ச கட்டணத்தை நியமிப்பதற்கு தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபை ஆர்வம் எடுத்ததாகவும், தனியார் வைத்தியசாலை, செனலிங் நிலையங்கள் மற்றும் தனியார் மருத்துவ ஆய்வுகூட உச்ச கட்டணத்தை விஞ்சக் கூடாதென கோரியதுடன் அவ்வாறு செய்ய தேவை எனின் குறைந்த தொகை ஒன்றை அறவிட முடியுமெனவும், ஏனைய நானாவித நடைமுறைகளிற்காக கட்டணம் அபிவிருத்தி செய்து கொண்டிருப்பதாகவும், நுகர்வோர் அதிகாரசபை (CAA) உம் வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை வெளியிட்டுள்ளதுடன், நுகர்வோர் உரிமை தொடர்பில் கூடிய கவனம் செலுத்தும் நுகர்வோர்களிற்காக விரிவான பட்டியலொன்றை வழங்குமாறு தனியார் மருத்துவ பிரிவிற்கு அறிவித்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2.3 ஒழுங்குபத்தல்

அரச துறை சுகாதார சேவையை ஒழுங்குபடுத்தல் சுகாதார அமைச்சு, மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகம், பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகம் மற்றும் சுகாதார மருத்துவ அலுவலர் அலுவலகத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வாறே தனியார் சுகாதார சேவை அபிவிருத்திக்காக சுகாதார அமைச்சினால் பணிப்பாளர் ஒருவரின் தலைமையுடன் கூடிய வேறான பிரிவொன்று தனியார் சுகாதார அபிவிருத்தி பிரிவு எனும் பெயரில் அமைக்கப்பட்டுள்ளது. அவ்வாறே தனியார் மருத்துவ நிறுவனங்களை ஒழுங்குபடுத்த தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபை எனும் பெயரில் வேறான அரை அரச நிறுவனமொன்று 2006 இன் 21 இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்யும்) சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபை (Private Health Service Regulatory Council) என்பது 2006 ஜுலை 14 ஆம் திகதி உறுதி செய்யப்பட்ட 2006 இன் 21 இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல்) சட்டத்தின் கீழ் அவ்வாறு வெளியிடப்பட்ட, கடமைகள் மற்றும் பணிகளை செயற்படுத்துதல் மற்றும் மேற்கொள்வதற்காக அமைக்கப்பட்டுள்ள ஒழுங்குபடுத்தல் சபையொன்றாகும்.

இச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் பிரகாரம் ''தனியார் மருத்துவ நிறுவனம்'' என்பதால், ஏதேனும் நோயினால், காயத்தினால் அல்லது உடற்பலவீனத்தினால் பீடிக்கப்பட்டுள்ள ஆட்களை ஏற்றல் மற்றும் அந்த ஆட்களிற்கு மருத்துவ மற்றும் பராமரிப்பு சேவை மற்றும் மருத்துவ சிகிச்சை வழங்குவதற்காக பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்த எண்ணியுள்ள ஏதேனும் ஒரு நிறுவனம் அல்லது நிலையமொன்று, வைத்தியசாலை ஒன்றும், பராமரிப்பு இல்லமொன்றும், மகப்பேற்று மனையொன்றும், மருத்துவ ஆய்வுகூடமொன்றும், இரத்த வங்கியொன்றும், பல்

அறுவை மருத்துவ நிலையமொன்றும், மருந்துச் சாலையொன்றும் மற்றும் அறுவை மருத்துவ நிலையமொன்றும், நோயாளர்களை பரிசோதிக்கும் நிலையமொன்றும் மற்றும் சுகாதா பரிசோதனை சேவை அல்லது சுகாதார மேம்படுத்தல் சேவையை வழங்கும் நிறுவனமொன்றும் கருதப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் பொது மக்களிற்கு பாதுகாப்பான மற்றும் வினைத்திறனான மருத்துவ சேவையை வழங்குவது தொடர்பில் தனியார் மருத்துவ நிறுவனத்தினூடாக மருத்துவ சேவைகளை வழங்குவது தொடர்பாக தேசிய கொள்கையொன்றை தயாரித்தல் மற்றும் அதன் நோக்கத்தை அடைந்து கொள்ளும் பொருட்டு அந்த சேவைகளை வழங்க வேண்டிய முறையை இனங்காண்பது அரசாங்கத்தின் தேவைப்பாடொன்றாக ஆகியுள்ளதால் 2006 இன் 21 இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல்) சட்டத்தின் மூலம் தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்தல், முறையாக்குதல், மேற்பார்வை செய்தல் மற்றும் பரிட்சிப்பதற்கான ஏற்பாடுகளை செய்தல் மற்றும் தனியார் மருத்துவ நிறுவனங்களின் வளர்ச்சியை மேம்படுத்த மற்றும் அதனுடன் தொடர்புடைய அல்லது இடைநேர் விளைவான அனைத்து விடயங்களிற்காகவும் ஏற்பாடுகளை செய்தல்.

தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபை, பதிவு செய்யப்பட்ட தனியார் மருத்துவ நிறுவனங்களினால் பேணிச் செல்ல வேண்டிய நியமங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் மேற்பார்வை செய்தலை நோக்காகக் கொண்டுள்ளதுடன் அவ்வாறான தனியார் மருத்துவ நிறுவனங்களினால் பேணிச் செல்லப்படும் நியமங்களை மதிப்பீடு செய்யும் முறையொன்றாக செயற்படுகின்றது. ஊழியர்களை ஆட்சேர்க்கும் போது ஆட்சேர்ப்பதற்கான குறைந்தபட்ச தகைமைகளை உறுதி செய்தல் மற்றும் ஆட்களை பயிற்றுவிக்கும் குறைந்தபட்ச நியமங்களை அனைத்து தனியார் மருத்துவ நிறுவனங்களினாலும் பின்பற்றுவதனை உறுதி செய்தல் மற்றும் அந்த தனியார் மருத்துவ நிறுவனம் மூலம் வழங்கப்படும் நோயாளர் பராமரிப்பு சேவையின் தரத்தை உறுதி செய்வது மேலும் அச் சபையின் நோக்காகும்.

அவ்வாறே தனியார் மருத்துவ நிறுவனங்களில் நோயாளர்களை கவனிப்பதற்காக தரத்தை உறுதி செய்யும் நிகழ்சித் திட்டங்களை முறையாக தயாரித்தல் மற்றும் அவற்றை மேற்பார்வை செய்தல் மற்றும் அச் சேவையில் ஈடுபட்டுள்ள அல்லது சேவையில் ஈடுபடுத்தியுள்ள அனைத்து ஆளணியனரையும் ஆட்சேர்ப்பதற்காக குறைந்தபட்ச நியமங்களை பேணிச் செல்கையில் அதிகாரம், கடமை மற்றும் பணிகளை சபையினால் நடைமுறைப்படுத்தல், குறித்த சுகாதார தகவல்களை மற்றும் புள்ளிவிபரங்களை திரட்டுதல் மற்றும் வெளியிடல் மற்றும் குறித்த தனியார் மருத்துவ நிறுவனங்களினால் வழங்கப்படும் வசதிகள் பிரகாரம் தரப்படுத்தும் முறைமையொன்றை நடைமுறைப்படுத்தல் மற்றும் நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக தேவைப்பட முடியுமான ஏனைய பணிகளை மேற்கொள்ளல் தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையின் பொறுப்பாகும். இங்கு கட்டுப்பாட்டு சபையின் உள்ளடக்கம் பின்வருமாறு.



2.4. காணக்காய்விற்கான அதிகாரம்

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பு சட்டத்தின் 154(1) அத்தியாயம் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது.

2.5. கணக்காய்வு பிரவேசம்

(அ) ஒரு நாட்டை அபிவிருத்தி செய்வதற்காக தேவையான மூலோபாய திட்டங்களில் உள்ளடங்க வேண்டியதாக இனங்காண முடியுமான அடிப்படை அம்சங்களிற்கிடையில் மனித மூலதனத்தை கட்டியெழுப்புதல் மற்றும் மக்களின் வாழ்கை நிலையை உயர்த்துதல் எனும் விடங்களை கவனத்திற் கொள்ளும் போது மக்களின் ஆரோக்கியம் மிக முக்கியமாவதுடன் அவ்வாறு இல்லாததன் மீது மேற்கொள்ள வேண்டியுள்ள சமூக செலவினம் நாட்டின் அபிவிருத்திக்கு தடையாக அமைய முடியும். அதன் பிரகாரம் கடந்த 15 ஆண்டு காலத்தினுள் இலங்கையின் தேசிய செலவின் சதவீதமாக சுகாதார துறைக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் தொடர்பான விபரம் பின்வருமாறு.

ஆண்டு	மொத்த தேசிய செலவு ரூபா மில்லியன்	சுகாதார செலவு ரூபா மில்லியன்	தேசிய செலவின் சதவீதமாக சுகாதார செலவு
2006		54,363	7.60
2007	713,145	63,464	7.20
2008	885,952	68,604	6.90
2009	996,126	67,448	3.90
2010	1,747,064	80,027	4.60
2011	1,751,113	82,179	4.20
2012	1,961,053	89,291	4.10
2013	2,192,234	120,346	4.90
2014	2,411,606	155,008	5.96
2015	2,601,723	181,122	5.65
2016	3,203,280	192,535	6.20
2017	3.106,443	206,182	5.94
2018	3,470,589	234,899	5.92
2019	3,970,636	262,436	6.44
2020	4,075,827	250,813	5.63
	4,457,390		

மூலாதாரம் - வருடாந்த சுகாதார புள்ளிவிபரம்

2006 ஆண்டு முதல் 2020 வரையான காலத்தினுள் இலங்கையில் சுகாதார செலவுகள் தொடர்பாக கவனிக்கும் போது தேசிய செலவில் சுகாதாரத்திற்காக செலவிடப்பட்ட தொகை ரூபா 54,363 மில்லியன் முதல் ரூபா 250,813 மில்லியன் வரை வளச்சியடைந்திருந்த போதும் தேசிய செலவின் சுகாதார செலவிற்காக செலவிட்ட தொகை சதவீதமாக 3.9 இற்கும் 7.6 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சளவில் காணப்பட்டது. அதாவது இந்த ஒப்பீட்டிற்காக பயன்படுத்திய ஆரம்ப ஆண்டில் அறிக்கையிடப்பட்ட உச்ச சதவீதம் காட்டப்பட்ட போதும் பின்னர் பாரியளவில் மாற்றமடைந்து குறைந்த சதவீதத்தை எடுத்திருந்தது. இதன் காரணமாக வைத்தியசாலைகளில் காணப்படும் சுகாதார வசதிகள் மற்றும் மருந்துகள் போதியதாக இல்லாத காரணத்தால் நோயாளர்கள் அரச துறை வைத்தியசாலைகளிலும் தனியார் துறை வைத்தியசாலைகளிற்கு செல்லும் போக்கு அதிகரித்திருந்தது.

விஷேடமாக கொள்வனவு சக்தியுள்ள மற்றும் இல்லாத இரு தரப்பினரும் தனியார் துறை வைத்தியசாலைகள் உள்ளிட்ட சேவை நிறுவனங்களில் சேவையை பெற்றுக் கொள்ளும் போக்கிற்கு ஒப்பாக பலதரப்பட்ட பிரச்சினைகள் / கஷ்டங்களிற்கு முகம் கொடுக்கும் போக்கும் காணப்பட்ட காரணத்தால் அரச துறையினால் மேற்கொண்டுள்ள ஒழுங்குபடுத்தல் செயன்முறை மூலம் இந்த பிரச்சினைகளை எந்தளவிற்கு குறைத்துக் கொள்ளும் இயலுமை கிடைத்துள்ளது என ஆய்வு ரீதியாக பார்க்க வேண்டிய தேவை எழுந்துள்ளது.

(ஆ) தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையினால் 2017 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரை பதிவு செய்துள்ள தனியார் சுகாதார சேவை நிறுவனங்கள் முறையே 1114, 1395, 1502, 1199, 1194 மற்றும் 1919 ஆனது. அதன் பிரகாரம் 2017 ஆண்டு பதிவு செய்துள்ள தனியார் சுகாதார சேவை நிறுவனங்கள் 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் படிப்படியாக அதிகரித்து 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் குறைவடைந்து மீண்டும் 2023 அளவில் அதிகரித்திருந்தது. எனினும் நாடு முழுவதும் தனியார் சுகாதார சேவையை வழங்கும் தனியார் மருத்துவ நிறுவனங்களின் எண்ணிக்கை 6,000 இற்கும் அதிக எண்ணிக்கையில் வளர்ச்சி அடைந்திருந்த போதும் உரிய ஒழுங்குபடுத்தல் சட்டகத்திற்கு இணங்காததால் நோயாளர் மக்கள் மாத்திரம் அன்றி மொத்த சமுகத்திற்கும் சிற்சில

பிரச்சினைகள் ஏற்படுவதன் காரணமாக இந்த பிரச்சினை சுகாதார துறையிற்கு அப்பால் சென்று சிக்கலான சமூக, பொருளாதார பிரச்சினை ஒன்றாக ஆகியுள்ளது.

(இ) மக்களின் வாழ்கை நிலை / கொள்வனவு சக்தி உயர்வடைதல், தொற்றா நோய் ஏற்படும் அபாயம் அதிகரித்தல் மற்றும் தொற்று நோயாளர்கள் தொகை அதிகரிக்கும் காரணமாக நிவாரண சேவைக்காக செல்லும் நபர்கள் வேகமாக அதிகரித்து தனியார் சுகாதார சேவைக்காக செல்லுவதன் காரணமாக மக்களிற்கு தரமான சேவையை தனியார் சுகாதார துறையினால் மேற்கொள்ளும் போது பிரச்சினை எழுந்துள்ளமை.

(ஈ) 2006 இன் 21 இலக்க தனியார் மருத்துவ நிறுவன பதிவு செய்யும் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம், பதிவு செய்யப்பட்ட தனியார் மருத்துவ நிறுவனங்களினால் பேணிச் செல்ல வேண்டிய நியமங்களை அபிவிருத்தி செய்ய மற்றும் மேற்பார்வை செய்ய, தற்போது பின்பற்றிச் செல்லப்படும் நியமங்களை மதிப்பீடு செய்யும் முறையொன்றை செயற்படுத்த, ஊழியர்களை ஆட்சேர்க்கும் போது குறைந்த பட்ச தகைமையை பின்பற்றுவதாக உறுதி செய்ய மற்றும் ஊழியர்களை பயிற்றுவிக்கும் போது குறைந்த பட்ச நியமங்களை பின்பற்றுவதனை பொறுப்பேற்க மற்றும் பணிகளை மேற்கொள்வதற்காக ஒழுங்கான முறைமையொன்றை தயாரித்து செயற்படுத்த முடியாது இருந்ததாக வருடாந்த நிதிக்கூற்று கணக்காய்வின் போது வெளிபடுத்தப்பட்டுள்ளமை.
மேற்குறிப்பட்ட பிரச்சினைகள் இந்த செயலாற்றுகை கணக்காய்வினை மேற்கொள்ள பிரவேசத்தை வழங்கியது.

2.6. கணக்காய்வின் நோக்கம் மற்றும் பிரமாணங்கள்

முக்கிய கணக்காய்வு நோக்கங்கள்

இலங்கையினுள் அமைந்துள்ள தனியார் மருத்துவ நிறுவனங்கள் தொடர்பான சட்ட பின்னணி, அவற்றின் செயற்பாடுகள் மற்றும் ஒழுங்குபடுத்தல் செயன்முறையுடன் தொடர்புடைய குறித்த அரச நிறுவனங்களின் செயலாற்றுகையை மதிப்பிடல்.

உப கணக்காய்வு நோக்கங்கள் மற்றும் பிரமாணங்கள்

உப கணக்காய்வு நோக்கங்கள்			**பரிந்துரை**	**மூலாதாரம்**
2.6.1	தனியார் மருத்துவ நிறுவனங்கள் தொடர்பான சட்ட பின்னணி மற்றும் பதிவு செய்யும் செயன்முறையை மதிப்பிடல்	i.	இலங்கை தேசிய சுகாதார கொள்கை பிரகாரம் தனியார் மருத்துவ நிறுவனங்களை ஒழுங்குபடுத்த வேண்டியமை	இலங்கை தேசிய சுகாதார கொள்கை (2016 – 2025)
		ii.	தேசிய சுகாதார ஆய்வுகூட கொள்கை பிரகாரம் தனியார் மருத்துவ நிறுவனங்களின் ஆய்வுகூடங்களை ஒழுங்குபடுத்த வேண்டியமை	தேசிய சுகாதார ஆய்வுகூட கொள்கை (2006) (National Health Laboratory Policy)
		iii.	2006 இன் 21 இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல்) சட்டத்தின் கீழ் தனியார் மருத்துவ	2006 இன் 21 இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல்) சட்டம்

			நிறுவனங்களை பதிவு செய்ய வேண்டியமை	
		iv.	2007 மார்ச் 22 திகதிய அதிவிஷேட வர்த்தமானி இலக்கம் 1489/18 மூலம் பரிந்துரைத்துள்ள கட்டணத்தை அறவிட வேண்டியமை	2007 மார்ச் 22 திகதிய இலக்கம் 1489/18 கொண்ட அதிவிஷேட வர்த்தமானி
		v.	கட்டுப்பாட்டு சபை கூட்ட தீர்மானம் பிரகாரம் தனியார் மருத்துவ நிறுவனங்களை ஒழுங்குபடுத்த வேண்டியமை	தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையின் கட்டுப்பாட்டு சபை கூட்ட தீர்மானம்
2.6.2	தனியார் மருத்துவ நிறுவனங்களினால் நோயாளர்களிற்கு தரமான, நியாயமான மற்றும் திருப்திகரமான சேவை வழங்கப்படுகின்றதா என மற்றும் அவ்வாறு வழங்குவதற்காக குறித்த அரச நிறுவனங்கள் வழங்கும் பங்களிப்பை மதிப்பீடு செய்தல்	i.	2006 இன் 21 இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல்) சட்டத்தின் 10 (அ) முதல் (உ) வரையான பிரிவுகளின் கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை	2006 இன் 21 இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல்) சட்டம்
		ii.	2006 இன் 21 இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல்) சட்டத்தின் 18 பிரிவின் கீழ் கட்டளைகளை தயாரித்து செயற்படுத்தியுள்ளமை	2006 இன் 21 இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல்) சட்டம்
		iii.	சட்டத்தின் 19 பிரிவின் கீழ் கட்டளைகளை தயாரித்து செயற்படுத்தியுள்ளமை	2006 இன் 21 இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல்) சட்டம்
		iv.	இலங்கை தேசிய சுகாதார கொள்கை (2016 – 2025) பிரகாரம் தனியார் மருத்துவ சேவைகள் அரசினால் தொடர்ச்சியாக மேற்பார்வை செய்யப்பட வேண்டியதுடன் நோயாளர்களிற்கு உயர் நியமத்திலான சேவையை நியாயமான, தொகைக்கு வழங்கப்படுகின்றனவா என	இலங்கை தேசிய சுகாதார கொள்கை (2016 – 2025)

			உறுதி செய்ய வேண்டியமை.	
		v	ஒழுங்குபடுத்தல் சபையினால் வெளியிட்டுள்ள வழகாட்டல்களின் பிரகாரம் செயற்பட வேண்டியமை.	தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையினால் வெளியிட்டுள்ள வழிகாட்டல்கள்
2.6.3	சுகாதார நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தலிற்காக நிறுவனங்களிற்கு இடையிலுள்ள ஒருங்கிணைப்பு, பங்குபற்றல் மற்றும் தரவு மற்றும் தகவல்களை தனியார் சுகாதார சேவையினால் பேணிக் கொள்ளல் மற்றும் குறித்த பிரிவுகளிற்கு தொடர்பாடும் செயன்முறையை மதிப்பீடு செய்தல்	i.	இலங்கை தேசிய சுகாதார கொள்கை (2016 – 2025) பிரகாரம் நோயாளர்களின் உரிமைகளிற்கு கூடுதல் கவனம் செலுத்த வேண்டியதுடன் அனைத்து அரச மற்றும் தனியார் துறைகளில் வழங்கப்படும் சுகாதார வசதிகள் தொடர்பாக முறையாக நாளாதுவரை ஆக்கப்பட்ட தகவல்களை பெற்றுக் கொள்ள பொருத்தமான செயன்முறை ஒன்று அமைக்கப்பட்டுள்ளமை	இலங்கை தேசிய சுகாதார கொள்கை (2016 – 2025)
		ii.	2017 சுகாதார தகவல்கள் தொடர்பான தேசிய கொள்கையின் கொள்கை வெளியீடு இலக்கம் 2.2	2017 சுகாதார தகவல்கள் தொடர்பான தேசிய கொள்கை
		iii.	e-IMMR தகவல் தொகுதி மற்றும் பிராந்திய சுகாதார தகவல் தொகுதிக்கு தகவல்களை அறிக்கையிடும் செயன்முறை	e-IMMR தகவல் தொகுதி
		iv.	தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபைக்கு தரவுகள் / தகவல்களை அறிக்கையிடும் செயன்முறை	2006 இன் 21 இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல்) சட்டம்
2.6.4	தனியார் சுகாதார சேவை நிறுவனங்களினால் நாட்டின் சுகாதார சேவையை பேணிச் செல்வதற்காக அரச துறைக்கு நேரொத்ததாக வழங்கும்		தனியார் சுகாதார சேவை நிறுவனங்களினால் நாட்டின் சுகாதார சேவையை பேணிச் செல்வதற்காக போதிய	• ஆராய்ச்சி அறிக்கை • குறித்த நிறுவனங்களின் வருடாந்த அறிக்கை

பங்களிப்பை மதிப்பீடு செய்தல்	பங்களிப்பை வழங்குவது தொடர்பாக மதிப்பீடு செய்யும் செயன்முறை

2.7. கணக்காய்வு முறைமைகள்

பின்வரும் கணக்காய்வு முறைமைகளின் பால் செல்லப்பட்டன

(அ) தனியார் மருத்துவ நிறுவனங்கள் தொடர்பான சட்டப் பின்னணி தொடர்பாக ஆய்வு செய்தல் (தேசிய சுகாதார கொள்கை மற்றும் தேசிய பல்துறை செயலாற்றுகை திட்டம், குறித்த சட்டம், கட்டளைகள், வழிகாட்டல்கள், சுற்றறிக்கைகள்)

(ஆ) குறித்த அலுவலர்களுடன் கலந்துரையாடுதல்

(இ) தனியார் மருத்துவ நிறுவனங்கள் தொடர்பாக காணப்படும் தரவுகள் பற்றி ஆய்வு செய்தல்

(ஈ) தனியார் மருத்துவ நிறுவனங்கள் தொடர்பாக பல தரப்பினர்களிடமிருந்து கிடைத்துள்ள முறைப்பாடுகளின் பகுப்பாய்வு

(உ) மாகாண சுகாதார சேவை பணிப்பாளர்கள் ஊடாக தனியார் சுகாதார சேவை நிறுவனப் பதிவு மற்றும் மேற்பார்வை தொடர்பான தகவல்கள் பெறப்பட்டன.

(ஊ) பாவனையாளர் அலுவல்கள் தொடர்பான அதிகாரசபை, மத்திய சுற்றாடல் அதிகாரசபை, சுகாதார அமைச்சின் அவசர சுற்றிவலைப்பு அலகு ஆகிய நிறுவனங்களினாலும் தனியார் சுகாதார சேவை நிறுவனங்கள் தொடர்பான மக்கள் முறைப்பாட்டு தகவல்கள் பெறப்பட்டன.

(எ) தனியார் மருத்துவ நிறுவனங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி அறிக்கை ஆய்வுகள்.

(ஏ) தனியார் மருத்துவ நிறுவனங்கள் தொடர்பான உலக சுகாதார அமைப்பினால் வெளியிடப்பட்ட அறிக்கை ஆய்வுகள்.

2.8 கணக்காய்வு விடயப் பரப்பு

(அ) இலங்கையில் காணப்படும் தனியார் சுகாதார சேவை நிறுவன எண்ணிக்கை தொடர்பான சரியான தரவுகள் எந்தவொறு அரச நிறுவனத்திடமும் இல்லாததால் தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையினால் தற்போது பேணிச் செல்லும் தரவுகளின் அடிப்படையில் இந்த கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

(ஆ) இக் கணக்காய்விற்கு தனியார் பிரிவின் மூலம் பேணிச் செல்லும் மருந்தகங்கள் (Pharmacy) உள்ளடங்காததுடன் தனியார் வைத்தியசாலைகள் மூலம் வதிவிட நோயாளர்களிற்கு வழங்கும் மருந்துகள் தொடர்பாக கிடைத்துள்ள மக்கள் முறைப்பாடுகள் தொடர்பாக மாத்திரம் கவனத்திற் கொள்ளப்பட்டது

(இ) குறித்த பிரமாணங்கள் பிரகாரம் தனியார் சுகாதார சேவை நிறுவனங்களை ஆரம்பித்து மற்றும் பேணிச் செல்லப்படுகின்றனவா என்பது தொடர்பாக பௌதீக கணக்காய்வு பரிசோதனை ஒன்றை கணக்காய்வினால் மேற்கொள்ளாததுடன் அது தொடர்பாக பல தரப்பினர்களிடமிருந்து கிடைத்த மக்கள் முறைப்பாடுகளின் அடிப்படையில் கணக்காய்வு அவதானிப்புக்கள் கட்யெழுப்பப்பட்டன.

(ஈ) தனியார் சுகாதார சேவை நிறுவனங்களில் மனிதவளம் மீதான ஆரம்ப பயிற்சி தொடர்பாக மாத்திரம் கவனம் செலுத்தப்பட்டதுடன் அந்த ஊழியர்களின் தொழில் ரீதியான உரிமைகள் / சலுகைகள் தொடர்பாக இந்த கணக்காய்வின் போது கலந்துரையாடவில்லை.

2.9. கணக்காய்வு விடயப் பரப்பை மட்டுப்படுத்தல்

தனியார் சுகாதார சேவை நிறுவனங்களினால் நாட்டில் சுகாதார சேவையை பேணிச் செல்வதற்காக அரச துறைக்கு நேரொத்தத நிகழ்வாக வழங்கும் பங்களிப்பு தொடர்பாக சரியான தரவுத் தொகுதியொன்று இல்லாதுள்ளமை மற்றும் கணக்காய்வு சந்தர்ப்பம் வரை சுகாதார மருத்துவ அலுவலர் அலுவலக (MOH Office) மட்டத்தில் 2017 ஆண்டு முதல் மேற்கொள்ளப்படும் தொகை மதிப்பீட்டு நடவடிக்கைகள் பூர்த்தி அடையாததால் நாட்டில் தற்போது சுகாதார சேவைகளை நடாத்திச் செல்லும் தனியார் சுகாதார சேவை நிறுவனங்கள் தொடர்பான தரவுகள் மீது பூரண நம்பிக்கையை வைக்க முடியாதிருந்தது.

அவ்வாறே நாட்டினுள் காணப்படும் தனியார் சுகாதார சேவை நிறுவனங்களில் எழுமாறான மாதிரியொன்றை தெரிவு செய்து குறித்த மாகாண சுகாதார சேவை பணிப்பாளரினால் பெயரிடப்படும் பிரதிநிதி ஒருவருடன் சென்று கணக்காய்வு அலுவலர்களினால் பௌதீக பரீட்சிப்பினை மேற்கொண்டு குறித்த தனியார் சுகாதார சேவை நிறுவனம் உரியவாறு பதிவு செய்யப்பட்டுள்ளனவா என, பதிவு செய்யப்பட்ட தனியார் சுகாதார நிறுவனத்தினால் பதிவின் போது சமர்ப்பித்த தரவுகள் சரியானவையா என, பதிவு விண்ணப்பங்கள் பிரகாரம் குறித்த தனியார் சுகாதார சேவை நிறுவனத்தை பரிசோதித்து அரச அலுவலர்களினால் வழங்கியுள்ள உறுதிப்படுத்தல் சரியானதா என, தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையினால் வர்த்தமானியில் பிரசுரித்த கட்டளைகள் குறித்த தனியார் சுகாதார சேவை நிறுவனத்தினால் செயற்படுத்துகின்றனவா என மற்றும் குறித்த தனியார் சுகாதார சேவை நிறுவனங்களில் காணப்படும் ஏனைய குறைபாடுகளை இனங்காண கணக்காய்வினால் திட்டமிட்ட போதும் அந்த பரீட்சிப்பிற்காக தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையின் அங்கத்தவர் ஒருவரை போன்றே தனியார் வைத்தியசாலை மற்றும் பராமரிப்பு சேவை சங்கத்தின் தலைவராகவும் செயற்படும் தனியார் வைத்தியசாலை உரிமையாளர் ஒருவரினால் எதிர்ப்பு காட்டியதன் காரணமாக குறித்த பௌதீக கணக்காய்வு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டன. 2022 திசெம்பர் 08 திகதி இதற்காக சந்தர்ப்பத்தை வழங்குமாறு சுகாதார சேவை பணிப்பாளர் நாயகத்திடம் கோரிய போதும் இந்த அறிக்கை திகதி வரை அதற்கு சந்தர்ப்பம் வழங்காத காரணத்தால் குறித்த பௌதீக கணக்காய்வின் மூலம் பெற்றுக் கொள்ள திட்டமிட்ட உண்மையான தகவல்களை பெற்றுக் கொள்ள முடியவில்லை.

இக் கணக்காய்வு பரீட்சிப்பின் போது சுகாதார அமைச்சின் செயலாளரிடம் மற்றும் தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையின் தலைவரிடம் அவ்வப்போது கோரப்பட்ட தகவல்களை உரிய காலத்தினுள் வழங்கப்படாமை மற்றும் தேவையான தகவல்களை முழுமையாக மற்றும் கோரிய விதத்தில் சமர்பிக்காதமையும் மிகச் சரியான பகுப்பாய்விற்கு செல்ல தடையாக இருந்தது.

3. விரிவான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள்

3.1. சுகாதாரக் கொள்கை மற்றும் திட்டம்

3.1.1. தேசிய சுகாதாரக் கொள்கை

நிவாரண நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக சேவை வழங்களை வலுப்படுத்தல், அனைத்து இலங்கை பிரசைகளுக்கும் உயர் தரத்திலான பொருத்தமான அனைவருக்கும் பெற்றுக் கொள்ள முடியுமான நோயாளர் சிகிச்சை சேவையொன்றை வழங்குதல், தரமான மறுசீரமைப்பு பராமரிப்பு சேவையொன்றிற்கான நியாயமாக பிரவேசத்தை மேம்படுத்தல், தொடர்ச்சியான சுகாதார சேவையை வழங்கும் செயன்முறையொன்றை வலுவூட்டல், தொடர்ச்சியான சுகாதார சேவை ஒன்றை வழங்கும் செயன்முறையொன்றை வலுவூட்டுவதற்காக சேவை வழங்கல் தரவுகளை அடிப்படையாகக் கொண்ட திட்டமிடல் செயன்முறையொன்றை அமைத்தல், நோயாளர்களுக்கு தனிப்பட்ட முறையில் பணம் செலவிட நேரிடும் சந்தர்ப்பங்களை குறைத்தல், மனிதவள முகாமைத்துவம் உள்ளடங்களாக மிகச் சிறந்த மீள்கட்டமைப்பின் மூலம் விரிவான தொகுதியொன்றை பாதுகாத்தல், அனைத்து சுகாதார பராமரிப்பு சேவை வழங்குனர்களுடன் செயல் உபாயத்துடன் பங்குடமையை கட்டியெழுப்புதல் எனும் முக்கிய கொள்கை ரீதியான இயக்கத்தை இனங்கண்டு பத்தாண்டு காலத்திற்காக 2017 ஜுன் 25 திகதி சுகாதார போசாக்கு மற்றும் உள்நாட்டு மருத்துவ அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட இலக்கம் 17/1366/718/084 கொண்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் (2016 – 2025) அறிமுகப்படுத்தி இருந்த இலங்கையில் தேசிய சுகாதார கொள்கையை சனாதிபதி அவர்களின் பரிந்துரையுடன் 2017 ஜுலை மாதம் 18 திகதி நடாத்தப்பட்ட அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

எமது கணக்காய்வு விடயப் பரப்பிற்குரியதாக இந்த கொள்கையினுள் நோயாளர்களிற்கு சிகிச்சை பெற்றுக் கொள்வதற்காக அவர்களின் பணத்தை தனிப்பட்ட முறையில் செலவிட நேரிடல், அதாவது நோயாளர்களின் நிதிரீதியான ஆபத்தை குறைத்துக் கொள்வதற்காக புதிய மூலோபாயங்களை மேம்படுத்தல் மற்றும் தரமான சேவையை உறுதி செய்தல் மற்றும் நிதிரீதியான ஆபத்திலிருந்து நோயாளர்களை பாதுகாக்க தனியார் சுகாதாரப் பிரிவை ஒழுங்குபடுத்தல் எனும் விடயங்கள் இனங்காணப்பட்டிருந்தன.

3.1.2. சுகாதார பொதுத் திட்டம் (2016–2025) (Health Master Plan)

மேற்குறிப்பிட்ட இலங்கை தேசிய சுகாதாரக் கொள்கை 2016–2025 மற்றும் அதற்குரிய சுகாதார பொதுத் திட்டம் (2016 – 2025) (Health Master Plan) சனாதிபதி அவர்களின் பரிந்துரையுடன் 2017 ஜுலை 18 திகதி நடந்த அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இந்த சுகாதார பொதுத் திட்டத்தில் நிவாரண சேவை (Curative Servicee) பிரிவில் இலக்கம் 2.8 தேமடிக் அடிப்படை பிரிவில் (Thematic Area) ஒழுங்குபடுத்தப்படாத தனியார் சுகாதார பிரிவு தொடர்பான பிரச்சினை மற்றும் உத்தேச மூலோபாயம் பின்வருமாறு இனங்காணப்பட்டிருந்தன.

தொடர்பு இலக்கம் -----------	**இனங்காணப்பட்ட பிரச்சினை** ------------------------------------	**உத்தேச மூலோபாயம்** -------------------------------
2.8.1	மனிதவளம் - முழுநேர வைத்தியர்கள், பயிற்றப்பட்ட தாதிகள் மற்றும் ஏனைய குழுக்களின் பற்றாக்குறை	முழுநேர வைத்தியர்கள், பயிற்றப்பட்ட தாதிகள் மற்றும் ஏனைய குழுக்களின் சேவையை பெற்றுக் கொள்ள முடியுமென உறுதி செய்தல்.
2.8.2	போதிய அல்லாத மற்றும் பொருத்தமற்ற ஒழுங்குபடுத்தல் பொறிமுறை	➢ ஒழுங்குபடுத்தல் பொறிமுறையை வலுப்படுத்தல். ➢ ஏனைய சேவைகளிற்கான வைத்தியசாலை கட்டணம் தொடர்பான உடன்பாடுகளை தயாரித்தல்.

2.8.3	ஒழுங்குபடுத்தல் நிறுவனம் தீர்மானம் எடுக்கும் போது பக்கச் சார்பாகும் பிரமாணங்கள் காணப்படுகின்றமை.	ஒழுங்குபடுத்தல் நிறுவனத்தை மீள் ஒழுங்கமைத்தல்.
2.8.4	தொழில்சார் மற்றும் நிறுவன நட்பண்புகள் பேணப்படாமை.	➢ தொழிலாளர்கள் மற்றும் நிறுவன ரீதியாக நட்பண்பு தொகுதியொன்றை பின்பற்றுவதனை வளர்த்து உறுதி செய்ய வேண்டியமை. ➢ தொழிலாளர்களை ஆட்சேர்க்கும் போது தேசிய ஆட்சேர்ப்பு பிரமாணங்களை பின்பற்றுவதனை உறுதி செய்ய வேண்டியமை.
2.8.5	தனியார் பிரிவு தகவல்கள் இல்லாதிருந்தல்	தேசிய தகவல் தொகுதிக்கு தகவல்கள் கிடைப்பதனை உறுதி செய்தல்.
2.8.6	தனியார் பிரிவனரால் தேசிய வழிகாட்டல்களை செயற்படுத்தாமை	தேசிய வழிகாட்டல்களை மற்றும் சிகிச்சை முகாமைத்துவத்தை பின்பற்றுவதனை உறுதி செய்தல்.
2.8.7	பொதுவான சிகிச்சை முறைக்காக (General Practise) நிபுணத்துவ காலத்தை வீணாக்குதல்.	➢ பொது மக்களின் அறிவை வளர்த்தல். ➢ செலுத்தற் தொகுதிய மேம்படுத்தல். ➢ பொதுவான சிகிச்சை முறையை (General Practise) இணங்காணப்பட்ட மக்கள் தொகையுடன் தொடர்புபடுத்தல்.

மேற்படி தனியார் சுகாதார பிரிவை ஒழுங்குபடுத்துதல் தொடர்பான பிரச்சினைகளை குறைத்துக் கொள்ள உத்தேச மூலோபயமும் 2016 ஆண்டளவில் இனங்காணப்பட்டிருந்த போதும் அந்த மூலோபாயத்தை பின்பற்றி சுகாதார அமைச்சினால் சாதகமான முன்னேற்றத்தை அடைந்து கொள்ளாமை தொடர்பாக கணக்காய்வு அவதானிப்பு எதிர்வரும் பந்திகளில் கலந்துரையாடப்படுகின்றன.

3.1.3. தேசிய சுகாதார மூலோபாய பொது அபிவிருத்தி திட்டம் (National Health Strategic Master Plan) 2016 – 2025

தேசிய சுகாதார கொள்கை 2016 – 2025 உடன் தொடர்பான தேசிய சுகாதார மூலோபாய பொது அபிவிருத்தி திட்டம் (National Health Strategic Master Plan) 2016 – 2025 இன் நிவாரண சேவை (Curative Service) பிரிவில் தனியார் சுகாதார பிரிவின் ஒழுங்குபடுத்தல் அபிவிருத்தி மற்றும் வலுப்படுத்தல் தொடர்பான நிகழ்சித் திட்டத்தின் கீழ் மையப்படுத்திய அறிகுறியாக தனியார் சுகாதார பிரிவு அபிவிருத்தியை பணிப்பாளர் சபையின் கீழ் அரச மற்றும் விஷேடமாக சுகாதார அமைச்சின் எதிர்பார்ப்பாவது தனியார் சுகாதார பிரிவும் தமது சேவை பெறுனரிற்கு தரமான வினைத்திரனான மற்றும் பாதுகாப்பான சுகாதார சேவையை வழங்குவதாகும். இதன் பிரகாரம், சுகாதார அமைச்சு நாட்டு மக்கள் மீதான தனது பொறுப்பை இனங்கண்டு தனியார் சுகாதார பிரிவின் அபிவிருத்திக்கு மற்றும் பிரமாணங்களிற்கான பொறிமுறையொன்றை அமைத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளது. அவ்வாறே இப் பொறுப்பை மேற்கொள்வதற்காக தனியார் சுகாதார பிரிவின் அபிவிருத்தி சபை முதன் முறையாக 1998 இல் அமைக்கப்பட்டதாகவும், 2006 இன் 21 இலக்கம் கொண்ட தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல்) சட்டத்தை அறிமுகப்படுத்தி 2006 திசெம்பர் 15 இலிருந்து

செயற்படுத்தியதாகவும், தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தும் சபை 2006 ஆண்டு முதல் அதன் அதிகாரம், கடமை மற்றும் பணிகளை செயற்படுத்துதல் மற்றும் மேற்கொள்வதற்காக அமைக்கப்பட்டுள்ள நிறுவனமெனவும், பதிவு செய்த தனியார் மருத்தவ நிறுவனங்களின் மூலம் மற்றும் அவர்களினால் பேணிச் செல்லப்படும் நியமங்களை மதிப்பீடு செய்யும் முறையொன்றாக செயற்படுத்துவதாகவும், ஆட்சேர்ப்பதற்காக குறைந்தபட்ச தகைமையை உறுதி செய்தல் மற்றும் பயிற்றுவிக்கும் குறைந்தபட்ச நியமங்கள் அனைத்து தனியார் மருத்தவ நிறுவனங்களினாலும் அங்கீகரித்துக் கொள்ளல் மற்றும் நோயாளர் பராமரிப்பு சேவைகளில் தரத்தை உறுதி செய்யும் நோக்கத்தை அடைந்து கொள்ளல் அதன் மேலும் நோக்கமாகுமென குறிப்பிடப்பட்டிருந்தது.

மேலும் இந்த **மூலோபாய பொது அபிவிருத்தி திட்டத்தின்** இந்தப் பிரிவு தொடர்பாக இலக்கு வைக்கப்பட்ட பகுதியாக தனியார் சுகாதார பிரிவின் ஒழுங்குபடுத்தல் பொறிமுறையை பலப்படுத்தல், தனியார் சுகாதார பிரிவின் கோரிக்கையை நிவர்த்திப்பதற்காக மனிதவள அபிவிருத்தி, தனியார் சுகாதார பிரிவினால் தேசிய வழிகாட்டி மற்றும் சிகிச்சை செயன்முறையை (புரொடோகோள்) பின்பற்றுதல், தனியார் சுகாதார பிரிவிலிருந்து தேசிய தரவுத் தொகுதிக்கு சுகாதார தகவல்களை பெற்றுக் கொள்ளல், பொதுவான சிகிச்சை அளிக்கும் (General Practice) முறையை விதிக்கப்பட்ட மக்கள் தொகையுடன் தொடர்புபட்டு உரியவாறு குறித்தனுப்பும் மற்றும் மீள் அனுப்பும் தொகுதியொன்றை அபிவிருத்தி செய்தல் எனும் விடயங்கள் மற்றும் மேலும் விடயங்கள் காட்டப்பட்டிருந்ததுடன் இந்த விடயம் தொடர்பாக கவனம் செலுத்தாத சந்தர்ப்பங்கள் / போதியளவில் கவனம் செலுத்தாத சந்தர்ப்பங்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்களும் இந்த அறிக்கையின் பந்தி இலக்கம் 3.2 முதல் 3.19 வரை முன்வைக்கப்பட்டுள்ளன.

3.2. 2006 இன் 21 இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல்) சட்டம்

3.2.1. சட்டத்தை அங்கீகரிப்பதன் நோக்கம்

தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்தல், முறையாக்குதல், மேற்பார்வை செய்தல் மற்றும் பரிசோதிப்பதற்கான ஏற்பாடுகளை வழங்குவதற்காகவும் அந்த நிறுவனங்களின் வளர்ச்சியை மேம்படுத்துவதற்காகவும், அதனுடன் தொடர்புடைய அல்லது இடை நேர் விளைவான அனைத்து விடயங்களிற்காகவும் ஏற்பாடுகளை வழங்க இந்த சட்டம் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. சட்டத்தின் முன்னுரையின் பிரகாரம் ''பொது மக்களிற்கு பாதுகாப்பான மற்றும் வினைத்திறனான மருத்துவ சேவையை வழங்குவது தொடர்பாக தனியார் மருத்துவ நிறுவனங்களின் ஊடாக மருத்துவ சேவைகளை வழங்குவதற்குரிய தேசிய கொள்கையொன்றை தயாரித்தல் மற்றும் அதன் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அந்த சேவைகளை வழங்க வேண்டிய முறையை இனங்காண்பது அரசின் தேவைப்பாடாக ஆகியுள்ளதனால்'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் இச் சட்டத்தின் நோக்கம் தனியார் மருத்துவ நிறுவனங்களை ஒழுங்குபடுத்தலிற்கு மட்டுப்படுத்தவில்லை எனவும், தனியார் மருத்துவ நிறுவனங்களின் வளர்ச்சியை மேம்படுத்துவதனையும் நோக்காகக் கொண்டுள்ளதாகவும் அவதானிக்கப்பட்டது. இவ்விரண்டு நோக்கங்களையும் ஒரே சட்டத்தினூடாக அடைந்து கொள்ள முயற்சிப்பதனால் தற்போதளவில் நாட்டினுள் மிகவும் பரவளாக விரிவடைந்துள்ள தனியார் மருத்துவ சேவையை பொது மக்களிற்கு தரமான மற்றும் பொறுப்பு வாய்ந்த பாதுகாப்பான சேவையை வழங்கும் சேவையொன்றாக ஆக்குவது தொடர்பில் பாதகமான தாக்கத்தை செலுத்தியுள்ளது. நாட்டினுள் தனியார் முதலீட்டை விரிவாக்க வேண்டுமெனவும், பொருளாதாரத்தின் கூடிய பங்கை தனியார் துறையினர் ஏற்க வேண்டுமெனவும் நிகழ் காலத்தில் இனங்கண்டு அதன் பணிகளிற்காக பலவித கட்டளை சட்டங்களினூடாக சலுவை வழங்கப்பட்டுள்ளது. இந் நிலைமையில் தனியார் மருத்துவ சேவையும் நாள்தோறும் பிரிவாகி வருவதுடன் சுகாதார சேவை மிகவும் உணர்வு பூர்வமான மற்றும் பொது மக்களின் வாழ்கை பாதுகாப்பை வழங்கும் வகையில் முறையாக ஒழுங்குபடுத்தலிற்கு உட்பட வேண்டிய சேவையொன்றாகையால் அதற்காக நடவடிக்கை எடுத்தல் அரசின் முதன்மை பொறுப்பு மற்றும் கடமையும் ஆகையால் தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தலிற்காக தற்போது காணப்படும் ஒழுங்குபடுத்தல் பொறிமுறையை விடவும்

மிகவும் சக்திவாய்ந்த ஒழுங்குபடுத்தல் பொறிமுறை அமைத்து நடைமுறைப்படுத்தும் தேவைப்பாடு அவதானிக்கப்பட்டது.

3.2.2. தனியார் சுகாதார சேவை சபையின் அமைவு

இந்த சட்டத்தின் 6 (1) பிரிவின் பிரகாரம் பணிகளை செயற்படுத்துவதற்காக "தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபை" அமைக்கப்பட்டதுடன் இந்த சபை மொத்தமாக பின்வரும் இருபத்தெட்டு (28) உறுப்பினர்களை கொண்டிருந்தது.

குழு	**உறுப்பினர் விபரம்**	**எண்ணிக்கை**	**மொத்தம்**	**சதவீதம்**
------	------------------------	--------------	-----------	----------
பதவி வழியாக நியமனமாகும் உறுப்பினர்கள்	சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் (தலைவர்)	01		
	சுகாதார அமைச்சின் தனியார் மருத்துவ பிரிவு அபிவிருத்தி பொறுப்பு பணிப்பாளர் (செயலாளர்)	01		
			12	43
	இலங்கை மருத்துவ சபையின் பதிவாளர்	01		
	ஒவ்வொறு மாகாணத்தினதும் மாகாண சுகாதார சேவை பணிப்பாளர்	09		
அமைச்சரினால் நியமிக்கப்படும் உறுப்பினர்கள்	சுதந்திர மருத்துவ தொழிலாளர்களின் சங்க உறுப்பினர்	01		
	இலங்கை பல்மருத்துவ சங்கத்தின் உறுப்பினர்	01		
	மருத்துவ தொழிலாளர்களின் சங்க உறுப்பினர்	01		
			16	57
	கணக்காளர், முகாமைத்துவம், சட்டம், தாதி போன்ற துறைகளின் விஷேட சேவையாற்றியுள்ள அந்தந்த துறைகளிலிருந்து ஒருவர் வீதம்	04		
	தனியார் மருத்துவமனை மற்றும் பராமரிப்பு இல்ல சங்க பிரதிநிதிகள்	09		
	மொத்த உறுப்பினர் எண்ணிக்கை		----- **28** ===	------ **100** ====

2006 இன் 21 இலக்கம் கொண்ட தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல்) சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழ் இச் சட்டத்தின் பணிகளை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள 28 பேர்களுடன் கூடிய கட்டுப்பாட்டு சபை நாட்டினுள் காணப்படும் தனியார் சுகாதார நிறுவனங்கள் பொது மக்களிற்கு பாதுகாப்பான மற்றும் வினைத்திறனான சேவையை வழங்கும் நிறுவனமாக ஒழுங்குபடுத்த பொருத்தமான மற்றும் சுயாதீனமான கட்டுப்பாட்டு சபையொன்றாக செயற்பட்டுள்ளதாக உறுதியாகவில்லை. சட்டம் அங்கீகரிக்கப்பட்டு 17 ஆண்டுகள் கடந்துள்ள

போதும் குறைந்த பட்சம் சட்டத்தின் கீழ் அதிகாரமளிக்கப்பட்டுள்ள பணிகள் தொடர்பாக கட்டளைகளை தயாரித்து அரச வர்த்தமாணியில் வெளியிட்டு பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்து அங்கீகரிக்க, சட்டத்தின் மூலம் அதிகாரமளிக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக கட்டளைகளை தயாரித்து விடயப் பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரத்தை பெற்று அரச வர்த்தமானியில் வெளியிட மற்றும் அல்லது குறைந்த பட்சம் சட்டத்தின் முக்கிய தேவைப்பாடுகளாக குறிப்பிட்டுள்ள நாட்டினுள் காணப்படும் அனைத்து தனியார் சுகாதார நிறுவனங்களையும் பதிவு செய்ய ஏனும் முடியாதிருந்தது. அவ்வாறே 2007 ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்ட பதிவுக் கட்டணத்தை 2023 செப்டம்பர் 15 திகதி இடம்பெற்ற 174 ஆம் கட்டப்பாட்டு சபை கூட்ட பிரகாரம் திருத்தும் வரை 16 ஆண்டுகளாக திருத்தியிருக்கவில்லை. இந்த விடயங்களை கவனத்திற் கொள்ளும் போது நாட்டினுள் காணப்படும் தனியார் சுகாதார நிறுவனங்களை ஒழுங்குபடுத்துவதற்காக பொருத்தமான ஏற்பாடுகள் மற்றும் கட்டுப்பாட்டு சபை அமைவுடன் கூடிய புதிய பாராளுமன்ற சட்டமொன்றை அங்கரிக்கும் அல்லது காணப்படும் சட்டத்தை தனியார் சுகாதார நிறுவன ஒழுங்குபடுத்தலிற்காக பொருத்தமானவாறு திருத்துவதற்கு உன்டான தேவைப்பாடு அவதானிக்கப்பட்டது.

3.2.3. கட்டுப்பாட்டு சபை அமைவு தொடர்பாக மதிப்பிற்குரிய உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு

தனியார் மருத்துவ நிறுவன ஒழுங்குபடுத்தல், (Regulation) கண்காணிப்பு, (Monitoring) மேற்பார்வை (Supervision) மற்றும் பரீட்சித்தல் (Inspection) மேலும் அதனுடன் தொடர்பான அல்லது அதற்கு இடைநேர் விளைவான அனைத்து விடயங்களிற்காக தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல்) சட்ட நகழ் 2000 ஜுன் 23 திகதி சுகாதார அமைச்சரினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் போது அமைக்கப்பட்டிருக்காத நிறுவனமொன்றான தனியார் வைத்தியசாலை மற்றும் பராமரிப்பு இல்ல சங்கம் மற்றும் அதன் செயலாளரினால் நீதிமன்றத்திற்கு சமர்பித்த முறையீட்டிற்கு அமைய அந்த சட்டத்தை பாராளுமன்றத்தில் கூடுதல் பெறும்பான்மையுடன் அங்கீகரிக்கவெனில் கட்டுப்பாட்டு சபையின் 1/3 பிரதிநிதித்துவம் தனியார் வைத்தியசாலை மற்றும் பராமரிப்பு இல்ல சங்கத்தின் பிரதிநிதிகளுக்கு உரித்தாக வேண்டுமென தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்த சட்டத்தின் நோக்கத்திற்குள் தனியார் மருத்துவ நிறுவனங்களின் வளர்ச்சியை மேம்படுத்துதளும் உள்ளடக்கப்பட்டுள்ளமை இத் தீர்மானம் தொடர்பில் தாக்கம் செலுத்தியுள்ளதால் மேலே குறிப்பிட்டுள்ளவாறு நாட்டினுள் செயற்படும் தனியார் மருத்துவ நிறுவனங்கள் மொது மக்களிற்கு பாதுகாப்பான மற்றும் வினைத்திறனான சேவையை வழங்கும் நிறுவனமாக ஆக்குவதற்கு மற்றும் அதனை உறுதி செய்யும் வகையில் அந்நிறுவனங்களை ஒழுங்குபடுத்துதல் அரசின் முன்னுரிமை மற்றும் தவிர்க்க முடியாத பொறுப்பாகையால் அதற்காக பொருத்தமான ஒழுங்குபடுத்தல் சட்டமொன்றை அங்கீகரித்து செயற்படுத்தும் தேவைப்பாடு அவதானிக்கப்பட்டது. இங்கு பொது மக்களிற்கு பாதுகாப்பான மற்றும் வினைத்திறனான சேவையை ஏற்க்ககூடிய நியாயமான கட்டண முறையின் கீழ் பெற்றுக் கொள்ள முடியுமானவாறு தனியார் சுகாதார சேவையை ஒழுங்குபடுத்த இயலுமான சட்டரீதியான ஏற்பாடுகளுடன் கூடிய புதிய ஒழுங்குபடுத்தல் நிறுவனமொன்றை அல்லது கட்டமைப்பொன்றை உருவாக்கும் தேவைப்பாடு அவதானிக்கப்பட்டது.

3.3. மாகாண சபைகளின் பிரதிநிதித்துவம்

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பு சட்டத்தின் 13 ஆம் திருத்தம் பிரகாரம் சுகாதார விடயத்தை மாகாண சபை மட்டத்தில் செயற்படுத்துவதற்காக பன்முகப்படுத்தப்பட்டுள்ளதுடன் தனியார் சுகாதார துறையை ஒழுங்குபடுத்துதல் தொடர்பாக 2006 இன் 21 இலக்கம் கொண்ட தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல்) சட்டத்தின் பணிகளை செயற்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையின் கட்டுப்பாட்டு சபையின் அங்கத்தவர்கள் இருபத்தெட்டு (28) பேர்களிற்கிடையே நாட்டின் ஒன்பது மாகாணங்களின் மாகாண சுகாதார பணிப்பாளர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்யும் போது குறித்த பிரமாணங்களை பூர்த்தி செய்துள்ளனவா என்பது தொடர்பாக பரீட்சிப்பொன்றை மேற்கொள்ளல் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் நிலைய பரீட்சிப்பொன்றை மேற்கொள்வது தொடர்பாக

மாகாண மட்டத்தில் பங்களிக்கப்படுகின்றன. கடந்த 5 ஆண்டுகளினுள் கட்டுப்பாட்டு சபை கூட்டங்களிற்காக மாகாண சுகாதார சேவை பணிப்பாளர்களின் வருகை மிகவும் பலவீனமான நிலையில் காணப்பட்டதுடன் மாகாணத்தினுள் செயற்படும் தனியார் மருத்துவ நிறுவனங்கள் தொடர்பான திட்டவட்டமான தகவல்களை பேணிச் செல்ல அல்லது பதிவு செய்யப்படாத தனியார் மருத்துவ நிறுவனங்களிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க அல்லது போதிய பங்களிப்பு மாகாண சுகாதார பணிப்பாளர்களினால் வழங்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திட்டவட்டமான ஏற்பாடுகளின் கீழ் அந்த அந்த மாகாணத்தினுள் அமைந்துள்ள தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்வதால் கிடைக்கும் பங்களிப்பின் 50 சதவீதத்தை குறித்த மாகாண சபை நிதியத்திற்கு செலவு வைக்க வேண்டிய போதும், தனியார் மருத்துவ நிறுவன ஒழுங்குபடுத்தல் சபை தொடர்ந்தும் இத் தொகையை மாகாண சபைக்கு வழங்குவதனை தாமதப்படுத்தியிருந்தது. இந் நிலைமையை பல ஆண்டுகளாக கணக்காய்வினால் சுட்டிக் காட்டிய போதும் மாகாண சபைக்கு வழங்க வேண்டிய இந்த 50 சதவீத வருமானத்தை வழங்குவதனை தொடர்ந்தும் தாமதமாக்கும் நிலைமையொன்று அவதானிக்கப்பட்டது.

3.4. ‘‘அதிகாரமுடைய அலுவலர்கள்’’ சரியாக வரைவிளக்கணப்படுத்தப்படாமை

2017 ஜுலை 18 திகதி அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய சுகாதார மூலோபாய பொது அபிவிருத்தித் திட்டத்தின் பாகம் ii இல் நிவாரண சேவை (Curative Servicee) பிரிவில் தனியார் சுகாதார துறையின் ஒழுங்குபடுத்தலை அபிவிருத்தி மற்றும் வலுவூட்டும் தலைப்பின் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு ‘‘சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் சபையின் தலைவராக வேண்டுமெனவும், தனியார் மருத்துவ துறை அபிவிருத்தி பணிப்பாளர் தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையின் செயலாளராகவும், இலங்கை மருத்துவ சங்கத்தின் பதிவாளருடன் 09 மாகாணங்களினதும் சுகாதார சேவை பணிப்பாளர்கள் பதவி வழியாக நியமிக்கப்படுவதாகவும், தனியார் வைத்திசாலைகள் மற்றும் பராமரிப்பு இல்ல சங்கத்தின் 09 பிரதிநிதிகளுடனும் 16 பேர்கள் அமைச்சரினால் நியமிக்கப்படுவதால் பதவி வழியாக நியமிக்கப்படும் உறுப்பினர் எண்ணிக்கையை விட அமைச்சரினால் நியமிக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை கூடுதலாக இருப்பதனூடாக இந்த சபையின் சட்டதிட்டம் சவாலிற்குட்பட்டுள்ளதாவும்’’ குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வறே ‘‘தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் பொறிமுறைக்குள் மற்றும் ஒழுங்குபடுத்தல் சபைக்குள் தனியார் உபசரணை வழங்குனர்கள் உள்ளடங்குதல் நல்ல நடைமுறைகளிற்கு எதிரான நிலைமையொன்றாவதுடன் இது இலங்கை போன்றே கிழக்கு ஆசிய வலயத்திற்கு தனியான / முற்றிலும் ஒன்றான நிலைமை எனவும் தற்போதைய ஒழுங்குபடுத்தல் பொறிமுறை செயற்பாட்டு நடைமுறை உற்பத்தித் திறனுடையதாக செயற்படுகின்றனவா என்பது சவாலாகவுள்ள விடயமெனவும், மறு புறமாக பார்க்கும் போது சபையின் அமைவினுள் தனியார் சுகாதார சேவையின் ஓசை எழுவதற்கு போன்றே தீர்மானமெடுக்கும் செயன்முறைக்கும் இது தாக்கம் செலுத்தியுள்ளதாகவும் இதனால் அமைச்சினால் பிரமாணங்களின் அதிக அதிகாரத்தை மற்றும் சுயாதீனத் தன்மை இருக்கும் தேவைப்பாட்டை இனங்கண்டு அதிக பதவிகளுடன் கூடிய அங்கத்தவர்களை உள்ளடக்குவதை போன்றே ‘‘அதிகாரமுடைய அலுவலர்கள்’’ மிகவும் சரியாக வரைவிளக்கணப்படுத்துவதற்காக 2006 இன் 21 இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்யும் சட்டத்தை திருத்தும் செயன்முறையை ஆரம்பித்துள்ளதாகவும், குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் இதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காதது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு.

(அ) 2023 ஆண்டளவில் தேசிய சுகாதார மூலோபாய பொது அபிவிருத்தி திட்டத்தில் குறிப்பிடப்படும் மேற்குறிப்பிட்ட பிரச்சினைகளை குறைத்துக் கொள்ள அல்லது குறித்த வித்தியாசத்துடன் சட்டத்தை திருத்த பொறுப்புவாய்ந்த தரப்பினரால் நடவடிக்கை எடுத்திருக்காமை.

(ஆ) நாட்டினுள் தனியார் மருத்துவ நிறுவனங்கள் பாரிய அளவில் நடாத்திச் செல்லும் மருத்துவ தொழிலாளர்களைக் கொண்ட 03 சங்கங்களை பிரதிநிதித்துவப்படுத்தி 03

பேர்கள் மற்றும் தனியார் வைத்தியசாலை மற்றும் பராமரிப்பு இல்ல சங்க அங்கத்தவர்களிகிடையில் 09 பேர்கள் உள்ளடங்களாக ஒழுங்குபடுத்தல் சபையின் மொத்த அங்கத்தவர்கள் 28 பேர்களில் 16 பேர்கள் அல்லது 57 சதவீதம் விடய பொறுப்பு அமைச்சரினால் நியமிக்கப்பட்டுள்ளமை மற்றும் ஒழுங்குபடுத்தல் சபை கூட்டமொன்றின் நிறைவெண் 07 பேர்கள் ஆவதனுள் அந்த 16 அங்கத்தவர்களில் பெறும்பான்மையாலும் ஏதேனும் சபை கூட்டமொன்றில் தீர்மானமெடுக்க இயலுமாக இருத்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல் சபையின் ஒழுங்குபடுத்தலிற்கு உட்படும் தனியார் மருத்துவ நிறுவனங்களின் உரிமையாளர்கள் ஒழுங்குபடுத்தல் சபையின் அங்கத்தவர்களாக இருப்பதன் காரணமாக கடப்பாடு தொடர்பான பிரச்சினையொன்று (confilict of interest) காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது.

அதன் பிரகாரம் இச்சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் தனியார் வைத்தியசாலைகள் மற்றும் பராமரிப்பு இல்ல சங்கத்தின் பிரதிநிதிகள் 09 பேர்களினால் நாட்டில் அதிகமான நோயாளர்கள் சிகிச்சை பெறும் வைத்தியசாலைகளின் உரிமையாளர்களுடன் தொடர்புபடுவதன் காரணமாக இந்த வைத்தியசாலைகளுக்குரிய தவறுகள் தொடர்பாக வழக்கு தாக்கல் செய்வதற்கான அங்கீகாரம் பெற்றுக் கொள்ள இந்த கடப்பாடு பாதகமான தாக்கம் செலுத்தும் ஆபத்தொன்று என அவதானிக்கப்பட்டது.

(இ) பதிவி வழியாக நியமிக்கப்படும் அங்கத்தவர்களின் எண்ணிக்கை மொத்த அங்கத்தவர்களின் சதவீதமாக 43 சதவீதமாவதுடன் அவ் அங்கத்தவர்கள் கட்டுப்பாட்டு சபை கூட்டங்களிற்காக பங்குபற்றும் போக்கு குறைவதால், தனியார் மருத்துவ நிறுவன ஒழுங்குபடுத்தல் பணிக்காக அமைச்சரினால் நியமிக்கப்பட்ட தனியார் சுகாதார நிறுவனங்களின் உரிமையாளர்களான அங்கத்தவர்களின் பங்குபற்றலில் சதவீதம் அதிகரிப்பதில் சபையின் நடவடிக்கைகள் தொடர்பாக தீர்மானம் எடுக்கும் போது கூடுதலான தாக்கம் அவ் அங்கத்தவர்களிற்கு மேற்கொள்ள முடியுமென அவதானிக்கப்பட்டது. இவ்வாறு 2018 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரை நடாத்தப்பட்ட 54 கூட்டங்களில் 39 கூட்டங்கள் அதாவது 72 சதவீதத்திற்கு தனியார் மருத்துவ நிறுவன ஒழுங்குபடுத்தல் பணிகளிற்காக அமைச்சரினால் நியமிக்கப்படும், தனியார் சுகாதார நிறுவனங்களின் உரிமையாளர்களான அங்கத்தவர்களின் பங்குபற்றல் சதவீதம் 50 சதவீதம் முதல் 93 சதவீதம் வரை நிலவியதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஈ) 2006 இன் 21 இலக்கம் கொண்ட தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல்) சட்டத்தின் 5 (ஆ) பிரிவின் பிரகாரம் பதவி வழியாக தலைவராக நியமிக்கப்படும் சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் அவர்கள் அனைத்து கூட்டங்களிற்கும் தலைமை தாங்க வேண்டியதுடன் தலைவர் வருகைதராத போது தலைமை தாங்குவதற்கு அங்கத்தவர் ஒருவரை, வருகைதந்துள்ள அங்கத்தவர்களிற்கிடையில் நியமித்துக் கொள்ள வேண்டியதுடன் 2018 ஆண்டு முதல் 2023 திசெம்பர் 31 வரை ஒழுங்குபடுத்தல் சபையினால் நடாத்தப்பட்ட மொத்த 54 கூட்டங்களில் 08 கூட்டங்களிற்கு தலைவர் பதவியை தனியார் வைத்தியசாலை மற்றும் பராமரிப்பு இல்ல சங்கங்களின் பிரதிநிதிகளினால் தாங்கப்பட்டிருந்தது.

(உ) 2017 ஆண்டு முதல் 2023 ஜுன் 30 வரை நடாத்தப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பான 14 உப குழு கூட்டங்களில் தனியார் மருத்துவ நிறுவனங்கள் தொடர்பாக 99 சந்தர்ப்பங்களில் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகள் அவ்வப் போது கலந்துரையாடப்பட்டிருந்தன. இந்த 99 முறைப்பாடுகளிற்கு இடையில் தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபை கட்டுப்பாட்டு சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் நாட்டின் 09 முன்னணி தனியார் வைத்தியசாலைகள் தொடர்பாக கிடைத்திருந்த முறைப்பாடுகள் 51 அதாவது மொத்த முறைப்பாட்டு எண்ணிக்கையின் 52 சதவீதமானதுடன் இம் முறைப்பாடுகளிற்கிடையில் நியாயமற்றதாக கட்டணம் அறவிடுதல், மருத்துவ மற்றும்

ஏனைய ஆளணியினர் தொடர்பான பிரச்சினைகள், சிகிச்சை தொடர்பான பிரச்சினைகள், தொழற்துறை ஒழுக்கம் தொடர்பான பிரச்சினைகள், நோயாளர்கள் மரணித்தல் தொடர்பான பிரச்சினைகள் போன்றே சிறுநீரக வியாபாரம் தொடர்பான பிரச்சினைகள் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டன. அவ்வாறே நாட்டின் ஏனைய மொத்த தனியார் சுகாதார நிறுவனங்கள் தொடர்பாக கிடைத்திருந்த முறைபாட்டு எண்ணிக்கை 48 ஆவதுடன் அது மொத்த முறைப்பாட்டு எண்ணிக்கையின் 48 சதவீதமாகும்.

(ஊ) கடந்த 3 ஆண்டு காலத்தினுள் தனியார் சுகாதார சேவை நிறுவனங்கள் தொடர்பாக நுகர்வோர் அதிகாரசபைக்கு 39 முறைப்பாடுகள் கிடைத்திருந்தன. இந்த 39 முறைப்பாடுகளில் 22 முறைப்பாடுகள் அதாவது 56 சதவீதம் தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையின் கட்டுப்பாட்டு சபை அங்கத்தவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் தனியார் வைத்தியசாலைகள் தொடர்பாக கிடைத்திருந்தமை இங்கு சுட்டிக் காட்டும் விடயமொன்றானது.

(எ) அவ்வாறே கடந்த 3 ஆண்டு காலத்தினுள் தனியார் சுகாதார சேவை நிறுவனங்கள் தொடர்பாக சுகாதார அமைச்சின் அவசர சுற்றிவலைப்பு பிரிவிற்கு 108 முறைப்பாடுகள் கிடைத்திருந்ததுடன் இந்த முறைப்பாட்டு எண்ணிக்கையினுள் தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையின் கட்டுப்பாட்டு சபை அங்கத்தவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் தனியார் வைத்தியசாலைகள் தொடர்பாக 20 முறைப்பாடுகள் உள்ளடக்கப்பட்டிருந்தன. இந்த முறைப்பாடுகளிற்கிடையில் கட்டணம் அறவிடுதல் தொடர்பாக, மனிதவளம் தொடர்பாக, இரசாயண ஆய்வுகூடம் தொடர்பாக, மரணம் ஏற்படுதல் தொடர்பாக மற்றும் ஏனைய காரணங்கள் தொடர்பான முறைப்பாடுகள் கிடைத்திருந்தமை இங்கு சுட்டிக் காட்டும் விடயமொன்றானது.

(ஏ) 2023 ஆண்டினுள் தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையில் பதிவினை பெற்றிருந்த தனியார் வைத்திசாலைகள் 171 ஆன போதும் கட்டுப்பாட்டு சபைக்கு அங்கத்தவர்களை நியமிக்கும் போது தொடர்ந்தும் சில வைத்தியசாலைகளை மாத்திரம் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டிருந்ததுடன் இந்த 09 அங்கத்தவர்களில் இரண்டு அங்கத்தவர்கள் ஒரே வைத்தியசாலையை பிரதிநிதிப்படுத்தி நியமிக்கப்பட்டிருந்தனர்.

3.5. தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையினால் நடாத்தப்படும் கட்டுப்பாட்டுச் சபை கூட்டங்கள் மற்றும் கூட்டங்களிற்காக அங்கத்தவர்களின் பங்குபற்றல்.

2006 இன் 21 இலக்கம் கொண்ட தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல்) சட்டத்தின் 06 ஆம் பிரிவின் பிரகாரம், தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையினை பிரதிநிதிப்படுத்தும் நபர்கள் யாவர் என, கூட்டத்தின் நிறைவெண் எவ்வளவென மற்றும் அங்கத்தவர்களை நீக்குவது தொடர்பான ஏற்பாடுகள் வழங்கப்படின் கட்டுப்பாட்டு சபை கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய காலஎல்லை மற்றும் எண்ணிக்கை தொடர்பாக நியமங்கள் குறிப்பிடப்படவில்லை. சபையின் அங்கத்தவர்கள் கூட்டங்களிற்காக பங்குபற்றுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) மேற்படி சட்டத்தின் 6(2) பிரிவின் பிரகாரம் சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் சபையின் தலைவராக இருக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இச் சபையின் தலைவர் 2018 ஆண்டில் நடாத்தப்பட்ட 10 கூட்டங்களில் 03 கூட்டங்களிற்காகவும் 2019 ஆண்டில் நடாத்தப்பட்ட 09 கூட்டங்களில் 03 கூட்டங்களிற்காக மாத்திரம் பங்குபற்றியிந்ததுடன் 2020 ஆண்டில் நடாத்தப்பட்ட 05 கூட்டங்களிற்காகவும் பங்குபற்றியிருக்கவில்லை. 2021 ஆண்டில் நடாத்தப்பட்ட 08 கூட்டங்களில் 05 கூட்டங்களிற்காகவும், 2022 ஆண்டில் நடாத்தப்பட்ட 11 கூட்டங்களில் 06 தடவைகளிற்காகவும், 2023 ஆண்டின் போது நடாத்தப்பட்டிருந்த 11 கூட்டங்களில் 04 கூட்டங்களிற்காகவும் மாத்திரம் பங்குபற்றியிருந்தார்.

(ஆ) மேற்படி சட்டத்தின் 6(1)(ஆ)(iii) பிரிவுகளின் பிரகாரம் இலங்கை மருத்துதவ சபையின் பதிவாளரும் பதவி வழியாக சபைக்கு நியமிக்கப்படும் அங்கத்தவர் ஒருவராவதுடன் அவர் 2018 ஆண்டில் நடாத்தப்பட்ட 10 கூட்டங்களில் 04 கூட்டங்களிற்காகவும் 2019 ஆண்டில் நடாத்தப்பட்ட 09 கூட்டங்களிற்கும் 2020 ஆண்டில் நடாத்தப்பட்ட 05 கூட்டங்களில் 03 கூட்டங்களிற்காகவும், 2021 ஆண்டில் நடாத்தப்பட்ட 08 கூட்டங்களில் 04 கூட்டங்களிற்காகவும் பங்குபற்றியிருந்தார். அவ்வாறே 2022 ஆண்டில் நடாத்தப்பட்ட 11 கூட்டங்களில் 03 தடவைகள் எனும் குறைந்த அளவான கூட்டங்களிற்காகவும் 2023 ஆண்டின் போது நடாத்தப்பட்டிருந்த 11 கூட்டங்களில் 09 கூட்டங்களிற்காகவும் மாத்திரம் பங்குபற்றியிருந்தார்.

(இ) மேற்படி சட்டத்தின் 6(1)(ஆ)(iv) பிரிவுகளின் பிரகாரம் ஒவ்வொறு மாகாணத்தினதும் மாகாண சுகாதார பணிப்பாளரும் பதவி வழியாக நியமிக்கப்படும் அங்கத்தவர் ஒருவராவதுடன் அதன் பிரகாரம் 09 மாகாணங்களினதும் மாகாண சுகாதார சேவை பணிப்பாளர்கள் ஒன்பது பேர்களும் 2018 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரை நடாத்தப்பட்ட ஒழுங்குபடுத்தல் கூட்டங்களிற்கான பங்குபற்றல் சாதகமான மட்டத்தில் காணப்படவில்லை.

(ஈ) மேற்படி சட்டத்தின் 6(1)(அ)(i) பிரிவுகளின் பிரகாரம் அமைச்சரினால் நியமிக்கப்பட்ட சுதந்திர மருத்துவ தொழிலாளர்களின் சங்கம், இலங்கை பல்மருத்துவ சங்கம் மற்றும் மருத்துவ தொழிலாளர்களின் சங்கம் ஆகிய மூன்று சங்கங்களின் பிரதிநிதிகள் கடந்த 06 வருட கூட்டங்களிற்கு பங்குபற்றும் முன்னேற்றம் தொடர்பான பரீட்சிப்பின் போது சுதந்திர மருத்துவ தொழிலாளர்களின் சங்கம் மற்றும் இலங்கை பல்மருத்துவ சங்கம் 60 சதவீதத்திற்கு மேற்பட்ட சதவீதம் பிரதிபழிக்கின்ற போதும் மருத்துவ தொழிலாளர்களின் சங்கம் 25 முதல் 63 வரையான சதவீதமொன்றை மாத்திரம் பிரதிபழிக்கின்றது.

(உ) மேற்படி சட்டத்தின் 6(1)அ(ii) பிரிவுகளின் பிரகாரம் கணக்காளர், முகாமைத்துவம், சட்ட மற்றும் தாதி ஆகிய துறைகளில் திறமையான சேவையை ஆற்றியுள்ள அந்த அந்த துறைகளில் ஒருவர் வீதம் அமைச்சரினால் நியமிக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் கணக்காளர் துறையின் பிரதிநிதி கடந்த 06 வருடங்களில் நடாத்தப்பட்ட சபை கூட்டங்களிற்காக பங்குபற்றும் சதவீதம் 18 முதல் 73 வரையான மட்டத்தில் காணப்பட்டதாகவும், முகாமைத்துவ துறையின் பிரதிநிதித்துவம் பூச்சியம் முதல் 63 சதவீதம் வரையான குறைந்த மட்ட பங்குபற்றலை காட்டியிருந்ததாகவும், சட்டத் துறையின் பிரதிநிதி 2019 மற்றும் 2021 ஆண்டுகளில் எவ்வித கூட்டங்களிற்கும் பங்குபற்றி இருக்காததுடன் எஞ்சிய 03 ஆண்டுகளினுள் 18 முதல் 40 சதவீதம் வரையான பங்குபற்றலை காட்டியிருந்ததாகவும், தாதித் துறையின் பிரதிநிதி 2018 முதல் 2021 வரை 20 முதல் 63 சதவீதம் வரையான பங்குபற்றலை காட்டிய போதும் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளினுள் அனைத்து கூட்டங்களிற்காகவும் தொடர்ந்து பங்குபற்றியுள்ளதாகவும் அவதானிக்கப்பட்டது.

(ஊ) மேற்படி சட்டத்தின் 6(1)(அ)(iii) பிரிவுகளின் பிரகாரம் தனியார் வைத்தியசாலை மற்றும் பராமரிப்பு இல்ல சங்கத்தின் 09 பிரதிநிதிகள் அமைச்சரினால் நியமிக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அந்த 09 பிரதிநிதிகளில் 7 அங்கத்தவர்கள் 2018 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரை நடாத்தப்பட 54 கூட்டங்களிற்கு பங்குபற்றியதன் சராசரி 38 சதவீதம் முதல் 72 சதவீதமானது. தனியார் வைத்தியசாலை மற்றும் பராமரிப்பு இல்ல சங்கத்தின் தலைவர் மாத்திரம் இந்த 5 ஆண்டுகளினுள் நடாத்தப்பட்ட அனைத்து கூட்டங்களிற்கும் பங்குபற்றியிருந்தார்.

(எ) மேற்படி சட்டத்தின் 6(4) பிரிவின் பிரகாரம் நியமிக்கப்பட்ட அங்கத்தவர் ஒருவர், ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணமாக சபையினால் கருதுகின்ற ஏதேனும் காரணம் இன்றி

சபையின் மூன்று கூட்டங்களிற்கு தொடர்ந்து பங்குபற்றவில்லை எனில், அந்த அங்கத்தவர் பதவியை விட்டுச் சென்றவராக கவனிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் தொடர்ந்து மூன்று தடவைகளிற்கு மேல் கூட்டங்களிற்கு பங்குபற்றாத அங்கத்தவர்கள் தொடர்பாக குறித்த பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

இதன் பிரகாரம் தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபைக்கு 2006 இன் 21 இலக்கம் கொண்ட தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல்) சட்டத்தின் அடிப்படை நோக்கத்தை அடைந்து கொள்ள இயலாதமைக்கு மேற்குறிப்பிட்ட விடயங்கள் நேரடியாக தாக்கம் செலுத்தியிருந்ததாக அவதானிக்கப்பட்டது.

3.6. ஒழுங்கமைப்பு சபையின் பணிகள் மற்றும் கடமைகளை மேற்கொள்வதற்காக ஒப்படைத்தல்

2006 இன் 21 இலக்கம் கொண்ட தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல்) சட்டத்தின் 11 பிரிவின் பிரகாரம் ''தனியார் சுகாதார சேவை ஒழுங்குவடுத்தல் சபையினால் தேவையென கருதும் சந்தர்ப்பத்தில் சபையின் பணிகளை மேற்கொள்ளல் மற்றும் கடமைகளை மேற்கொள்ளல், சபையின் ஏதேனும் அங்கத்தவர் ஒருவருக்கு அல்லது அங்கத்தவர்களிற்கு அல்லது சபையின் அங்கத்தவர்களுடன் கூடிய குழுவொன்றிற்கேனும் ஒப்படைக்க முடியுமாவதுடன், அவ்வாறு ஒப்படைக்கப்படும் அங்கத்தவர், அங்கத்தவர்கள் அல்லது குழுவினால் சபையின் பொதுவான பணிப்பிற்கு மற்றும் கட்டுப்பாட்டிற்குட்பட்டு அப்பணிகளை மேற்கொள்ளல் மற்றும் கடமைகளை மேற்கொள்ளல் வேண்டும்'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் தனியார் சுகாதார சேவை ஒழுங்குவடுத்தல் சபையினால் பதிவு விண்ணப்ப மதிப்பீட்டுக் குழு, அலுவல முகாமைத்துவ குழு, பயிற்சிக் குழு, கட்டண அறவீட்டுக் குழு, முறைப்பாடுகளை புலனாய்யும் குழு, தரப்படுத்தல் குழு, வழிகாட்டல் தொடர்பான குழு மற்றும் தொழிநுட்ப மதிப்பீடு மற்றும் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் தொடர்பான குழு ஆகியவாறு 08 உப குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்தன. இதன் பிரகாரம் குழு நியமித்தல் மற்றும் அவற்றின் செயற்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மாதிரி கணக்காய்வு பரீட்சிப்பின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தனியார் சுகாதார சேவை ஒழுங்குவடுத்தல் சபையின் 08 உப குழுக்களிற்காக நியமிக்கப்பட்டிருந்த, தனியார் சுகாதார சேவை ஒழுங்குவடுத்தல் சபையின் கட்டுப்பாட்டு சபைக்கு விடய பொறுப்பு அமைச்சரினால் நியமிக்கப்படும் தனியார் வைத்தியசாலை உரிமையாளர்களின் சங்கத்தின் பிரதிநிதிகளின் எண்ணிக்கை மற்றும் மொத்த அங்கத்தவர் எண்ணிக்கை தொடர்பான பரீட்சிப்பின் போது 2022 வரை செயற்பட்ட சபையின் 08 உப குழுக்களிற்காக நியமிக்கப்பட்ட அங்கத்தவர்களில் தனியார் வைத்தியசாலை மற்றும் பராமரிப்பு இல்ல சங்கத்தின் பிரதிநிதிகளின் சதவீதம் 22 முதல் 60 சதவீதம் வரையான அளவானதுடன் 2023 ஆண்டின் போது செயற்பட்ட சபையின் 6 உப குழுக்களிற்காக நியமிக்கப்பட்ட அங்கத்தவர்களில் தனியார் வைத்தியசாலை மற்றும் பராமரிப்பு இல்ல சங்கத்தின் பிரதிநிதிகளின் சதவீதம் 12 முதல் 44 சதவீதம் வரையான அளவானது. இது தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

	உப குழுவின் பெயர்		**மொத்த அங்கத்தவர் எண்ணிக்கை**	**தனியார் வைத்தியசாலை மற்றும் பராமரிப்பு இல்ல சங்க பிரதிநிதிகளின் எண்ணிக்கை**	**தனியார் வைத்தியசாலை மற்றும் பராமரிப்பு இல்ல சங்க பிரதிநிதிகளின் எண்ணிக்கை மொத்த அங்கத்தவர்களின் சதவீதமாக**
	--------------------------------		----------	--------------------	----------------------------
1	பதிவு விண்ணப்ப மதிப்பீட்டுக் குழு	(2022 வரை)	9	2	22

		2023	8	1	12
2	அலுவல முகாமைத்துவக் குழு	(2022 வரை)	10	05	50
		2023	12	5	42
3	பயிற்சிக் குழு	(2022 வரை)	8	3	38
		2023	9	2	22
4	கட்டண அறவீட்டுக் குழு	(2022 வரை)	9	5	55
		2023	10	4	40
5	முறைப்பாட்டு விசாரணைக் குழு	(2022 வரை)	8	4	50
		2023	9	3	33
6	தரப்படுத்தல் குழு	(2022 வரை)	8	2	25
		2023	9	4	44
7	வழிகாட்டல் தொடர்பான குழு	(2022 வரை)	6	2	33
8	தொழிநுட்ப மதிப்பீடு மற்றும் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் தொடர்பான குழு	(2022 வரை)	5	3	60

(ஆ) உப குழுக்களிற்காக அங்கத்தவர்களை நியமிக்கும் போது தனியார் வைத்தியசாலை மற்றும் பராமரிப்பு இல்ல சங்கத்தின் 9 பிரதிநிதிகளில் ஒரு பிரதிநிதியான தனியார் வைத்தியசாலை உரிமையாளர் சங்கத்தின் தலைவர் 8 உப குழுக்களிற்காகவும் நியமிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவையும் பிரதிநிதிப்படுத்துவதுடன் அலுவலக முகாதைத்துவ குழுவின் தலைவர் பதவியையும் வகிப்பதாக அவதானிக்கப்பட்டது.

(இ) தனியார் சுகாதார சேவை ஒழுங்குவடுத்தல் சபையின் கட்டுப்பாட்டு சபைக்கு அமைச்சரினால் நியமிக்கப்பட்ட தனியார் வைத்தியசாலை மற்றும் பராமரிப்பு இல்ல சங்கத்தின் 09 பேர்கள் உள்ளடங்களாக தனியார் சுகாதார சேவை ஒழுங்குவடுத்தல் சபையின் கட்டுப்பாட்டு சபைக்கு அமைச்சரினால் நியமிக்கப்பட்ட கட்டுப்பாட்டு சபை அங்கத்தவர்கள் நிறுவிய 08 உப குழுக்களில் 2022 வரை பிரதிநிதித்துவம் 50 சதவீதம் முதல் 88 சதவீதம் வரையான அளவும், 2023 ஆண்டின் போது பிரதிநிதித்துவம் 56 சதவீதம் முதல் 78 சதவீதம் வரையானது. விபரம் பின்வருமாறு.

உப குழுவின் பெயர்	மொத்த அங்கத் தவர் எண்ணி க்கை	ஒழுங்குபடுத்தல் சபையின் கட்டுப்பாட்டு சபைக்கு அமைச்சரினால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர் எண்ணிக்கை	அமைச்சர் நியமித்த அங்கத்தவர்கள் பிரதிநிதித்துவம் மொத்த அங்கத்தவர்களின் சதவீதமாக
-------------------------------	----------	--------------------	----------------------------
பயிற்சிக் குழு - 2022 - 2023	8 9	7 5	88 78
அலுவல முகாமைத்துவக் குழு - 2022 - 2023	10 12	8 9	80 75
கட்டண அறவீட்டுக் குழு - 2022 - 2023	9 10	7 7	78 70
முறைப்பாட்டு விசாரணை குழு - 2022 - 2023	8 9	5 5	63 56
தொழிநுட்ப மதிப்பீடு மற்றும் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் தொடர்பான குழு	5	3	60
பதிவு விண்ணப்ப மதிப்பீட்டுக் குழு - 2022 - 2023	9 8	5 5	56 62
தரப்படுத்தல் குழு	8	4	50
2023	9	5	56
வழிகாட்டல் தொடர்பான குழு	6	3	50

(ஈ) ஒழுங்குவடுத்தல் சபையினால் நியமிக்கப்பட்ட 8 உப குழுக்களின் கூட்டங்கள் நடாத்துவது ஒவ்வொறு ஆண்டிலும் பலவிதமாக மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் சில உப குழுக்கள் ஓராண்டினுள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையான சந்தர்ப்பங்களில் கூடியிருந்தன. விபரம் பின்வருமாறு.

உப குழு	2017	2018	2019	2020	2021	2022	2023
------------	------	------	-----	-----	-----	-----	------------
பதிவு விண்ணப்ப மதிப்பீட்டுக் குழு	தகவல் சமர்ப்பிக்கப் படவில்லை.	12	11	8	10	10	10
அலுவல முகாமைத்துவக் குழு	5	8	5	4	6	8	10
பயிற்சிக் குழு	5	3	5	3	4	2	6
கட்டண அறவீட்டுக் குழு	7	2	1	1	3	இல் லை	5
முறைப்பாட்டு விசாரணைக் குழு	1	2	1	2	2	2	5
தரப்படுத்தல் குழு	தகவல் சமர்ப்பிக்கப்படவில்லை.						2
வழிகாட்டல் தொடர்பான குழு	தகவல் சமர்ப்பிக்கப்படவில்லை.			1	1	1	இல்லை
தொழிநுட்ப மதிப்பீடு மற்றும் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் தொடர்பான குழு	தகவல் சமர்ப்பிக்கப்படவில்லை.						

(ஈ) எந்தவொரு உப குழுவின் கூட்டத்திற்காவும் நிறைவெண் தீர்மானிக்கப்பட்டு இருக்காததுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் உப குழு கூட்டங்களிற்காக பங்குபற்றிய அங்கத்தவர் எண்ணிக்கை உப குழுவின் மொத்த அங்கத்தவர் எண்ணிக்கையின் 50 சதவீதத்திலும் குறைந்த அங்கத்தவர் எண்ணிக்கையென அவதானிக்கப்பட்டது.

3.7. சட்டத்தின் பணிகளை மேற்கொள்வதற்காக கட்டளைகளை தயாரித்தல்

3.7.1. தனியார் மருத்துவ நிறுவனங்களை அங்கீகரிப்பு (Accreditation) செய்தல்.

இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2006 இன் 21 இலக்கம் கொண்ட தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல்) சட்டத்தின் 13(1) பிரிவின் பிரகாரம் சபையின் அறிவுறுத்தல் மீது வர்த்தமானியில் வெளியிடப்படும் நியமத்தின் மூலம் அமைச்சரினால், தனியார் மருத்துவ நிறுவனங்களை அங்கீகரிப்பு செய்யும் உத்தேச முறையொன்றை முறையாக குறிப்பிட்டு செயற்பாட்டில் ஈடுபடுத்த வேண்டுமெனவும், அங்கீகரிப்பிற்கான பிரமாணங்கள், இணைந்த வசதிகள், சேவைகள் மற்றும் வேறு ஏதேனும் காரணிகள் திட்டவட்டமாக காட்டப்படும் அனைத்து தகவல்களும் அந்த நியமத்தில் உள்ளடங்க வேண்டுமென குறிப்பிட்டிருந்த போதும், 2023 ஜுன் 30 திகதி வரை இந்த அங்கீகரிப்பு நடவடிக்கை தொடர்பாக கட்டளை தயாரித்து சட்டமொன்றாக ஆக்கியிருக்கவில்லை.

(ஆ) தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையினால் 2021 மார்ச் 19 திகதி வெளியிட்டிருந்த முறையாக அங்கீகரித்திருக்காத தனியார் மருத்துவ ஆய்வுகூட சேவைக்குரிய வழிகாட்டலினுள்ளும் அங்கீகார சான்றிதழ் ஒன்றை குறித்த நிறுவனத்தினால் பெற்றிருக்கும் தேவைப்பாடு தொடர்பாக வழியுறுத்தியிருக்கவில்லை.

(இ) சுகாதார சேவை தொடர்பாக விநியோகிக்கப்படும் சர்வதேச நியமங்களுடன் கூடிய (ISO Certificate) விஷேடமாக இரசாயணகூட சேவைக்காக விநியோகிக்கப்படும் ISO 17025 / ISO 15189 போன்ற தகைமை சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்பட வேண்டுமென்பதாக ஊக்கப்படுத்தி இருக்கவில்லை.

இதன் காரணமாக 2019 முதல் 2022 வரையான காலத்தினுள் இரசாயணகூடங்களினால் முறையற்றதாக செயற்படுவது தொடர்பாக 08 முறைப்பாடுகள் கிடைத்திருந்ததாக மாதிரி கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

3.7.2. சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் கட்டளைகளை தயாரித்தல்

2006 இன் 21 இலக்கம் கொண்ட தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல்) சட்டத்தின் 18(1) பிரிவின் பிரகாரம் விதிக்க வேண்டுமென இச் சட்டத்தால் நியமிக்கப்பட்ட அல்லது கட்டளைகளை தயாரிக்க வேண்டுமென இச் சட்டத்தால் அதிகாரமளித்துள்ள அனைத்து விடயங்கள் தொடர்பாக அமைச்சரினால் கட்டளை தயாரிக்க முடியுமென குறிப்பிட்டுள்ளதுடன் சட்டத்தின் 18(2) பிரிவின் பிரகாரம் 18(1) உப பிரிவின் மூலம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களிற்கு பாதிப்பு ஏற்படாதவாறு அமைச்சரினால் சபையின் ஆலோசனை மீது பின்வரும் 09 விடயங்களிற்கு அல்லது அவற்றில் சில விடயங்கள் தொடர்பாக கட்டளை தயாரிக்க முடியுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறே சட்டத்தின் 18(3) பிரிவின் பிரகாரம் அமைச்சரினால் தயாரிக்கப்படும் அனைத்து கட்டளைகளையும் வர்த்தமானியில் வெளியிட வேண்டுமெனவும், சட்டத்தின் 18(4) பிரிவின் பிரகாரம் அமைச்சரினால் தயாரிக்கப்படும் அனைத்து கட்டளைகளையும் வர்த்தமானியில் வெளியிட்ட பின்னர் அவசரமாக பாராளுமன்றத்தில் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்க வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.
கட்டளைகள் தயாரிக்கப்பட வேண்டிய 09 பிரிவுகள் மற்றும் வர்த்தமானியில் வெளியிட்டிருந்த 02 கட்டளைகள் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

சட்ட பிரிவு -------------	விடயம் ----------
18(2)(அ)	தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்யும் போதும் அப்பதிவை புதுப்பிக்கும் போதும் மாகாண சுகாதார சேவை பணிப்பாளர்களின் இணக்கப்பாட்டுடன் செயற்பட வேண்டிய வழிகாட்டி ஆலோசனை (கட்டளை தயாரிக்கபடவில்லை)
18(2)(ஆ)	சட்டத்தின் பிரகாரம் ஒப்படைக்கப்பட்ட அல்லது மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் சேவைக்காக மீண்டும் அறவிட வேண்டிய அல்லது கிடைக்க வேண்டிய உப அளவை அறவிடல் அல்லது ஏனைய செலவினம் (கட்டளை தயாரிக்கபடவில்லை)
18(2)(இ)	பதிவு செய்யப்பட்ட தனியார் நிறுவனங்களின் அனைத்து கட்டிடங்கள் மற்றும் வளவின் நிர்மாணத்தை திட்டமிடல் ஒளியை வளங்குதல் புதிதாக பகுதிகளை இணைத்தல் மேம்படுத்தல் மற்றும் சுத்திகரிப்பை பேணிச் செல்லல் (கட்டளை தயாரிக்கபடவில்லை)
18(2)(ஈ)	தொற்று நோய் தொற்றியுள்ள நோயாளர்களை சிகிச்சைக்காக உட்சேர்க்க முடியுமான சந்தர்ப்பங்கள் மற்றும் அவ்வாறான சந்தர்ப்பங்களில் எடுக்க வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் (தேசிய வழிகாட்டல்கள் தனியார்

	துறைக்கும் உரித்தாவதென குறிப்பிட்டு கட்டளை தயாரிக்கபடவில்லை)
18(2)(உ)	தொற்று நோயை தடுக்க மற்றும் கட்டுப்படுத்துவதற்காக உலகம் முழுவதும் ஏற்றுக் கொள்ளப்பட்ட பாதுகாப்பு செயன்முறையை பின்பற்றுதல் (தேசிய வழிகாட்டல்கள் தனியார் துறைக்கும் உரித்தாவதென குறிப்பிட்டு கட்டளை தயாரிக்கபடவில்லை)
18(2)(ஊ)	தனியார் மருத்துவ நிறுவனங்களினால் வழங்கப்படும் சேவைகளின் மீது அல்லது மேற்கொள்ளும் பணிகளின் மீது அந் நிறுவனத்தை குழுக்களாக வகைப்படுத்தல் (வேறான கட்டளை தயாரிக்கப்படவில்லை. 2007 இன் 1 ஆம் இலக்கம் கொண்ட தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல்) கட்டளை பிரகாரம் காணப்படும் கட்டில்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு மாத்திரம் கட்டணம் அறவிடப்படுவதுடன் அக்கட்டளையின் அடிப்படையில் வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டுள்ளது.)
18(2)(எ)	அக்கறை கொண்ட அல்லது அதிருப்தி அடைந்த நபரொருவரினால் ஏதேனும் தனியார் மருத்துவ நிறுவனத்திற்கு அல்லது அதனுடன் தொடர்புடைய நபரிற்கு எதிராக முன்வைக்கப்படும் ஏதேனும் முறைப்பாடுகளை ஏற்கும் போது மற்றும் அந்த முறைப்பாட்டை இறுதியாக அனுப்பும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் அல்லது கோட்பாடு (கட்டளை தயாரிக்கபடவில்லை)
18(2)(ஏ)	தனியார் மருத்துவ நிறுவனத்தினால் வழங்கப்பட்ட தங்குமிட கட்டணம், மருந்துகள் மற்றும் சேவைகளிற்காக அறவிடல் (2007 இன் 2 ஆம் இலக்கம் கொண்ட தனியார் மருத்துவ நிறுவனங்கள் (கட்டணம்) கட்டளை தயாரித்து 2007 திசெம்பர் 04 திகதி 1526/7 இலக்க வர்த்தமானியில் வெளியிட்டுள்ள போதும் இந்த கட்டளை பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படவில்லை. எனினும் இந்த கட்டளை 18(2)(ஆ) பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.
18(2)(ஐ)	இச்சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை இயக்குவதற்காக தகைமையுடைய அலுவலர்களை நியமித்தல் (கட்டளை தயாரிக்கபடவில்லை)

3.8. சட்டத்தின் கடமைகளை மேற்கொள்வதற்காக விதிமுறைகளை தயாரித்தல்

இச் சட்டத்தின் 19(1) பிரிவின் பிரகாரம் பின்வரும் அனைத்து விடயங்கள் அல்லது அவற்றில் சில விடயங்கள் தொடர்பாக சபையினால் விதிகளை தயாரிக்க முடியுமென குறிப்பிட்டுள்ளதுடன் 19(2) பிரிவின் பிரகாரம் சபையினால் தயாரிக்கப்படும் எந்த விதியும் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டு வர்த்தமானியில் வெளியிடும் வரை அமுலாவதில்லையென குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள விதிகளை தயாரிக்க முடியுமான 14 விடயங்களில் எந்த விடயம் தொடர்பாகவும் விதிகள் தயாரிக்கப்பட்டு இருக்காததுடன் 11 வழிகாட்டல்கள் மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தன. இந்த வழிகாட்டிற்காக விடயப் பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் கிடைத்ததாக உறுதியாகாததுடன் இந்த வழிகாட்டல் அமைச்சரினால் வர்த்தமானியில் வெளியிடப்படவில்லை.
விதிகளை தயாரிக்க முடியுமான விடயங்கள் பின்வருமாறு.

சட்டப் பிரிவு ------------------	**விடயம்** ----------
19(1)(அ)	தனியார் மருத்துவ நிறுவனங்களினால் அறிக்கை, புத்தகங்கள், ஆவணங்கள், பட்டியல், பற்றுச்சீட்டு, பருவகால அறிக்கை, கூற்றுக்கள், படிவங்கள் மற்றும் ஏனைய ஆவணங்களை பேணிச் செல்லல்.

19(1)(ஆ)	தனியார் மருத்துவ நிறுவனங்களினால் அமைச்சரின் அமைச்சிற்கு காலத்திற்கு காலம் சமர்ப்பிக்க வேண்டியுள்ள அறிக்கை, பருவகால அறிக்கை, கூற்றுக்கள் மற்றும் ஏனைய விடயங்கள்.
19(1)(இ)	வாட்டுக்களின் அல்லது அறைகளின் குறைந்தபட்ச பரப்பளவு மற்றும் ஒவ்வொறு நோயாளரிற்கும் ஒதுக்க வேண்டிய குறைந்தபட்ச இட அளவு.
19(1)(ஈ)	வதிவிட நோயாளிகள் மற்றும் அந்த தனியார் மருத்துவ நிறுவனங்களில் சேவையாற்றும் நபர்களிற்காக போதிய கழிவறை வசதிகள் மற்றும் குழிப்பதற்கான வசதிகளை வழங்குதல்.
19(1)(உ)	இயந்தர உபகரணங்கள், உபகரணங்கள், உதிரப்பாகம், பாகங்கள், சமயல் உபகரணங்கள், பீங்கான் பொருட்கள், பொருத்துக்கள், தளபாடங்கள் மற்றும் சாதாரண மற்றும் விஷேட தன்மையிலான ஏனைய தேவையான பொருட்கள்.
19(1)(ஊ)	ஏதேனும் குறித்த நோய் தடுப்பிற்காக தனியார் மருத்துவ நிறுவனங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள நபர்களின் நோய் எதிர்பு சக்தியை ஏற்படுத்தல்.
19(1)(எ)	மகளிர் இல்லமொன்றிற்கு அல்லது கர்பிணி நோயாளர்களை பொறுப்பேற்க மற்றும் அவர்களிற்கு சிகிச்சை வழங்க வெவ்வேறான மற்றும் தனியான வசதிகள் காணப்படும் ஏதேனும் தனியார் மருத்துவ நிறுவனத்திற்கு அன்றி, கர்பிணி நோயாளர்களை பொறுப்பேற்பதனை தடை செய்தல் அல்லது மட்டுப்படுத்தல்.
19(1)(ஏ)	கர்பிணி நோயாளர்கள் அல்லாத ஏனைய நோயாளர்களை, மகளிர் இல்லமொன்றிற்கு அல்லது கர்பிணி நோயாளர்களை பொறுப்பேற்க மற்றும் அவர்களிற்கு சிகிச்சை வழங்க வெவ்வேறான மற்றும் தனியான வசதிகள் காணப்படும் ஏனைய ஏதேனும் தனியார் மருத்துவ நிறுவனத்திற்கு உட்படுத்துதல், தடை செய்தல் அல்லது மட்டுப்படுத்தல்.
19(1)(ஐ)	ஊழியர்களை ஆட்சேர்க்கும் முறை மற்றும் அவர்களின் குறைந்தபட்ச தகைமை உள்ளடங்களாக ஆளணியினரின் ஆட்சேர்க்கும் முறையை தீர்மானித்தல், அந்த ஊழியர்களின் பதவி ஏற்பு மற்றும் அந்த ஆளணியினரால் பின்பற்றப்பட வேண்டிய சேவையின் போதான பயிற்சி மற்றும் மேலதிக பாடநெறி.
19(1)(ஒ)	சிகிச்சை வழங்கும் நிபுணத்துவ துறைகளில் பேணிச் செல்ல வேண்டிய நிபுணத்துவ பிரிவு மற்றும் நேர் ஒத்த சேவைகள் தொடர்பாக விளக்குதல்.
19(1)(ஓ)	குப்பைகளை மற்றும் கழிவுப் பொருட்களை வெளியிடுதல்.
19(1)(ஔ)	நோயாளிகள் மற்றும் நிறுவனத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள நபர்களின் விகிதத்தின் பிரகாரம் வாட்டுக்களில், சமயலறைகளில், குழியலறை மற்றும் கழிவறைகளிற்கு சின்க், அறைகள் மற்றும் கழிவு நீரை வெளியேற்றும் முறையை வழங்குதல்.
19(1)(க)	நோயாளர்களின் சுகாதார நிலையை நன்றாக பேணிக் கொள்ள தேவையான வீடுகள், உத்தியோகபூர்வ தங்குமிடம் மற்றும் போக்குவரத்து வசதிகளை வழங்குதல்.

19(1)(கா)	அனைத்து நிறுவன சொத்துக்கள், இயந்திர உபகரணங்கள் மற்றும் உபகரணங்களை பேணிச் செல்லவதற்காக போதிய அநுபவசாலிகளை பெற்றுக் கொடுத்தல்.

3.9. சட்டத்தினால் மேவுகை செய்யப்படாத துறைகள்

இலங்கையில் தனியார் மருத்துவ துறை தொடர்பாக கணிப்பீடொன்றை மேற்கொண்டு உலக வங்கியின் கீழ் வெளியிடப்பட்ட HNP –Discussion Paper – 2014 (what can the Private Health Sector Offer) எனும் கணிப்பீட்டறிக்கையிலும் குறிப்பிட்டுள்ளவாறு இச் சட்டத்தின் பின்வரும் விடயங்கள் மேவுகை செய்யப்படவில்லை.

(அ) தனியார் மருத்துவ மத்திய நிலையங்களில் கட்டாய கடமைகள் எதுவென குறிப்பிடப்படாமை.

உதாரணமாக:- மருத்துவ அலுவலர் அலுவலகத்திற்கு (MOH) நோய்கள் மற்றும் இறப்பு புள்ளிவிபரங்களை முன்வைத்தல், அறிவிக்க வேண்டிய நோய்கள் தொடர்பாக அறிவித்தல்.

(ஆ) தனியார் மருத்துவ மத்திய நிலையமொன்று விதியொன்றை அல்லது பிரமாணமொன்றை மீறி செய்ற்பட்டிருந்தால் தனியார் மருத்துவ சேவை ஒழுங்குபடுத்தல் சபையினால் எடுக்க முடியுமான ஒழுங்குபடுத்தல் முயற்சிகள் எதுவென.

உதாரணமாக:- சபைக்கு ஆரம்ப அல்லது முறையான விசாரணை ஒன்றை நடாத்தவும் பின்னர் மதிப்பீடொன்றை வெளியிடுதல் போன்ற ஒழுங்குபடுத்தல் தடைகளை விதிக்க சட்டத்தில் ஏற்பாடுகள் இல்லை.
இதன் காரணமாக தவறிழைக்கும் நிறுவனத்தின் பெயரை பகிரங்கப்படுத்துதல், அனுமதிப் பத்திரைத்தை இடைநிறுத்துதல் அல்லது இரத்துச் செய்தல் போன்ற விடயங்கள் தொடர்பாக சட்டத்தில் ஏற்பாடுகள் இல்லாதுள்ளமை.

(இ) இச் சட்டத்தின் மூலம் தொழிநுட்ப மதிப்பீடு மற்றும் ஒழுங்குபடுத்தல் மற்றும் அதனுடன் தொடர்பான நல்லொழுக்க பிரச்சினைகளை விழித்திருக்கவில்லை.
உதாரணமாக:- கரு மாற்றம் செய்தல், மனித இழையங்களை களஞ்சியப்படுத்தல் மற்றும் வெளிநாடுகளிற்கு அனுப்பப்பட்ட மனித இழையங்களின் மரபணு ரீதியான உணரல் போன்ற விடயங்கள் தொடர்பாக விழிக்காமை.

3.10. சட்டத்தில் குறிப்பிடப்படும் நோக்கங்களை அடைந்து கொள்ளமை.

2023 திசெம்பர் 31 திகதியளவில் சட்டத்தை அங்கீகரித்து 17 ஆண்டுகள் கடந்திருந்த போதும் மேற்படி சட்டத்தின் 9 பிரிவின் பிரகாரம், பதிவு செய்த தனியார் மருத்துவ நிறுவனத்தினால் பேணிச் செல்ல வேண்டிய நியமங்களை அபிவிருத்தி செய்ய மற்றும் மேற்பார்வை செய்ய, தற்போது பேணிச் செல்லும் நியமங்களை மதிப்பீடு செய்யும் முறையொன்றை செயற்படுத்த, ஊழியர்களை ஆட்சேர்க்கும் போது குறைந்தபட்ச தகைமையை பின்பற்றுவதாக உறுதி செய்ய மற்றும் ஊழியர்களை பயிற்றுவிக்கும் போது குறைந்தபட்ச நியமங்களை பின்பற்றுவதனை பொறுப்பேற்க மற்றும் வழங்கப்படும் நோயாளர்களை பேணிக் காக்கும் சேவைகளின் தரத்தை உறுதி செய்ய மற்றும் பணிகளை மேற்கொள்ள ஒழுங்கான முறைமையொன்றை தயாரித்து செயற்படுத்த இயலாதிருந்தது.

3.11. தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்தல்

3.11.1. தனியார் மருத்துவ நிறுவனங்களை நடாத்திச் செல்ல பதிவு முக்கியமானதென

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2006 இன் 21 இலக்கம் கொண்ட தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்யும் சட்டத்தின் 2(1) பிரிவின் ஏற்பாடுகள் பிரகாரம், அனைத்து தனியார் மருத்துவ நிறுவனங்களும் பதிவு செய்யப்பட வேண்டியதுடன் பதிவு செய்யப்பட வேண்டிய தனியார் மருத்துவ நிறுவனங்களை இனங்காண்பதற்கு, பதிவு செய்விக்க மற்றும் பதிவு செய்யப்படாத நிறுவனங்கள் தொடர்பாக சட்டத்தின் 4 ஆம் பிரிவின் ஏற்பாட்டை நடைமுறைப்படுத்த ஒழுங்குபடுத்தல் சபையினால் சில நிகழ்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி இருந்த போதும் வெற்றிகரமான முன்னேற்றத்தை அடைத்திருக்கவில்லை.

(ஆ) 2017 ஆண்டில் சுகாதார சேவை ஆணையாளர் நாயகத்தினால் மாகாண சுகாதார சேவை பணிப்பாளர்களினூடாக மாகாணங்களில் அமைந்துள்ள தனியார் மருத்துவ நிறுவனங்கள் தொடர்பாக மதிப்பீடொன்றை மேற்கொண்டு தகவல்களை சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் 2023 திசெம்பர் 31 திகதி வரை 361 சுகாதார அலுவலர் அலுவலகங்களில் 324 இற்கான தகவல்கள் கிடைத்திருந்ததுடன் 37 சுகாதார அலுவலர் அலுவலகங்களின் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

தகவல்கள் சமர்ப்பிக்கப்படாத சுகாதார அலுவலர் அலுவலகங்கள் (MOH) தொடர்பான விபரங்கள் இணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

(இ) 2023 திசெம்பர் 31 திகதியன்று தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அத்திகதி வரை இலங்கையினுள் நடாத்திச் செல்லப்படும் தனியார் சுகாதார சேவை நிறுவனங்களின் அளவு 6002 ஆகக் குறிப்பிட்டுள்ள போதும், அத்தரவுகளினுள் ஆயுர்வேத மருத்துவ நிறுவனங்கள், தசை பிடித்துவிடல் மத்திய நிலையங்கள் போன்ற நிறுவனங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக ஒழுங்குபடுத்தல் சபையினால் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் 2023 திசெம்பர் 31 திகதியன்று பதிவு செய்துள்ள தனியார் சுகாதார சேவை நிறுவனங்களின் எண்ணிக்கை 1919 ஆகும். இதற்கிடையில் நாடு முழுவதும் நடாத்திச் செல்லப்படுவதாக அறிக்கையிடப்பட்ட 275 தனியார் வைத்தியசாலைகளில் அத்திகதியன்று பதிவு செய்யப்பட்டிருந்தது 171 மாத்திரமே ஆகும். இந்த எண்ணிக்கை காணப்படும் தனியார் வைத்தியசாலை எண்ணிக்கையில் 62 சதவீதம் மாத்திரமே ஆகும். விபரங்கள் இணைப்பு 02 இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

(ஈ) தனியார் வைத்தியசாலை மற்றும் பராமரிப்பு இல்ல சங்கத்தின் உத்தியோகபூர்வ வலைத் தளத்தின் பிரகாரம் 2023 நவம்பர் 16 திகதியன்று அதன் அங்கத்துவ வைத்தியசாலைகளின் எண்ணிக்கை 67 ஆன போதும், அத்திகதியன்று செயற்படும் வைத்தியசாலைகளின் எண்ணிக்கை 62 ஆகுமெனவும் அங்கத்துவம் வகிக்கும் 03 வைத்தியசாலைகள் தனியார் மருத்துவ சேவை ஒழுங்குபடுத்தல் சபையில் பதிவு செய்யப்படவில்லை எனவும் அவதானிக்கப்பட்டன.

(உ) தனியார் சுகாதார சேவை நிறுவனங்களை பதிவு செய்யும் செயன்முறையில் மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகங்களினால் பின்வரும் பிரச்சினைகளிற்கு முகங்கொடுப்பதாக கணக்காய்விற்கு அறிக்கை இடப்பட்டிருந்ததுடன் இந்த பிரச்சினைகளை குறைத்துக் கொள்ள கால ரீதியான தீர்வுகளை வழங்கியதாகவும் குறித்த குழு அறிக்கை பயன்பாட்டின் போது அவதானிக்கப்படவில்லை.

(i) மேல் மாகாணத்தில் காணப்படும் தனியார் மருத்துவ நிறுவனங்கள் பாரிய பெறுமானத்தை கொண்டுள்ளதால் அனைத்து நிறுவனங்களையும் அடையாளம் காணும் கடினமொன்று காணப்படல்.

(ii) அனைத்து தனியார் மருத்துவ நிறுவனங்களையும் பரீட்சிக்கும் போது போக்கு வரத்து வசதிகளிற்காக பாரிய தொகை செலவாகுதல் மற்றும் அதிக காலம் செல்லுதல்.

(iii) தாதி பயிற்சி நிறுவனங்களிற்காக பரீட்சிப்பு பட்டியலொன்று காணப்படாமை.

(iv) தனியார் மருத்துவ நிறுவனங்கள் தொடர்பான தகவல்கள் மாகாண மட்டத்தில் மாத்திரம் பெற்றுக் கொள்ளப்படுவதால் அனைத்து நிறுவனங்கள் தொடர்பான தகவல்களையும் வெளிப்படுத்திக் கொள்வது கடினமாதல்.

3.11.2. பதிவு சான்றிதழின் செல்லுபடியாகும் தன்மை

2006 இன் 21 இலக்கம் கொண்ட தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல்) சட்டத்தின் 3(3) பிரிவின் கீழ் வழங்கப்படும் பதிவு சான்றிதழொன்று அதில் திட்டவட்டமாக குறிப்பிட முடியுமான ஏதேனும் காலத்திற்கு செல்லுபடியாக வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளதுடன், 3(4) பிரிவின் பிரகாரம் பதிவு செய்யும் சான்றிதழொன்று அதன் பதிவு காலாவதியாகும் திகதிக்கு ஒரு மாதத்திற்கு முன்னர் மற்றும் குறித்த புதுப்பித்தல் கட்டணத்தை செலுத்திய பின்னர் புதுப்பிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் தனியார் மருத்துவ நிறுவன ஒழுங்குபடுத்தல் சபையினால் இவ்வாறான செயன் முறையொன்றை கடந்த 17 ஆண்டுகள் காலமாக நடாத்திச் செல்லாததுடன் 2023 ஆகஸ்ட் 11 திகதி நடந்த கட்டுப்பாட்டுச் சபை கூட்டத்தில் தாமதம் தொடர்பாக தண்டப்பணம் அறிவிடுவது பற்றி கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

3.11.3. பதிவு விண்ணப்பங்களை மதிப்பீடு செய்யும் உப குழு

இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இவ் உப குழுவிற்காக 2023 ஆண்டில் ஓழங்குபடுத்தல் சபை கட்டுப்பாட்டு சபையின் 08 அங்கத்தவரகள் நியமிக்கப்பட்டிருந்ததுடன் பதிவிற்காக கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் குறித்த பிரமாணங்களை பூர்த்தி செய்துள்ளதா என மதிப்பீடு செய்ய அல்லது பதிவினை வழங்க முடியாத சட்ட சூழல் தொடர்பான தீர்மானம் தொழில் ரீதியாக எடுக்க முடியுமான சட்டத் துறையின் பிரதிநிதி ஒருவர் கட்டுபாட்டு சபையில் இருந்த போதும் அவரை இந்த உப குழுவிற்கு உட்படுத்தி இருக்கவில்லை.

(ஆ) 2023 ஆண்டில் நடாத்தப்பட்ட 10 உப குழுக் கூட்டங்களிற்காக அமைச்சரினால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்களில் பங்குபற்றலின் சராசரி 67 சதவீதமாகும்.

(இ) 2006 இன் 21 இலக்கம் கொண்ட தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல்) சட்டத்தின் 3(1) பிரிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் ஒன்றிற்கான அனைத்து விண்ணப்பங்களும் உரிய படிவத்தில் குறித்த மாகாண சுகாதார பணிப்பாளர் ஊடாக தனியார் மருத்துவ நிறுவன ஓழுங்குபடுத்தல் சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன், அது உரிய கட்டணம் மற்றும் குறித்த ஏனைய அனைத்து ஆவணங்களுடன் கூடியதாக இருக்க வேண்டுமெனவும், சட்டத்தின் 3(4) பிரிவின் பிரகாரம் பதிவு செய்யும் சான்றிதழொன்றை அதன் பதிவு காலாவதியாகும் திகதிக்கு ஒரு மாதத்திற்கு முன்னர் மற்றும் குறித்த புதுப்பித்தல் கட்டணத்தை செலுத்திய பின்னர் மேற்குறித்த சட்டத்தின் 3(1) பிரிவில் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டுள்ள வகையில் நிமித்த பணிக்காக செய்யப்படும் கோரிக்கையின் மீது புதுப்பிக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.
எனினும் 2023 மார்ச் மாதம் 17 திகதி ஒன்றுகூடிய பதிவு விண்ணப்ப மதிப்பீட்டுக் குழுவினால் மேற்குறித்த பிரிவுகளிற்கு மாற்றமாக பதிவை புதுப்பிக்கும் விண்ணப்பம் மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் ஊடாக சமர்ப்பிப்பது அவசியமற்றது எனவும், ஆரம்ப பதிவிற்காக மாத்திரம் விண்ணப்பங்களை சமர்பிக்க வேண்டியது குறித்த மாகாண

சுகாதார சேவை பணிப்பாளரின் ஊடாக எனவும், தற்போதே மாகாணத்தின் சுகாதார சேவை பணிப்பாளர் ஊடாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்கள் நிகழ்நிலை பதிவின் கீழ் பதிவினை நாளாதுவரையாக்க நேரடியாக தனியார் சுகாதார சேவை ஓழுங்குபடுத்தல் சபைக்கு கொண்டுவர வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்த தீர்மானம் 2023 ஏப்ரல் 21 திகதி நடைபெற்ற 170 ஆம் கட்டுப்பாட்டு சபையில் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. ஐந்து தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்தலின் போது மாகாண சுகாதார சேவை பணிப்பளரினால் பரிசோதித்து சமர்ப்பிக்கப்படும் பரீட்சிப்புப் பட்டியலை பெற்றுக் கொள்ளாது மேவுகை அங்கீகாரத்தின் கீழ் பதிவு சான்றிதழை வழங்கியிருந்த போதும் 2023 ஜூலை 26 கணக்காய்வு திகதி வரையும் அவ்வறிக்கையை பெற்றுக் கொண்டிருக்க வில்லையென குறித்த கோவைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மாதிரி கணக்காய்வு பரிசோனையின் போது அவதானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் பொது மக்களின் வாழ்கை நிலைத்திருத்தல் மற்றும் மிகவும் உணர்ச்சிவசமான நிறுவனங்களை ஒழுங்குப்படுத்தும் போது மாகாணத்தின் சுகாதார சேவை பணிப்பாளரின் ஊடாக குறித்த நிலையங்களை பௌதீக பரிசோதனைக்கு உட்படுத்தி அனைத்து பிரமாணங்களையும் பூர்த்தி செய்துள்ளதா என்பது தொடர்பாக உறுதிப்படுத்தாது இந்த நிறுவனங்களுக்காக பதிவை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஈ) நிகழ்நிலை பதிவு முறையில் காணப்படும் தொழில்நுட்ப தவறுகள் காரணமாக நிகழ்நிலை பதிவு முறையின் கீழ் பதிவு செய்வதற்காக கோரியுள்ள அனைத்து தனியார் மருத்துவ நிறுவனங்களிற்கும் பதிவை வழங்க குழு தீர்மானித்திருந்தது. இதன் பிரகாரம் 2023 ஜுன் 09 ஆம் திகதி ஒன்றுகூடியிருந்த பதிவு விண்ணப்பங்களை மதிப்பிடும் உப குழுவினால் 29 தனியார் வைத்தியசாலைகளும், 10 பாரியளவிலான ஆய்வுகூடங்களும், 2023 ஜுலை 07 ஆம் திகதி ஒன்றுகூடியிருந்த பதிவு விண்ணப்பங்களை மதிப்பிடும் உப குழுவினால் 32 தனியார் வைத்தியசாலைகளும், 05 பாரியளவிலான ஆய்வுகூடங்களும், கட்டுப்பாட்டு சபையின் அங்கீகாரத்தின் கீழ் உடனடியாக அமுலாகும் வகையில் பதிவு செய்ய பரிந்துரைத்திருந்த போதும் 2023 ஜுலை 07 ஆம் திகதி ஒன்றுகூடிய பதிவு விண்ணப்பங்களை மதிப்பிடும் குழுவிற்கு சமர்ப்பிபக்கப்பட்டிருந்த தனியார் வைத்தியாசாலை பதிவு விண்ணப்பங்களில் பின்வரும் குறைபாடுகள் காணப்பட்டன.

குறைபாடு	**வைத்தியசாலை எண்ணிக்கை**
--------------	---------------
மாகாண சுகாதார சேவை பணிப்பளரின் பரீட்சிப்புப் பட்டியல் இல்லாதிருந்தமை	05
முழுநேர மருத்துவர் ஒருவர் இருப்பது தொடர்பான விபரங்கள் இல்லாதமை	04
முழுநேர தாதி ஒருவர் இருப்பது தொடர்பான விபரங்கள் இல்லாதமை	02
மருத்துவ இரசாயனகூட தொழில்நுட்பவியலாளர்கள் இல்லாதிருந்தமை (SLMC Regestered MLT)	01
அணு சக்தி அதிகாரசபையின் சான்றிதழ் இல்லாதிருந்தமை	01
மத்திய சுற்றாடல் அதிகாரசபை அனுமதிப்பத்திரம் இல்லாதிருந்தமை	12
தீ பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் இல்லாதிருந்தமை	11

கதிர்வியலாளர்கள் இல்லாதிருந்தமை (SLMC Regestered Radiographer)	04
குறித்த அனைத்து பிரமாணங்களையும் பூர்த்தி செய்யாதிருந்தமை	20

3.11.4. ஆய்வுகூடங்களை பதிவு செய்தல்

2006 இன் 21 இலக்கம் கொண்ட தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல்) சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய மற்றும் இச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் சுகாதார அமைச்சரினால் 2007 நவம்பர் 02 திகதிய இலக்கம் 1521/26 கொண்ட அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையின் இணைப்பு II கீழ் தனியார் ஆய்வுகூடங்களை பதிவு செய்யும் படிவம் வெளியிடப்பட்டிருந்தது. இப் படிவத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட பதிவு பின்வரும் குறைபாடுகளுடன் கூடியதென அவதானிக்கப்பட்டன.

(அ) மேற்குறித்த வர்த்தமானியின் இலக்கம் 10 இன் கீழ் கழிவுப் பொருட்களை வெளியிடும் முறை தொடர்பாக மாத்திரம் கேட்கப்பட்டுள்ளதுடன் மத்திய சுற்றாடல் அதிகாரசபை சட்டத்தில் குறிப்பிடப்படும் பிணி ஆய் கழிவுகளை வெளியிடுவதற்கான சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் (Enviroment Protection License - EPL) மற்றும் பட்டியற்படுத்தப்பட்ட கழவுப் பொருள் முகாமைத்துவ அனுமதிப்பத்திரம் (Schedule Waste License - SWL) பெறப்பட்டுள்ளதா என கேட்பது தொடர்பில் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(ஆ) தேசிய சுகாதார ஆய்வுகூட கொள்கை (National Health Laboratory Policy) அமைச்சரவையினால் 2006 திசெம்பர் 01 திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், இந்த கொள்கையினூடாக அரச மற்றும் தனியார் துறையின் அனைத்து ஆய்வுகூடங்களும் மேவுகை செய்யப்படுவதாகவும், இலங்கை தராதர அங்கீகாரத் தகைமை சபையிடமிருந்து, இந்த அனைத்து ஆய்வுகூடங்களும் உரிய நியமங்களின் பிரகாரம் காணப்படுவதாக வருடாந்தம் பரீட்சித்ததன் பின்னர் வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்ள வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் மேற்குறித்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படும் படிவத்தில் இந்த அனுமதிப்பத்தரம் பெறப்பட்டுள்ளனவா என கேட்பது தொடர்பில் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

3.11.5. பதிவு செய்யப்பட்ட ஆய்வுகூடங்கள் தொடர்பான தரவுகள் முரண்படல்

இது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு

(அ) 2016 ஆண்டிறுதியில் 2005 இன் 32 இலக்க இலங்கை தராதர அங்கீகாரத் தகைமை சபை சட்டத்தின் ISO-15189:2012 அடிப்படையாகக் கொண்டு 17 மருத்துவ/ கதிர்வீச்சு ஆய்வுகூடங்களிற்காக தராதர தகைமை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தன. 2016 வரை தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையில் பதிவு செய்துள்ள தனியார் ஆய்வுகூடங்களின் எண்ணிக்கை 374 என அவதானிக்கப்பட்டதில் தராதர அங்கீகாரத் தகைமை சபையின் அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள அளவை விட அதிகளவு ஆய்வுகூடங்கள் தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2023 திசெம்பர் 31 திகதி வரை தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள தனியார் ஆய்வுகூடங்களின் எண்ணிக்கை 648 ஆகுமென அவதானிக்கப்பட்டதுடன் 2022 திசெம்பர் 31 திகதி வரை மத்திய சுற்றாடல் அதிகாரசபை சட்டத்தில் குறிப்பிடப்படும் பிணி ஆய் கழிவுப் பொருட்களை வெளியிடுவதற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் (Enviroment Protection License - EPL)

பெற்றுள்ள தனியார் ஆய்வுகூடங்களின் எண்ணிக்கை 35 எனவும், பட்டியற்படுத்தப்பட்ட கழவுப் பொருள் முகாமைத்துவ அனுமதிப்பத்திரம் (Schedule Waste License - SWL) பெற்றுள்ள தனியார் ஆய்வுகூடங்களின் எண்ணிக்கை 36 எனவும் அவதானிக்கப்பட்டதில் மத்திய சுற்றாடல் அதிகாரசபை சட்டத்தில் குறிப்பிடப்படும் தேவைப்பாட்டை பூர்த்தி செய்யாது நடாத்திச் செல்லப்படும் பெறுமளவு தனியார் ஆய்வுகூடங்கள் தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

3.12. தனியார் மருத்துவ நிறுவனங்களில் மனிதவள அபிவிருத்தி

இது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு

(அ) தேசிய சுகாதார மூலோபாய பொது அபிவிருத்தி திட்டம் (National Health Strategic Master Plan) 2016 – 2025 இன் நிவாரண சேவை (Curative Servicee) பிரிவில் தனியார் சுகாதார துறையின் ஒழுங்குபடுத்தல், அபிவிருத்தி மற்றும் வலுப்படுத்தல் தொடர்பான நிகழ்சித் திட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தனியார் சுகாதார துறையின் உட்கட்டமைப்பு வசதிகள் மிகப் பாரியதெனவும், அதற்காக ரூபா மில்லியன் அளவில் முதலீடு செய்யப்ப்பட்டுள்தாகவும், எவ்வாறாயினும் ,அநேக வசதிகள் மற்றும் உயர் தொழிநுட்ப உபகரணங்கள் மற்றும் தொழிநுட்ப வசதிகள் காணப்பட்ட போதும் அதற்கு சமமான மனிதவளங்களின் பற்றாக்குறை, அதாவது பல அரச சுகாதார சேவைகளில் ஈடுபட்டுள்ள சுகாதார சேவை தொழிலாளர்கள் மீது அந்த வைத்தியசாலைகளின் நடவடிக்கைகள் அநேகமாக தங்கியுள்ள காரணத்தால் அதிக தடைகளிற்கு முகங்கொடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறே தனியார் சுகாதார பிரிவின் கோரிக்கைகளை பூர்த்தி செய்வதற்காக மனிதவளங்களை அபிவிருத்தி செய்ய வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இப் பிரிவின் பணிக்கூற்றாக தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்வதனை முறையாக்குதல், நியமங்களை மற்றும் வழிகாட்டல்களை தயாரித்தல், மனிதவள அபிவிருத்திக்காக தொழிநுட்ப வழிகாட்டல் மற்றும் உதவிகளை வழங்குவதன் மூலம் தனியார் மருத்துவ பிரிவின் செயற்பாடுகளை வளர்த்தல் ஆகிய விடயங்கள் குறிப்பிடப்பட்டுளளன.

(ஆ) அவ்வாறே இத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு மருத்துவ தொழிலாளர்களின் சேவை முக்கியமாக தனியார் துறைக்கு வழங்கப்பட்டுள்ளது அவர்கள் அனுபவிக்கும் இரட்டை பயன்பாட்டின் (Dual Practice) சலுகையினூடாக எனவும், அதற்கு மேலதிகமாக தாதி மற்றும் குறைநிரப்பு மருத்துவ தொழிலாளர்களுடன் கவனிக்கும் போது தனியார் துறை முகங்கொடுக்கும் சவால்கள் வேறுபட்டதாகும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. பல காரணங்களால் அவர்களிற்குரிய சுகாதார தொழிலாளர்களை உருவாக்குவதற்கு வசதிகளும் அதிகளவில் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. தனியார் சுகாதார துறையினால் வழங்கப்படும் சுகாதார சேவைகளின் தரத்திற்கு 24 மணி நேரமும் தகைமை பெற்ற பயிற்றப்பட்ட ஆளணியினர் போதியதாக இல்லாமை கடும் சவால் விடுவதாகவும், நிதி நலன்கள் காரணமாக தனியார் துறையில் அதிக கவனம் செலுத்தப்படுவதன் காரணமாக அரச துறையினூடாக வழங்கப்படும் சுகாதார சேவைகளை தரத்திற்கு கூட தடை ஏற்பட முடியுமெனவும், தனியார் சுகாதார துறையில் கேள்விக்கு ஏற்றவாறு அடிப்படை கல்வி பாடநெறி மற்றும் புதிய பாடநெறி/ தாதி மற்றும் தாதி உதவித் துறையில் வெற்றிடங்களை நிரப்பும் பாடநெறிகள் நடாத்தப்படுவதாகவும், பல் அறுவை சிகிச்சை உதவியாளர்களிற்காக அடிப்படை பாடநெறி மற்றும் புதிய/ வெற்றிடங்களை நிரப்பும் பாடநெறியை திட்டமிட்டுக் கொண்டு இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

3.12.1. தனியார் மருத்துவ நிறுவனங்களில் மனிதவள பயிற்றுவிப்பு

இது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு

(அ) 2006 இன் 21 இலக்கம் கொண்ட தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல்) சட்டத்தின் 9 பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஒழுங்குபடுத்தல் சபையின் நோக்கமாக அனைத்து தனியார் மருத்துவ நிறுவனங்களினாலும் ஊழியர்களை ஆட்சேர்க்கும் போது குறைந்தபட்ச தகைமையை பின்பற்றுவதாக உறுதி செய்தல் மற்றும் ஊழியர்களை பயிற்றுவிக்கும் போது குறைந்தபட்ச நியமங்கள் பின்பற்றப்படுவதனை பொறுப்பேற்பது தொடர்பாக குறிப்பிடப்பட்டு இருந்ததுடன் தனியார் மருத்துவ நிறுவனங்களில் ஊழியர்களை பயிற்றுவிக்க ஒழுங்கமைப்பு சபைக்கு சட்டத்தினால் அதிகாரம் கிடைத்துள்ள போதும், தனியார் வைத்தியசாலைகளில் கடமையில் ஈடுபட்டுள்ள தாதி அலுவலர்களிற்கு Refresher Gap Filling Course எனும் பெயரில் பயிற்சி நிகழ்சித் திட்டமொன்றை செயன்முறைப்படுத்துவதற்காக 2019 ஆண்டில் ரூபா 2,424,698 தொகையும், 2020 ஆண்டில் ரூபா 540,484 தொகையும் 2023 ஆண்டில் ரூபா 2,742,700 தொகையும ஒழுங்குபடுத்தல் சபையினால் செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) 2006 இன் 21 இலக்கம் கொண்ட தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல்) சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 18 பிரிவின் கீழ் சுகாதார அமைச்சரினால் தயாரிக்கப்பட்ட 2007 இன் 1 இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல்) கட்டளை 2007 மார்ச் 22 திகதிய இலக்கம் 1489/18 கொண்ட அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டள்ள போதும் சட்டத்தின் 18(4) பிரிவின் பிரகாரம் இக் கட்டளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த 2007 இன் 1 இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல்) கட்டளைகளின் 4 இலக்க கட்டளை பிரகாரம் விநியோகிக்கப்படும் பதிவு சான்றிதழ் ''இ'' அட்டவணையில் குறிப்பிடப்படும் படிவத்தின் பிரகாரம் அமைய வேண்டுமென குறிப்பிட்டுள்ள போதும் குறித்த அட்டவைணை பெயரிடப்பட்டிருந்தது ''அ'' அட்டவணை எனவாகும். எவ்வாறாயினும் இந்த ''இ'' அட்டவணை 2007 ஆகஸ்ட் 13 திகதிய இலக்கம் 1510/8 கொண்ட அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திருத்தமொன்றின் ஊடாக திருத்தப்பட்டிருந்ததுடன் அங்கு, தனியார் மருத்துவ நிறுவனமொன்றை நடாத்திச் செல்ல பதிவு செய்த நபரினால் ''விஞ்ஞான ரீதியாக மற்றும் மருத்துவ விஞ்ஞன ரீதியாக மிகவும் நள்ள நிலையில் மற்றும் நள்ள தரத்துடன் ஏதேனும் பண்டம் சேவை மற்றும் வசதிகளை வழங்க வேண்டியதுடன் பயிற்றப்பட்ட மருத்துவ ஊழியர்களுடன் கூடிய ஆளணியை பேணிச் செல்ல வேண்டியதுடன் காலாவதியாகாத மருந்துகளை வழங்குவதன் மூலம் அந்த நிறுவனத்தை நள்ள நிலையில் நடாத்திச் செல்ல வேண்டும்'' எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறே தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையினால் வெளியிட்டிருந்த வழிகாட்டிகளிலும் ஒவ்வொறு தனியார் நிறுவனங்களிலும் பேணிக் கொள்ள வேண்டிய ஆளணி தொடர்பாக பின்வரும் பிரமாணங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன.

வழிகாட்டி இலக்கம் மற்றும் திகதி	தொடர்பான துறை	குறைந்தபட்ச ஆளணி நியமங்கள்
-------------------------	------------------	---
02 (2021.03.19)	தனியார் வைத்திய பராமரிப்பு இல்லம் (Nursing Home) மகளிர்	▪ முழுநேர மருத்துவ பணிப்பாளர் ஒருவர் ▪ இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்த மருத்துவ அலுவலர்கள் (முழுநேர அல்லது பகுதிநேர) ▪ இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்த/ தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல்

	இல்லம்	சபையின் பட்டியலிடப்பட்ட பிரதான தாதி/ பிரதான தாதி அலுவலர் ▪ இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்த தாதி / தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையின் பட்டியலிடப்பட்ட தாதிமார்கள் ▪ இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்த மருந்தகர்கள் ▪ இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்த எக்ஸ் கதிர் தொழிநுட்பவியலாளர்கள் ▪ பயிற்றப்பட்ட உதவி ஆளணியினர்
03 (2021.03.19)	மருத்துத நிலையம்/ நோயளர் பரீட்சிப்பு நிலையம்/(Screening Centers) பகள் நேர பராமரிப்பு நிலையம்/ சென்னல் சேவை நிலையம்	▪ இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்த தலைமையக மருத்துவ அலுவலர் ▪ இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்த மருத்துவ அலுவலர் (முழு நேர அல்லது பகுதி நேர) ▪ இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்த பிரதான தாதி அலுவலர்கள்/ பயிற்றப்பட்ட தாதிகள் ▪ பெண் தாதி அலுவலர்கள் அல்லது பாரமரிப்பாளர்கள் (நிதமும் அதிதி வரவேற்பு இடத்தில் இருக்க வேண்டும்) ▪ இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்த மருத்துவ இரசாயனகூட தொழில்நுட்பவியலாளர்கள் (MLT) ▪ இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்த பல் அறுவை சிகிச்சை மருத்துவர் (முழு நேர அல்லது பகுதி நேர) ▪ இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்த மருந்தாளர்கள் / Trained Dispenser ▪ இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்த எக்ஸ் கதிர் தொழிநுட்பவியலாளர்கள் பொருத்தமான வாறு பயிற்றப்பட்ட உதவி ஆளணியினர்

எனினும் இந்த வழிகாட்டலின் பிரகாரம் விஞ்ஞான ரீதியாக மற்றும் மருத்துவ விஞ்ஞன ரீதியாக மிகவும் பொருத்தமான நிலையில் மற்றும் நன்கு பயிற்றப்பட்ட ஊழியர்களுடன் கூடிய ஆளணியை பேணிச் செல்லவில்லை எனவும், கடந்த ஆண்டினுள் கிடைத்திருந்த மாதிரியொன்றில் உள்ளடங்கும் முறைப்பாடுகளில் குறிப்பிடப்படும் விடயங்களின் பிரகாரம் ஆரம்பமாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

இது தொடர்பாக சுகாதார அமைச்சிற்கு / தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையிற்கு கிடைத்திருந்த 33 முறைப்பாடுகளின் மற்றும் நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபைக்கு கிடைத்திருந்த 21 முறைப்பாடுகளின் உள்ளடக்கம் தொடர்பான சாராம்ச விபரங்கள் பின்வருமாறு

i. மருந்துகள் மற்றும் சிகிச்சை தவறினால் நோயாளர்கள் மரணித்தல்
ii. மருந்தாளர்கள் மருத்துவர்களாக காட்சியளித்து சிகிச்சை அளிப்பதாக

iii. மருத்துவர்கள் தொழில்சார் நட்பண்புகளிற்கு மாற்றமாக நடத்தல்
iv முழுநேர மருத்துவ பணிப்பாளர் ஒருவர் இருக்க வேண்டிய போதும் அவ்வாறு இல்லையென
v. போலியாக மேற்கத்தேய மருத்துவர்கள் போன்று காட்சியளித்து நோயாளர்களிற்கு சிகிச்சையளித்தல்
vi. பதிவு செய்யப்படாத மருத்துவர்களை சேவையில் ஈடுபடுத்தல்
vii. தவறான இரசாயணகூட அறிக்கை வழங்குதல்
viii. வைத்தியசாலை ஆளணியினரின் தகைமையின்மை தொடர்பாக
ix. மருந்தாளர்கள் இன்றி மருத்துவ நிறுவனங்களை நடாத்திச் செல்லல்

3.12.2. பயிற்றுவிப்பு உப குழு

இது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு

(அ) இந்த உப குழுவிற்காக 2023 மார்ச் 10 வரை 8 அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டு இருந்ததுடன் 2023 ஆண்டில் இடம்பெற்ற 169 ஆம் கட்டுப்பாட்டு சபை கூட்டத்தில், கட்டுபாட்டு அங்கத்தவர் அல்லாத தாதி பயிற்சி ஆலோசகர் ஒருவரும் உள்ளடங்களாக 10 அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த 10 அங்கத்தவர்களில் 7 அங்கத்தவரகள் (தனியார் வைத்தியசாலை மற்றும் பராமரிப்பு இல்ல சங்கத்தின் இரண்டு அங்கத்தவர்களுடனும்) கட்டுப்பாட்டு சபைக்கு அமைச்சரினால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்களாவர். 2023 நவம்பர் 10 திகதி இடம்பெற்ற 176 ஆம் கட்டுப்பாட்டு சபை கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் பிரகாரம் இந்த உப குழுவிற்காக 07 அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டிருந்ததுடன் கட்டுப்பாட்டு அங்கத்தவர் அல்லாத தாதி பயிற்சி ஆலோசகர் மற்றும் அமைச்சரினால் நியமிக்கப்பட்ட நியமிக்கப்பட்ட அங்கத்தவர்கள் நாள்வராவர். 2023 ஆண்டு ஜூன் 30 திகதி வரை நடாத்தப்பட்ட இந்த உப குழுக் கூட்டங்களிற்காக அமைச்சரினால் ஒழுங்குபடுத்தல் சபை கட்டுப்பாட்டு சபைக்கு நியமித்த அங்கத்தவர்களின் பங்குபற்றல் பங்குபற்றிய எண்ணிக்கையில் 40 சதவீதம் மற்றும் 75 சதவீதமாகும்.

(ஆ) 2022 ஜூன் 10 திகதி நடாத்தப்பட்ட பயிற்றுவிப்பு உப குழுக் கூட்டத்திற்காக 08 அங்கத்தவர்களில் 03 நபர்கள் மாத்திரம் பங்குபற்றியிருந்துடன் அத்திகதி நடாத்தப்பட்ட கூட்டத்தில் பங்குபற்றிய ஒரு அங்கத்தவர் பிரதிநிதிப்படுத்தும் வைத்தியசாலையும் உள்ளடங்களாக 04 வைத்தியசாலைகளில் 04 பொது பயிற்சி நிலையங்களை (Common Training Centers) அமைக்க தீரமானிக்கப்பட்டிருந்தன. அவ்வாறே 2022 ஒக்டோபர் 21 திகதி மற்றும் 2023 பெப்ரவரி 03 திகதி நடாத்தப்பட்ட கூட்டங்களிலும் இது தொடர்பாக கலந்துரையாடப்பட்டிருந்ததுடன் இந்த கூட்டங்களில் ஒற்றை பயிற்சி நிலையமாக (Individual Training Centers) தெரிவு செய்ய உத்தேசிக்கப்பட்டிருந்த 03 வைத்தியசாலைகளிற்கிடையில் ஒரு வைத்திசாலை தொடர்பாக அங்கு சேவையாற்றிய பெண் மருத்துவர் ஒருவரினால் 2022 ஜூன் 22 திகதி முறைப்பாடொன்றை முன்வைத்து வைத்தியசாலை ஆளணியினர் தொடர்பாக மற்றும் (தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையின் வழிகாட்டல் இலக்கம் 02 பிரகாரம் முழுநேர மருத்துவ பணிப்பாளர் ஒருவர் இருக்க வேண்டிய போதும்) அங்கு 2014 முதல் முழுநேர மருத்துவ பணிப்பாளர் ஒருவர் சேவையில் ஈடுபடுத்தவில்லையென குறிப்பிடப்பட்டிருந்தது.

(இ) தனியார் மருத்துவ நிறுவனங்களிற்கு தேவையான தாதி மற்றும் உள்ளக மருத்துவக் குழுவை பயிற்றுவிக்கும் நோக்கில் 2021 பெப்ரவரி 09 ஆம் திகதி தேசிய பயிலுனர் தொழிநுட்ப பயிற்சி அதிகாரசபை, தனியார் வைத்திசாலை மற்றும் பராமரிப்பு இல்ல சங்கம் மற்றும் தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபை ஆகிய மூன்று தரப்பினர்களிற்குமிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. இந்த புரிந்துணர்வு உடன்படிக்கை பிரகாரம் முதலாம் தரப்பு தேசிய பயிலுனர்

தொழிநுட்ப பயிற்சி அதிகாரசபையும், இரண்டாம் தரப்பு தனியார் வைத்திசாலை மற்றும் பராமரிப்பு இல்ல சங்கமும், மூன்றாம் தரப்பு தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையும் ஆகும். இந்த புரிந்துணர்வு உடன்படிக்கை பிரகாரம் பின்வரும் பாடநெறிகளை நடாத்த திட்டமிடப்பட்டிருந்தன.

- தாதி பயிற்சிப் பாடநெறி
- தாதி உதவியாளர் (மருத்துவ / பல்) பயிற்சிப் பாடநெறி
- துணை மருத்துவ ஆளணி / பல் தொழிநுட்ப பயிற்சிப் பாடநெறி
- தாதி Tutor பயிற்சிப் பாடநெறி
- பல் அறுவை சிகிச்சை உதவி பயிற்சிப் பாடநெறி
- கோரிக்கையின் பிரகாரம் ஏற்படும் ஏனைய பாடநெறி
- தாதி மற்றும் துணை மருத்துவ Gap Filling பாடநெறி

இந்த உடன்படிக்கை செல்லுவடியாவது 05 ஆண்டுகளிற்கு அதாவது 2026 பெப்ரவரி மாதம் வரை மாத்திரமாவதுடன் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையும் மேற்படி 07 பாடநெறிகளில் தாதி பயிற்சிப் பாடநெறி மாத்திரமே நடாத்தப்பட்டிருந்ததுடன் அதன் 05 கட்டங்களில் 3,232 மாணவர்கள் மாத்திரம் பயிற்றுவிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

3.12.3. மனிதவளம் தொடர்பான முறைப்பாடுகள்

இது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு

2019 முதல் 2022 ஆண்டு வரை சுகாதார அமைச்சின் அவசர சுற்றிவலைப்பு அலகிற்கு மருத்துவ நிறுவனங்கள் தொடர்பாக கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பாக விபரங்கள் பின்வருமாறு குறிப்பிடப்படுவதுடன் அந்த முறைப்பாடுகளில் 07 சதவீதம் முதல் 83 சதவீதம் வரை அளவான மனிதவளம் தொடர்பாக கிடைத்த முறைப்பாடுகள் ஆகும். அதாவது கடமை நேரத்தினுள் அரச வைத்தியசாலைகளில் கடமையாற்றாது தனியார் மருத்துவ நிலையங்களில் கடமையாற்றியமை தொடர்பாக அதிகளவு முறைப்பாடுகள் கிடைத்திருந்தன.

	2019	**2020**	**2021**	**2022**
கிடைத்திருந் மொத்த முறைப்பாடுகள்	63	12	18	15
மனிதவளம் தொடர்பான முறைப்பாடுகள்	52	07	12	01
சதவீதம்	83	58	67	07

3.13. தனியார் மருத்துவ நிறுவனங்களில் கட்டண ஒழுங்குபடுத்தல்

தேசிய சுகாதார மூலோபாய பொது அபிவிருத்தி திட்டம் (National Health Strategic Master Plan) 2016 – 2025 இன் நிவாரண சேவை (Curative Servicee) பிரிவில் தனியார் சுகாதார துறையின் ஒழுங்குபடுத்தல், அபிவிருத்தி மற்றும் வலுப்படுத்தல் தொடர்பான நிகழ்சித் திட்டத்தின் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு தனியார் சுகாதாரப் துறையினால் அறவிடப்படும் அதிக கட்டணம் தொடர்பாக கடந்த காலங்களிலிருந்து விவாதிக்கப்பட்டு வந்தது. தனியார் வைத்திசாலை, சுகாதார தொழிலாளர்கள் மற்றும் தனியார் மருத்துவ ஆய்வுகூடங்களும் கூட அறவிடும் அதிக கட்டண அறவீடு தொடர்பாக தனி நோயாளர்கள் மற்றும் உரவினர்கள் உள்ளிட்ட பல தரப்பினர் குரல் எழுப்பியிருந்தனர். அதன் பிரகாரம் கட்டண ஒழுங்குபடுத்தல் தொடர்பாக தேவைபாடு உருவாகியுள்ளதாகவும், தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபை குறித்த தரப்பினரின் அநேக ஆலோசனைகளுடன் நிலைமையை நன்கு பகுப்பாய்வு செய்த பின்னர் பதில் வழங்கியிருந்தது. அதன் பிரகாரம் நிபுணத்துவ மதியுரைக்காக உச்ச கட்டணம் மற்றும் விஷேட ஓர் நிபுணத்துவ மதியுரை ஆலோசனைக்காக நிர்வாக கட்டண அபிவிருத்தி செய்தலை ஆரம்பித்ததாகவும், இரண்டாவதாக, பாரியளவிலான ஆள்வுகூடங்களைப் போன்றே நடுத்தர மற்றும் சிறிய அளவிலான ஆய்வுகூடங்களிற்காக அதிகமாக மேற்கொள்ளும் 33 ஆய்வுகூட பரிசோதனைகளிற்காக உச்ச கட்டணத்தை

நிச்சகிக்கவும் தனியார் சுகாதார சேவை ஒழுங்கதைத்தல் சபை ஆர்வம் காட்டியிருந்தது. அவ்வாறே தனியார் வைத்தியசாலை, செனலிங் நிலையங்கள் மற்றும் தனியார் மருத்துவ ஆய்வுகூட உச்ச கட்டணத்தை விஞ்சக் கூடாதென கோருவதுடன் அவ்வாறு மேற்கொள்ள தேவையெனில் குறைந்த தொகையை அறவிட முடியுமெனவும், ஏனைய பலதரப்பட்ட நடைமுறைகளுக்காக கட்டணத்தை திருத்திக் கொண்டிருப்பதாகவும், நுகர்வோர் அதிகாரசபையும் (CAA) வர்த்தமானி அறிவித்தலொன்றை வெளியிட்டுள்ளதுடன், நுகர்வோர் உரிமை தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தும் நுகர்வோரிற்காக விரிவான பட்டியலொன்றை விநியோகிக்குமாறு தனியார் மருத்துவ துறைக்கு அறிவித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.
இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

3.13.1. கட்டணங்கள் தொடர்பான கட்டளைகளை தயாரித்தல்

2006 இன் 21 இலக்கம் கொண்ட தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல்) சட்டத்தின் 18 (2) (ஆ) பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட கட்டளையாக 2007 திசெம்பர் 04 திகதி இலக்கம் 1526/7 கொண்ட அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2007 இன் 2 இலக்க தனியார் மருத்துவ நிறுவன (கட்டணம்) கட்டளை, சட்டத்தின் 18 (4) பிரிவின் ஏற்பாடுகள் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்து அங்கீகாரத்துக் கொண்டதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அவ்வாறே இந்தக் கட்டளை தயாரிக்கப்பட்டது சட்டத்தின் 18 (2) (ஆ) பிரிவின் கீழ் என குறிப்பிட்டுள்ள போதும் இந்த கட்டளையை தயாரிப்பதற்காக அமைச்சரிற்கு அதிகாரம் கிடைத்துள்ளது சட்டத்தின் 18 (2) (ஏ) பிரிவின் கீழாகுமெனவும் அவதானிக்கப்பட்டது. 2007 இன் 2 இலக்க தனியார் மருத்துவ நிறுவன (கட்டணம்) கட்டளைகளில் கட்டளை இலக்கம் (2) மற்றும் (3) பிரகாரம் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு மருத்துவ தொழிலில் ஈடுபட்டுள்ள அல்லது மருத்துவ, அறுவை சிகிச்சை அல்லது பல் மருத்துவ ஆகிய மருத்து தொழிலில்களில் செயற்படும் ஏதேனும் மருத்துவ தொழிலாளர் ஒருவர், பல் அறுவை சிகிச்சை மருத்துவர் ஒருவர், மருத்துவ நிபுணர் ஒருவர் அல்லது சாதாரண தொழிலாளர் ஒருவரினால் அல்லது சுகாதார பாதுகாத்தல் சேவையை வழங்கும் மற்றும் இச் சட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ள அனைத்து தனியார் மருத்துவ நிறுவனங்களினாலும்,

- ''ஒவ்வொறு மருத்துவரினாலும் வழங்கப்படும் பல சேவை வகைகள் தொடர்பாக அம் மருத்துவ தொழிலாளர், பல் அறுவை சிகிச்சை மருத்துவர், மருத்துவ நிபுணர் அல்லது சாதாரண மருத்துவ தொழிலாளர் ஒருவரினால் அறிவிடப்படும் கட்டணம் தொடர்பாக நோயாளிக்கு அல்லது நோயாளருடன் வரும் நபரிற்கு அறிவிக்க வேண்டும்'' எனவும்,

- ''அவரால் வழங்கப்படும் பல சேவை வகைகள் தொடர்பாக அறவிடப்படும் கட்டணம் தொடர்பாக பூரண அட்டவணையொன்றை தனது நோய் ஆய் நிலையத்தில் அல்லது தான் மதியுரை சேவையை நடாத்திச் செல்லும் வளவில் பகிரங்கமாக காணக்நகூடி இடமொன்றில் காட்சிப்படுத்த வேண்டும். இல்லையெனில் அவ்வாறு காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்'' எனவும்,

- அவ்வாறே அக்கட்டளைகளின் 04 ஆம் கட்டளை பிரகாரம் ஏதேனும் தனியார் மருத்துவ நிறுவனமொன்று தொடர்பானதாகும் போது அந்த நிறுவனத்தினால் வழங்கப்படும் சேவைக்காக அந் நிறுவனத்திற்கு நோயாளரினால் செலுத்த வேண்டிய கட்டணத்திற்காக சிறிய கைநூலொன்றை மற்றும் அந்நிறுவனத்தில் சேவை வழங்கும் விஷேட நிபுணத்துவ மருத்துவரினால் அறவிடப்படும் கட்டணம் உள்ளடங்கும் வகையிலான கட்டணம் தொடர்பான பூரண அட்டவணை ஒன்றை நோயாளர் அறிந்து கொள்ள அந் நிறுவனத்தினால் வழங்க வேண்டும்'' எனவும்,

- ➢ அவ்வாறே 05 ஆம் கட்டளை பிரகாரம் மேற்குறிப்பட்ட கை நூலில் அல்லது அட்டவணையில் திட்டவட்டமாக காண்பித்துள்ள கட்டணம் அல்லது அறவீடுகளின் திருத்தமொன்று ஏற்பட்டால் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு அக்கட்டணம் தொடர்பாக அட்டவணை அல்லது சிறிய கைநூலை நாளாதுவரையாக்க மற்றும் புதிய கட்டணம் நடைமுறையாவது எத்திகதியிலிருந்து என குறிப்பிட ஏற்பாடு செய்வதும் அந்த மருத்துவ நிபுணர்களின் அல்லது தனியார் மருத்துவ நிறுவனத்தின் பணியாகுமெனவும்,

- ➢ இக் கட்டளைகளில் 06 ஆம் கட்டளை பிரகாரம் இக் கட்டளைகளின் ஏற்பாடுகளை மீரும் ஏதேனும் நபரொருவர் குற்றத்திற்கு குற்றவாளியாவார் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற் குறிப்பிட்டவாறு செயற்படாத நிறுவனம் தொடர்பாக ஒழுங்கான நடவடிக்கைகளை குறித்த நிறுவன மட்டத்தில் எடுத்திருக்காததுடன் இவ்வறிக்கைக்கு பதிலளிக்கும் போது 2023 நவம்பர் 09 திகதி அனைத்து தனியார் மருத்துவ நிறுவனங்களிற்கும் இது தொடர்பாக அறிவுறுத்தும் கடிதமொன்றை விநியோகித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கிடைத்திருந்த முறைப்பாடுகள் தொடர்பான சாராம்சமான தகவல்கள் பின்வருமாறு.

(அ) அறுவை சிகிச்சைக்காக செலவாகும் கட்டணம் தொடர்பாக அறுவை சிகிச்சைக்கு முன்னர் அறிவித்த போதும் முடிவடைந்த பின்னர் அதனைவிட பாரிய அளவால் பட்டியல்கள் அதிகரித்திருந்தமை.
(ஆ) கூடுதலான வைத்தியசாலைக் கட்டணம் அறிவிடல்.
(இ) கொவிட் - 19 தொற்று காலத்தில் அந்த சிகிச்சைக்காக நியாயமற்ற கட்டணம் அறவிடல்.
(ஈ) விரிவான பட்டியல்கள் சமர்ப்பிக்கப்படாமை.

3.13.2. தனியார் துறையின் வைத்தியசாலை மற்றும் நிறுவனங்களில் நிபுணத்துவ சேவை, மருத்துவ சேவை மற்றும் அறுவை சிகிச்சைகளிற்கு திட்டவட்டமான கிரய முறைமையொன்றை தயாரித்து செயற்படுத்தும் நிகழ்சித் திட்டம்

2018 ஆண்டில் தனியார் நிறுவனமொன்றிற்கு ரூபா 2,070,000 தொகை செலுத்தி தனியார் துறை வைத்தியசாலை மற்றும் நிறுவனங்களில் நிபுணத்துவ சேவை, மருத்துவ சேவை மற்றும் அறுவை சிகிச்சைகளிற்கு திட்டவட்டமான கிரய முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. எனினும் கட்டணத்தை தீர்மானிக்கும் போது தனியார் வைத்தியசாலைகளில் ஒன்றுக் கொன்று வித்தியாசமான தரத்திலான காரணங்கள் தொடர்பாக கவனத்திற் கொள்ளாது பொதுவான அடிப்படையில் உச்ச கட்டணம் தயாரிக்கப்பட்டிருந்தாக குற்றம் சுமத்தி 03 தனியார் வைத்தியசாலைகளினால் 2018 ஒக்டோபர் மாதம் சுகாதார அமைச்சர் உள்ளிட்ட இன்னும் 08 தரப்பினரிற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த சட்ட நடவடிக்கைகள் 2023 திசெம்பர் 31 திகதி வரை முடிவடைந்திருக்காததுடன் இதன் காரணமாக தனியார் மருத்துவ நிறுவனங்களில் கட்டணத்தை ஒழுங்குபடுத்த முடியாதிருந்தது.

3.13.3. ஆய்வுகூட பரிசோதனைகளிற்காக அறவிடப்படும் கட்டண ஒழுங்குபடுத்தல்

இது தொடர்பான பின்வருமாறு விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நுகர்வோர் அதிகாரசபையினால் சுகாதார அமைச்சின் செயலாளரை தொடர்பு கொண்ட இலக்கம் CAA/P&M/07/LABT/2023-01/05 மற்றும் 2023 ஜுன் 07 திகதிய கடிதம் பிரகாரம் நுகர்வோர் அதிகாரசபையினால் 2023 ஏப்ரல் 10 திகதியளவில் பூர்த்தி செய்திருந்த நாடு முழுவதும் அத்தியவசிய ஆய்வுகூட பரிசோதனை கட்டணம் தொடர்பான கணிப்பீட்டின் போது நாட்டின் கொழும்பு மாவட்டம் தவிர ஏனைய மாவட்டங்களில் ஆய்வுகூட பரிசோதனைகளிற்காக பின்வருமாறு கட்டணங்கள் அறவிடப்படுவதாக வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

மாவட்டம்	மாதிரி வைத்தியசாலை		UFR	ESR	FBS	PPBS	ECG
------------	-------------------		---------	---------	---------	---------	--------
கண்டி	05	குறைந்த விலை	390.00	300.00	300.00	300.00	420.00
		அதிகபட்ச விலை	620.00	590.00	630.00	630.00	910.00
மாதளை	05	குறைந்த விலை	390.00	340.00	320.00	320.00	500.00
		அதிகபட்ச விலை	620.00	590.00	630.00	630.00	910.00
நுவரலிய	05	குறைந்த விலை	250.00	250.00	200.00	200.00	250.00
		அதிகபட்ச விலை	620.00	590.00	630.00	630.00	910.00
அநுராதபுர	14	குறைந்த விலை	240.00	200.00	150.00	150.00	350.00
		அதிகபட்ச விலை	620.00	590.00	630.00	630.00	910.00
பொலன்னறுவ	05	குறைந்த விலை	250.00	275.00	200.00	200.00	250.00
		அதிகபட்ச விலை	500.00	500.00	500.00	500.00	400.00
மட்டக்களப்பு	05	குறைந்த விலை	300.00	300.00	150.00	200.00	300.00
		அதிகபட்ச விலை	400.00	400.00	400.00	400.00	400.00
அம்பாறை	07	குறைந்த விலை	200.00	200.00	150.00	150.00	500.00
		அதிகபட்ச விலை	620.00	590.00	630.00	630.00	910.00
திருகோணமலை	05	குறைந்த விலை	300.00	200.00	310.00	300.00	350.00
		அதிகபட்ச விலை	560.00	500.00	560.00	560.00	400.00
மன்னார்	04	குறைந்த விலை	300.00	300.00	150.00	150.00	400.00
		அதிகபட்ச விலை	500.00	480.00	250.00	150.00	500.00
வவுனியா	05	குறைந்த விலை	300.00	250.00	200.00	200.00	400.00
		அதிகபட்ச விலை	500.00	500.00	500.00	500.00	500.00
கிளிநொச்சி	05	குறைந்த விலை	400.00	500.00	400.00	400.00	350.00
		அதிகபட்ச விலை	680.00	640.00	690.00	720.00	800.00
யாழ்பாண	06	குறைந்த விலை	380.00	320.00	360.00	300.00	400.00

ம்		அதிகபட்ச விலை	620.00	590.00	630.00	630.00	800.00
ஹம்பந்தெ ாட்டை	07	குறைந்த விலை அதிகபட்ச விலை	200.00 440.00	200.00 500.00	150.00 500.00	200.00 400.00	350.00 500.00
காலி	09	குறைந்த விலை அதிகபட்ச விலை	320.00 620.00	275.00 590.00	250.00 630.00	250.00 640.00	350.00 1250.00
மாதறை	05	குறைந்த விலை அதிகபட்ச விலை	350.00 550.00	350.00 450.00	250.00 510.00	250.00 510.00	400.00 600.00
மொனராக ல	05	குறைந்த விலை அதிகபட்ச விலை	200.00 330.00	150.00 200.00	100.00 200.00	100.00 200.00	200.00 600.00
பதுள்ள	04	குறைந்த விலை அதிகபட்ச விலை	288.00 620.00	288.00 590.00	150.00 630.00	160.00 630.00	400.00 640.00
புத்தளம்	05	குறைந்த விலை அதிகபட்ச விலை	200.00 300.00	150.00 350.00	130.00 150.00	130.00 200.00	300.00 350.00
களுத்துறை	05	குறைந்த விலை அதிகபட்ச விலை	100.00 400.00	200.00 350.00	100.00 400.00	100.00 400.00	350.00 750.00
கம்பஹா	05	குறைந்த விலை அதிகபட்ச விலை	250.00 580.00	250.00 510.00	100.00 400.00	100.00 400.00	350.00 750.00
இரத்தினபு ரி	09	குறைந்த விலை அதிகபட்ச விலை	250.00 500.00	250.00 500.00	150.00 400.00	150.00 300.00	500.00 750.00
கேகாலை	07	குறைந்த விலை அதிகபட்ச விலை	230.00 400.00	200.00 380.00	120.00 400.00	120.00 400.00	400.00 650.00

(ஆ) நுகர்வோர் அதிகாரசபையினால் ஆய்வுகூட பரிசோதனை கட்டணங்களில் காணப்படும் முரண்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் போது கொழும்பு மாவட்டத்தில் 13 மருத்துவ நிறுவனங்களிற்குரியதாக மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் பிரகாரம் FBS (Fasting Blood Suger) ஆய்வுகூட பரிசோதனைக்காக ரூபா 300 முதல் ரூபா 630 வரையான விலையும், UFR (Urine Full Repoert) ஆய்வுகூட பரிசோதனைக்காக ரூபா 400 முதல் ரூபா 620 வரையான விலையும், TSH (Thyroid Stimulating Hormone)

ஆய்வுகூட பரிசோதனைக்காக ரூபா 1,450 முதல் ரூபா 2,490 வரையான விலையும், ESR (Erythrocyte Sedimentation Rate) ஆய்வுகூட பரிசோதனைக்காக ரூபா 340 முதல் ரூபா 590 வரையான விலையும் Lipid Profile ஆய்வுகூட பரிசோதனைக்காக ரூபா 1,500 முதல் ரூபா 2,900 வரையான விலையும் HBAIC (Hemoglobin AIC) ஆய்வுகூட பரிசோதனைக்காக ரூபா 1,800 முதல் ரூபா 3,010 வரையான விலையும் ECG (Electrocardiogram) ஆய்வுகூட பரிசோதனைக்காக ரூபா 500 முதல் ரூபா 1,200 வரையான விலையும் கட்டணமாக அறவிடப்படுவதாக வெளிப்படுத்தப்பட்டிருந்தன. (விபரம் இணைப்பு இலக்கம் 03 இல் காட்டப்பட்டுள்ளது)

(இ) 2023 ஜுன் 13 ஒன்றுகூடியிருந்த தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தும் சபையின் கட்டண அறவீட்டு உப குழுவில் வைத்திசாலைகளை தரப்பத்தலை நடைமுறைப்படுத்தும் வரை உள்ளக சமன்பாடொன்றை தயாரிக்க தீர்மானிக்கப்பட்டு இருந்தது. இதன் பிரகாரம் தனியார் மருத்துவமனை மற்றும் பராமரிப்பு இல்ல சங்கத்தின் பிரதிநிதிகளால் தயாரிக்கப்பட்ட உத்தேச கிரய தயாரிப்பு பின்வருமாறு.

பரிசோதனை வகை	**ஆய்வுகூட அறக்கை தயாரிக்கும் வரையான கிரயம்**	**வைத்தியசாலைக்கு கிடைக்கும் இலாப பங்கு (35 சதவீதம்)**	**ஆய்வுகூட அறக்கை ஒன்றிற்கான உச்ச தொகை**
--------------------------	---------------------------	---------------------------	------------------------
	(ரூபா)	(ரூபா)	(ரூபா)
UFR	473.25	165.63	638.88
ESR	475.93	166.57	642.50
FBS	522.52	182.88	705.40
PPBS	522.52	182.88	705.40
ECG	871.73	305.10	1176.83
Grouping Blood	602.77	210.96	813.73
HB	732.77	256.46	989.23
HBAIC	1592.77	557.46	2150.23
Lipid Proffile	2013.06	704.57	2717.63
Liver Profile	3092.77	1082.46	4175.23
ALT/SGPT	642.77	225.00	867.77
AST/SGOT	642.77	225.00	867.77
Bilirubin Total	652.77	228.00	880.77
Bleeding time/cloting time	426.12	149.00	575.12
Cholestrol Total	662.77	232.00	894.77
CRP	952.77	333.46	1286.23
Creatinine Serum	687.77	240.71	928.48
Electrolytes	1062. 77	371.96	1434.73
Free Thyroxine	1532.77	536.46	2069.23
Free Trilodothyonine	1532.77	536.46	2069.23
FBC	732.77	256.46	989.23
VDRL/SYPHILIS	769.77	269.42	1039.18
Pregnancy Test-Urine	380.00	133.00	513.00
PT INR	1112.77	389.46	1502.23

Renal Profile	4620.77	1617.26	6238.03
Speciman for AFB	750.00	262.50	1012.50
Stool Culture & ABST	1399.00	489.65	1888.65
Stool Full Report	400.00	140.00	540.00
Thyroid Profile	4748.31	1661.90	6410.21
Urea-Blood	672.77	235.46	908.23
Uric Acid-Serum	752.77	263.46	1016.23
Urine Culture & ABST	1399.00	489.65	1888.65

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச செலவு தயாரிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத்தை விட நாட்டில் காணப்படும் ஆய்வுகூட பரிசோதனைக்காக அதிகபட்ச கட்டணம் மிகக் குறைந்த பெறுமானத்தை எடுக்கின்ற காரணத்தால் இந்த விலை சூத்திரத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் அந்த மாவட்டங்களில் உள்ள நோயாளிகளிற்கு ஏற்கனவே உள்ள விலையை விட அதிகமாக செலுத்த வேண்டியிருந்தமை

உதாரணமாக UFR எனும் ஆய்வுகூட பரிசோதனை அறிக்கைக்காக நாட்டில் காணப்படும் விலை நிலைமை மற்றும் உத்தேச விலை பின்வருமாறு

விபரம் **----------**	**விலை** **--------**
	(ரூபா)
உத்தேச விலை	638
கொழும்பு மாவட்டத்தில் விலை	400 - 620
6 மாவட்டங்களின் விலை	100 - 450 இடையில்
4 மாவட்டங்களின் விலை	200 - 500
4 மாவட்டங்களின விலை	200 - 620
5 மாவட்டங்களின விலை	300 - 560
4 மாவட்டங்களின விலை	300 - 620
ஒரு மாவட்டத்தின் விலை	400 - 680

ii அதன் பிரகாரம் தனியார் மருத்துவ நிறுவனங்களினால் அறவிடும் கட்டணம் தொடர்பாக அதிகபட்ச விலை எல்லைகளை வர்த்தமானி ஊடாக வெளியிட்ட பின்னர் அதற்கு புறம்பாக செயற்படும் நிறுவனங்களுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்து பொது மக்களுக்கு நியாயத்தை மேற்கொள்வது தொடர்பில் சபையின் கவனம் செலுத்தப்பட வேண்டிய போதும், தனியாக மருத்துவமனை மற்றும் பராமரிப்பு இல்ல சங்கத்தின் பிரதிநிதிகளின் விருப்பத்தின் பெயரில் அவர்களின் இலாப சதவீதத்தை தீர்மானித்த பின்னர் தயாரிக்கப்பட்ட கிரய ஆவணத்தை நுகர்வோர் அதிகார சபைக்கு சமர்ப்பிக்க சபையின் செயலாளர் நடவடிக்கை எடுத்திருந்தார். குறித்த தீர்மானத்தை எடுப்பதற்கு அடிப்படையாக அமைந்த தொடர்புடைய குழுக்களின் விவரங்கள் பின்வருமாறு.

திகதி	விடயம்	தீர்மானம்	பொறுப்பு	கால எல்லை
------	--------	----------	----------	-------------
2023.05.19	ஆய்வுகூட பரிசோதனைக் கட்டணம்	அனைத்து அங்கத்தவர்களும் 33 பொது ஆய்வுகூட பரிசோதனைகளின் திருத்திய கட்டணங்களிற்கு இணங்கியுள்ளனர்.	தனியார் மருத்துவமனை மற்றும் பராமரிப்பு சங்கம்	2023 ஜுலை 13 அல்லது அதற்கு முன்னர்
மேற்படி	நிபுணத்துவ மற்றும் வைத்தியசாலை ஆலோசனை கட்டணம்	அனைத்து அங்கத்தவர்களும் நிபுணத்துவ மற்றும் வைத்தியசாலை ஆலோசனை திருத்திய கட்டணங்களிற்கு இணங்கியுள்ளனர். குறித்த நிறுவனங்களிலிருந்து அவதானிப்புக்களை பெற்றுக் கொள்ள தீர்மானித்ததுடன் தனியார் மருத்துவமனை மற்றும் பராமரிப்பு சங்கம் வைத்தியசாலை கட்டணம் தொடர்பான அவதானிப்புக்களை அனுப்ப இணங்கியுள்ளது.	• செயலாளர் • முகாமையாளர் - செயற்பாடு • தனியார் மருத்துவமனை மற்றும் பராமரிப்பு சங்கம்	மேற்படி
2023.06.13	நிபுணத்துவ மற்றும் வைத்தியசாலை ஆலோசனை கட்டணம்	நிபுணத்துவ ஆலோசனை கட்டணத்திற்காக குறித்த நிறுவனங்களில் இருந்து அவதானிப்புக்களை பெற்றுக் கொள்ள தீர்மானித்துடன தனியார் மருத்துவமனை மற்றும் பராமரிப்பு சங்கம் வைத்தியசாலை கட்டணம் தொடர்பான அவதானிப்புக்களை அனுப்ப இணங்கியுள்ளது.	• செயலாளர் • முகாமையாளர் - செயற்பாடு	மேற்படி
மேற்படி	தெரிவு செய்யப்பட்ட 33 ஆயுவுகூட பரிசோதனைக்காக கட்டணம்.	வைத்திசாலை தரப்படுத்தல் முறையை செயற்படுத்தும் வரை உப சமன்பாடொன்றை தயாரிக்க தீர்மானிக்கப்பட்டது	செயலாளர்	2023 ஜுலை 21 அல்லது அதற்கு முன்னர்

மேற்படி	தெரிவு செய்யப்பட்ட 5 ஆயுவுகூட பரிழசோதனைக் காக கட்டணம்.	குறித்த 5 ஆய்வுகூட பரிசோதனைகளிற்காக கிரய கட்டமைப்பை சமர்ப்பிக்க அனைவரும் இணங்கியுள்ளனர்.	செயலாளர்	2023 ஜுலை 16 அல்லது அதற்கு முன்னர்

3.13.4. அதிகபட்ச கட்டணங்களிற்கு முரணாக பணம் அறவிடும் போது தண்டப்பணம் விதித்தல்

இலங்கையில் தனியார் சுகாதார சேவை நிறுவனங்களினால் அறவிடும் கட்டணம் தொடர்பாக வெளியிடப்பட்ட அதிவிஷேட வர்த்தமானிகளில் குறிப்பிடப்படும் அதிகபட்ச கட்டணங்களிற்கு முரணாக பொது மக்களிடம் பணம் அறிவிடல் அறிக்கையிடப்பட்ட சந்தர்ப்பங்களில் நுகர்வேர் அதிகாரசபை சட்டம் 20 பிரிவின் பிரகாரம் 2021 ஆகஸ்ட் 13 முதல் 2023 மார்ச் 23 காலப் பகுதியினுள் 18 சந்தர்ப்பங்களில் சுற்றிவலைப்பு மேற்கொண்டு 10 நீதவான் நீதிமன்றங்களில் சட்ட நடவடிக்கை எடுத்த பின்னர் ரூபா 10,905,000 ஆன தண்டப்பணம அறவிடப்பட்டிருந்தது. விபரம் இணைப்பு 04 இல் காட்டப்பட்டுள்ளது.

3.13.5. தனியார் சுகாதார சேவை ஒடுங்குபடுத்தல் சபையின் கட்டண அறவீட்டு உப குழு

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தனியார் மருத்துவ நிறுவனங்களினால் நோயளர்களிடமிருந்து அறவிடும் கட்டணத்தை நியாயமாக ஒழுங்குபடுத்துவற்கான முடிவுகள் தீர்மானங்களை எடுப்பதற்காக அமைக்கப்பட்ட கட்டண அறவீட்டு உப குழுவிற்கு 2017 முதல் 2022 வரை நியமிக்கப்பட்ட மொத்த அங்கத்தவரகள் 9 பேர்களில் தனியார் மருத்துவமனை மற்றும் பராமர்ப்பு சேவை இல்ல சங்கத்தின் அங்கத்தவர்கள் 04 பேர்கள் உள்ளடங்களாக 7 அங்கத்தவர்கள் அதாவது 77 சதவீதத்திற்கு அதிகளவு கட்டுப்பாட்டுச் சபைக்கு அமைச்சரினால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்களாவதுடன் 2023 ஆண்டின் ரோபது நியமிக்கப்பட்ட மொத்த அங்கத்தவர்கள் 10 பேர்களில் தனியார் மருத்துவமனை மற்றும் பராமரிப்பு சேவை இல்ல சங்கத்தின் பிரதிநிதிகள் 04 பேர்கள் உள்ளடங்களாக 7 அங்கத்தவர்கள் அதாவது 70 சதவீதத்திலும் அதிகளவு கட்டுப்பாட்டு சபைக்கு அமைச்சரினால் நியமிக்கப்பட்ட அங்கத்ததவர்களாவர்.

(ஆ) தனியார் மருத்துவமனைகளினால் கட்டணம் அறவிடுவது தொடர்பில் தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபை, சுகாதார அமைச்சு மற்றும் நுகர்வோர் அதிகாரசபையிற்கு 15 சட்ட ரீதியான முறைப்பாடுகள் கிடைத்திருந்ததாக மாதிரி கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டதுடன் இது தொடர்பாக நியமிக்கப்பட்டிருந்த உப குழுவிற்காக சட்டப் பிரிவு தொடர்பான பிரதிநிதியை தெரிவு செய்திருக்கவில்லை.

(இ) இதன் பிரகாரம் குழு போதிய தடவைகள் எண்ணிக்கையான அளவு கூடியிருக்காததால் நோயாளர்களிடமிருந்து அறவிடப்படும் கட்டணத்தை நியாயமானதாக ஒழுங்குபடுத்துவது தொடர்பான முடிவுகள் தீர்மானங்களை எடுப்பது தாமதிப்பது தொடர்பில் நேரடியாக தாக்கம் செலுத்தியிருந்தது. விபரம் பின்வருமாறு.

ஆண்டு	**2017**	**2018**	**2019**	**2020**	**2021**	**2022**	**2023**
--------------	----------	-----------	-----------	------------	-----------	----------	-----------
கூடிய தடவைகள்	7	2	1	1	3	இல்லை	5

3.13.6. மருத்துகளிற்காக அறவிடப்படும் விலைகள் தொடர்பாக கவனம் செலுத்தாமை

இது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு

(அ) 2006 இன் 21 இலக்க தனியார் மருத்துவ நிறுவங்கள் (பதிவு செய்தல்) சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ்

சுகாதார அமைச்சரினால் தயாரிக்கப்பட்ட கட்டளைகள் 2007 ஆகஸ்ட் 13 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானி இலக்கம் 1510/8 இல் வெளியிடப்பட்டிருந்தன. ஒரு தனியார் மருத்துவ நிறுவனத்தை நடத்திச் செல்வதற்கு பதிவு செய்துள்ள நபரினால் பின்பற்றப்பட வேண்டிய பணிப்பொறுப்புக்கள் இந்த வர்த்தமானியில் குறிப்பிடப்படுவதுடன் அங்கு (அ) பந்தியின் பிரகாரம் காலாவதியாகாத மருந்துகளை வழங்க வேண்டுமெனவும், (ஆ) பந்தியின் பிரகாரம் சுகாதார அமைச்சினால் பெயரிடப்பட்ட அத்தியாவசிய மருந்துகளை வைத்திருக்க வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. தனியார் சுகாதார சேவை நிறுவனங்களினால் நோயாளர்களுக்கு மருந்துகளை வழங்கும் போது 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை (National Medicines Regulatory Authority - NMRA) சட்டத்தின் பிரகாரம் அவ்வப் போது அதிவிஷேட வர்த்தமானி ஊடாக வெளியிடப்படும் மருந்துகளின் அதிகபட்ச சில்லறை விலை தொடர்பான நியமங்களிற்கும் உட்பட வேண்டுமெனும் நிபந்தனைகள் /வழிகாட்டுதல்களும் உள்ளடக்கப்பட்டு உரிய கட்டளைகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. (உதாரணமாக 2022 ஆண்டில் வெளியிடப்பட்டிருந்த இலக்கம் 2077/55 கொண்ட மருந்துகளிற்கான அதிகபட்ச சில்லறை விலையை நியமிப்பதற்கான வர்த்தமானி)

இதன் காரணமாக, சில தனியார் மருத்துவ நிறுவனங்களால் நடாத்தப்படும் மருந்தகங்களில் (Pharmacy) இருந்து உள்நோயாளர்களுக்கு வழங்கப்படும் மருந்துகளுக்கு நியாயமற்ற விலைகள் அறவிடப்படுவது தொடர்பாக சுகாதார அமைச்சிற்கு/ தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் சபைக்கு கிடைத்திருந்த 8 முறைப்பாடுகள் மற்றும் நுகர்வோர் அதிகாரசபைக்கு கிடைத்திருந்த 3 முறைப்பாடுகள் தொடர்பான தகவல்கள் மாதிரி கண்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(ஆ) கணக்காய்வினால் 2023 ஜுலை 31 திகதி தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையிடம் கோரியிருந்த பின்வரும் தகவலகள் 2023 திசெம்பர் 31 திகதி வரை சமர்ப்பிக்கப்படாததால் குறித்த விடயங்கள் தொடர்பாக மேலதிக பரீட்சிப்புக்களை மேற்கொள்ள முடியவில்லை.

- 2023 ஜுன் 30 திகதி வரை பதிவு செய்துள்ள தனியார் வைத்திசாலைகளில் நடாத்திச் செல்லப்படும் மருந்தகங்கள் (Pharmacy) தொடர்பான விபரங்கள் (வைத்தியசாலையின் பெயர், முகவரி, பதிவு இலக்கம்)
- இந்த மருந்தகங்களினால் மருந்துகளிற்காக அறவிடப்படும் கட்டணங்கள் தொடர்பாக தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையின் ஒழுங்குபடுத்தல் பணிகள் தொடர்பான விபரங்கள்.
- இந்த மருந்தகங்களினால் 2021, 2022 மற்றும் 2023 ஜுன் 30 வரை அதிகபட்ச கட்டணங்களிற்கு முரணாக / நியாயமற்றதாக பொது மக்களிடமிருந்து பணம் அறவிடல் அறிக்கையிடப்பட்ட சந்தர்ப்பங்களில் தண்டப்பணம் அறவிடல் / சட்ட நடவடிக்கை எடுத்தல் தொடர்பான விபரங்கள்.

3.14. தனியார் மருத்துவ நிறுவனங்கள் சுற்றாடல் சட்டங்களுடன் இணங்குதல்

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தனியார் மருத்துவ நிறுவனம் / நிலையங்களில் கழிவுப் பொருட்களை முறையாக வெளியிடல் / அழித்தல் தொடர்பாக தீர்மானம் எடுப்பது மற்றும் தற்காலிக அடிப்படையில் அந்த அந்த மாகாண சபைகளிற்கு கழிவுப் பொருட்களை வெளியிட தேவையான உபகரணங்கள் (Incinerator Machine) வழங்குவது தொடர்பாக

பரிந்துரைகளை சமர்ப்பிப்பதனை நோக்காகக் கொண்ட தொழிநுட்ப ஆய்வு மற்றும் கழிவுப் பொருட்களை வெளியிடுவது தொடர்பான உப குழு 2017 முதல் 2023 ஜூன் 30 வரை கூடியிருக்கவில்லை. இந்த உப குழுவிற்காக நியமிக்கப்பட்ட மொத்த அங்கத்தவர்கள் 05 பேர்களில் தனியார் மருத்துவமனை மற்றும் பாராமரிப் இல்ல சங்கத்தின் பிரதிநிதிகளின் எண்ணிக்கை மூவராகும். இந்த உப குழுவிற்கு சட்ட விடயங்களிற்காக தொடர்பான சட்ட பிரிவு பிரதிநிதி தொடர்புபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கடந்த 3 ஆண்டு காலத்தினுள் தனியார் சுகாதார சேவை நிறுவனங்களினால் சுற்றாடல் சட்ட விதிகளிற்கு முரணாக செயற்படல் அதாவது பிணி ஆய் கழிவுகளை ஒழுங்கு முறையாக வெளியிடாமை தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு 19 முறைப்பாடுகள் கிடைத்திருந்தன. இந்த 19 முறைப்பாடுகளில் 10 முறைப்பாடுகள் அதாவது 52.6 சதவீதம் தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையின் கட்டுப்பாட்டு சபை அங்கத்தவர்கள் பிரதிநிதிப்படுத்தும் தனியார் மருத்துவமனைகள் ஆனமை இங்கு தெளிவான விடயமொன்றாகும்.

(இ) 1988 இன் 56 இலக்க மற்றும் 2000 இன் 53 இலக்க சட்டங்களினால் திருத்திய 1980 இன் 47 இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் 23 (அ) பிரிவின் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், சுற்றாடல் மற்றும் இயற்கை வள அமைச்சரினால் 2008 சனவரி 25 திகதிய இலக்கம் 1533/16 கொண்ட அதி விஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் (அ) பிரிவின் 68 உப பிரிவின் பிரகாரம் பிணி ஆய் கழிவுப் பொருட்களை வெளியிடுவதற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரமொன்றை (Enviroment Protection License - EPL) பெற்றுக் கொள்ளும் சட்ட தேவைப்பாட்டை பூர்த்தி செய்ய வேண்டும். இது தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் இலக்கம் CEA/EPC/07/G12/AUD/01/2022 கொண்ட 2023 ஏப்ரல் 24 திகதிய கடிதம் மூலம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பகுப்பாய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. 2022 ஆண்டில் தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையில் பதிவு செய்திருந்த வைத்தியசாலைகள், தனியார் மருத்துவ நிலையங்கள் மற்றும் தனியார் மருத்துவ ஆய்வுகூடங்கள் முறையே 162, 183 மற்றும் 469 ஆனதுடன் 2022 ஆண்டிற்காக இந்த சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தை பெற்றிருந்தது 77 தனியார் மருத்துவனைகள், 19 தனியார் மருத்துவ நிலையங்கள் மற்றும் 34 தனியார் மருத்துவ ஆய்வுகூடங்கள் மாத்திரமாகும். அதன் பிரகாரம் பதிவு செய்யும் போது இந்த சான்றிதழ்களை பெற்றிருப்பது கட்டாயமான போதும் அது தொடர்பாக கவனயீனமாக தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையினால் விண்ணப்பிக்கப்பட்ட அனைத்து நிறுவனங்களிற்காகவும் பதிவினை வழங்கியிருந்தது.

ii. 2022 ஆண்டில் தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையில் பதிவு செய்திருந்த பகுதி நேர சாதாரண மருந்தகங்கள், பல் அறுவை சிகிச்சை நிலையங்கள்கள், நிபுணத்துவ மருத்துவ சேவைகள் மற்றும் முழு நேர சாதாரண மருந்தகங்கள், பல் அறுவை சிகிச்சை நிலையங்கள்கள், நிபுணத்துவ மருத்துவ சேவைகள் ஆகியவற்றின் மொத்தக் கூட்டுத் தொகை 375 ஆனதுடன் அவ் எந்தவொறு தனியார் சுகாதார மருத்துவ நிறுவனத்தினாலும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை மூலம் விநியோகிக்கப்படும் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தை பெற்றிருக்கவில்லை.

(ஈ) 1980 இன் 47 இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் 23 (அ) மற்றும் 23 (ஆ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் சுற்றாடல் மற்றும் இயற்கை வள அமைச்சரினால் 2008 பெப்ரவரி 01 திகதிய இலக்கம் 1534/18 கொண்ட அதி விஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2008 இன் 01 இலக்கம் கொண்ட தேசிய

சுற்றாடல் (பாதுகாத்தல் மற்றும் நிலைமை) கட்டளைத் தொகுதியின் II பிரிவின் 15 ஆம் கட்டளை பிரகாரம் VIII அட்டவணையில் குறிப்பிடப்படும் இடையூறான கழிவுப் பொருள் வகையான பிணி ஆய் கழிவுப் பொருட்களை வெளியிட அட்டவணப்படுத்தப்பட்ட கழிவுப் பொருள் முகாமைத்துவ அனுமதிப் பத்திரமொன்றை (Schedule Waste Management License - SWML) பெற்றுக் கொள்ளும் சட்ட தேவைப்பாட்டை பூர்த்தி செய்ய வேண்டும். அதன் பிரகாரம் மருத்துவ ஆய்வுகூடம் மற்றும் ஆராய்ச்சி நிலையங்களும் உள்ளடங்களாக அனைத்து சுகாதார சேவை நிறுவனங்களினதும் பிணி ஆய் கழிவுகளை வெளியிட இந்த அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். இது தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் இலக்கம் 07/WM/113/2017 கொண்ட 2023 மார்ச் 02 கடிதம் மூலம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் பகுப்பாய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. 2022 ஆண்டில் தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையில் பதிவு செய்திருந்த அனைத்து தனியார் சுகாதார நிலையங்களின் எண்ணிக்கை 1265 ஆனதுடன் அந்த சுகாதார நிலையங்களில் 2018 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரை இந்த அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்துள்ள தனியார் சுகாதார நிலையங்களின் எண்ணிக்கை 115 மாத்திரம் ஆவதுடன் அவற்றில் 71 நிறுவனங்கள் மாத்திரம் தனியார் சுகாதார சேவை ஒழங்குபடுத்தல் சபையில் பதிவினை பெற்றிருந்தன.

ii. இப் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களிற்கிடையில் ஐந்து நிறுவனங்களிற்குரியதாக வழங்கியிருந்த இந்த அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம் காலாவதியாகியுள்ளதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

iii. முழுநேர மற்றும் பகுதிநேர பல்மருத்துவ நிறுவனங்கள், சாதாரண மருந்து நிலையங்கள், நிபுணத்துவ வைத்திய சேவை வழங்கும் எந்த நிறுவனமும் இவ் அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்காததுடன் தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையினால் தயாரிக்கப்பட்ட வழிகாட்டலின் பிரகாரம் தயாரித்து மாகாண சுகாதார சேவை பணிப்பாளர்களிற்கு வழங்கியிருந்த பரீட்சிப்புப் (Check List) பட்டியலிலும் இந்த அனுமதிப்பத்திரத்தை பெற்றிருப்பது கட்டாயமென குறிப்பிட்டிருக்கவில்லை.

iv. மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் இலக்கம் CEA/07/HW/&CW கொண்ட மற்றும் 2022 ஒக்டோபர் 12 திகதிய கடிதம் மூலம் தனியார் வைத்தியசாலை ஒன்றிற்கு அறிவித்துள்ளது இந்த நிறுவனத்தினால் அட்டவறுணைப்படுத்தப்பட்ட கழிவுப் பொருள் முகாமைத்துவ அனுமதிப் பத்திரமொன்றை (Schedule Waste Management License - SWML) பெற்றுக் கொள்ளும் சட்ட தேவைப்பாடு காணப்படுவதால் இக் கடிதத்திலிருந்து 14 நாட்களிற்குள் குறித்த விண்ணபத்தை சமர்ப்பிக்க வேண்டுமெனவும், இந்த அனுமதிப்பத்திரம் இன்றி குறித்த வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வது 1980 இன் 47 இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரகாரம் தண்டனை வழங்கக்கூடிய குற்றமாகும் எனவாகும். எனினும் 2023 ஜுலை 26 கணக்காய்வு திகதி வரை ஓராண்டிற்கு அன்மித்த காலம் கடந்துள்ள போதும் இந்த அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொண்டதாக எழுத்துமூல சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை என குறித்த தனியார் வைத்தியசாலைகளின் கடிதக் கோவை பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டது.

3.15. தனியார் மருத்துவ நிறுவனங்களை தரப்படுத்தல்.

இது தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு.

(அ) 2006 இன் 21 இலக்க தனியார் மருத்துவ நிறுவங்கள் (பதிவு செய்தல்) சட்டத்தின் 10 பிரிவில், இச் சபையின் கடமைகள் மற்றும் பணிகள் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அங்கு 10 (ஈ) பிரிவின் பிரகாரம் அந்த அந்த தனியார் மருத்துவ நிறுவனங்களினால் வழங்கப்படும் வசதிகளின் பிரகாரம் அவற்றை வகைப்படுத்தும் முறையொன்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. என்னும் 2023 திசெம்பர் 31 வரை தனியார் மருத்துவ நிலையங்களை தரப்படுத்தும் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன் இதன் காரணமாக கட்டணங்களை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகளையும் இடைநடுவே நின்றுள்ளது.

(ஆ) 2017 முதல் 2023 ஜுன் 30 வரையான காலத்தினுள் தரப்படுத்தும் உப குழு கூடியிருக்காததுடன் 2023 ஜுலை மற்றும் திசெம்பர் இடையில் இரண்டு முறைகள் மாத்திரம் ஒன்றுகூடியிருந்தது. இவ் உப குழு அமைவும் சுயாதீன மற்றும் தனியார் மருத்துவ நிறுவன ஒழுங்குபடுத்தலிற்காக தீர்மானம் எடுக்கக் கூடிய வகையிலான உப குழுவொன்றல்ல என அதவானிக்கப்பட்டதுடன் இந்த உப குழுவிற்காக சட்டப் பிரிவு பிரதிநிதி நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

3.16. தனியார் மருத்துவ நிறுவனங்கள் தொடர்பாக கிடைக்கப் பெறும் முறைப்பாடுகள்.

3.16.1. தனியார் மருத்துவ நிறுவனங்கள் தொடர்பாக கிடைக்கப் பெறும் முறைப்பாடுகளை தீர்த்தல்

தேசிய சுகாதார மூலோபாய பொது அபிவிருத்தி திட்டம் (National Health Strategic Master Plan) 2016 – 2025 இன் நிவாரண சேவை (Curative Servicee) பிரிவில் தனியார் சுகாதார பிரிவின் ஒழுங்குபடுத்தல், அபிவிருத்தி மற்றும் வலுவூட்டல் தொடர்பான நிகழ்சித் திட்டத்தின் கீழ் குறிப்பிட்டுள்ள தனியார் வைத்தியசாலைகள், மருத்துவ நிலையங்கள், முழுநேர மற்றும் பகுதி நேர சாதாரண மருத்துவ நிலையங்கள், முழுநேர மற்றும் பகுதி நேர பல் அறுவை சிகிச்சை நிலையங்கள், மருத்துவ ஆய்வுகூடங்கள், தனியார் பிணியாளர் வண்டி சேவை, இல்ல தாதி பராமரிப்பு, சலுவை பராமரிப்பு மற்றும் நீண்ட கால பராமரிப்பிற்காக, நியமங்கள் மற்றும் வழிகாட்டல்களை தயாரித்தலும், மனிதவள அபிவிருத்தி நிறுவனம் மற்றும் முறைப்பாடுகளை கையாளுவதற்காக நடைமுறைகளை தயாரித்து பூர்த்தி செய்துள்ளதாகவும், தேவையான திருத்தங்களின் பின்னர் அவற்றை வர்த்மானி அறிவித்தலாக வெளியிட சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துவருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறே இத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணிக்கூற்றினூடாக தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையுடன் இணைந்து நிறுவனங்களை பரீட்சிக்கும் போது, நிறுவனங்களிற்கு எதிராக முறைப்பாட்டாளர்களை கையாளும் போது, நிறுவனத்தினால் மேற்கொள்ளும் தவறுகளை குறைத்துக் கொள்ளல் மற்றும் குறித்த தண்டனைகளை நடைமுறைப்படுத்தும் போது செயற்படும் ஒழுங்குபடுத்தல் பொறிமுறையை வலுவூட்ட வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டள்ளது.

2006 இன் 21 இலக்க தனியார் மருத்துவ நிறுவங்கள் (பதிவு செய்தல்) சட்டத்தின் 18(2)(எ) பிரிவின் பிரகாரம் ''ஈடுபாடு காட்டும் அல்லது அதிருப்தியடைந்த நபரொருவரினால் ஏதேனும் தனியார் மருத்துவ நிறுவனத்திற்கு அல்லது அதனுடன் தொடர்புடைய நபரொருவரிற்கு எதிராக சமர்ப்பிக்கும் ஏதேனும் முறைப்பாட்டை ஏற்கும் போது மற்றும் அம் முறைப்பாட்டை இறுதியாக அனுப்பும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் அல்லது செயன்முறை'' தொடர்பாக இச் சட்டத்தின் 18(2)(1) பிரிவின் பிரகாரம் அமைச்சரினால் கட்டளைகளை தயாரிக்க முடியுமான போதும், அமைச்சரினால் அவ்விடயங்கள் தொடர்பான கட்டளைகளை தயாரித்ததற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததுடன் தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையினால் PHSRC Guideline 05 – Complain Handling Procedure எனும் பெயரில் 2021 மார்ச்

19 திகதி 02 பக்கங்களுடன் கூடியதாக (12 விடயங்கள் உள்ளடங்கிய) முறைப்பாடுகள் தொடர்பான வழிகாட்டியொன்றை மாத்திரம் தயாரித்திருந்தது.

இந்த வழிகாட்டி தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இவ்வாறு தயாரிக்கப்பட்ட வழிகாட்டியினுள் முறைப்பாடுகளை தீர்ப்பதற்காக ஒவ்வொரு தரப்பினராலும் எடுக்க வேண்டிய உச்ச கால எல்லை பற்றி குறிப்பிடப்படவில்லை. (புலனாய்வு அறிக்கை மாகாண சுகாதார சேவை பணிப்பாளரினால் ஒரு மாதத்தினுள் ஒழுங்குபடுத்தல் சபைக்கு அனுப்ப வேண்டுமென மாத்திரம் 10 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.)

(ஆ) முறைப்பாடுகளை முன்வைக்கும் தரப்பினருக்கு முறைப்பாடு கிடைத்தாக அறிவித்தல் மற்றும் அதன் பெறுபேறு / பின்னூட்டல் குறிப்பிட்டு அனுப்பும் முறையொன்று இந்த வழிகாட்டலில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே நிகழ்நிலை முறையூடாக முறைப்பாடுகளை முன்வைக்கும் முறைமையொன்று தொடர்பாக இந்த வழிகாட்டியில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) அவ்வாறே இந்த முறைப்பாடுகள் தொடர்பாக ஒழுங்குபடுத்தல் சபையினால் சிறிய, நடுத்தர, பாரிய என வகைப்படுத்தி காண்பித்திருக்காததுடன் தனியார் மருத்துவ நிறுவனங்கள் தொடர்பாக கிடைக்கும் முறைப்பாடுகளின் தன்மையின் பிரகாரம் தனிநபர் வாழ்கைக்கு அதிக தாக்கம் ஏற்படுத்தியுள்ள முறைப்பாடுகளின் பிரதியொன்றை குறித்த தனியார் சுகாதார நிறுவனத்திற்காக திறக்கப்பட்டுள்ள கோவைக்குள் உட்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அவ்வாறே முறைப்பாடுகள் தொடர்பாக அந்த தனியார் மருத்துவ நிறுவனமொன்று குற்றவாளியாகி இழப்பீடு வழங்கும் சந்தர்ப்பமொன்றில் அந் நிறுவனத்தை கறைநிறற் பட்டியற்படுத்த அல்லது தரப்படுத்தலின் போது கீழ் நிலைப்படுத்த நடவடிக்கை எடுக்க குறித்த விதி தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அதன் பிரகாரம் வழிகாட்டல்களை தயாரிக்கும் போது மேற்குறித்த விடயம் தொடர்பாக மற்றும் 2006 இன் 21 இலக்க தனியார் மருத்துவ நிறுவங்கள் (பதிவு செய்தல்) சட்டத்தின் 18(2)(எ) பிரிவின் பிரகாரம் குறிப்பிட்டுள்ள குறித்துறைத்த முறைமையை பின்பற்றவில்லை என அவதானிக்கப்பட்டது.

(உ) தனியார் மருத்துதவ நிறுவனங்கள் தொடர்பாக கிடைக்கும் முறைப்பாடுகள் (புதிய பந்தியொன்று)

தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் சபையின் 2024 சனவரி 29 திகதிய PHSRC/Acc/In/01/2024 இலக்கம் கொண்ட கடிதத்தின் பிரகாரம் கடந்த பல ஆண்டுகளாக முறைப்பாடுகளை தீர்க்கும் முன்னேற்றம் திருப்திகரமான நிலையில் இல்லையென பின்வரும் தரவுகளின் பிரகாரம் அவதானிக்கப்படுகின்றது.

ஆண்டு	**முறைப்பாட்டு எண்ணிகை**	**தீர்க்கப்பட்ட எண்ணிக்கை**
2018	30	10
2019	17	இல்லை
2020	18	13
2021	13	09

2022	27	23
2023	56	13

3.16.2. முறைப்பாடுகள் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு.

இது தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு.

(அ) கணக்காய்வினால் 2023 மார்ச் 03 திகதி சுட்டிக்காட்டும் வரை தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையிற்கு கடந்த ஆண்டுகளில் கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பாக முறையான தரவுத் தொகுதியொன்றை பேணிச் சென்றிருக்கவில்லை.

(ஆ) 2023 பெப்ரவரி 27 திகதி வரையும் சபையினால் முறைப்பாடுகள் தொடர்பான படிவேடொன்றை (Register) நடாத்திச் சென்றிருக்காததுடன் இதன் காரணமாக ஒரு ஆண்டில் கிடைக்கும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை, முறைப்பாடு கிடைத்த மூலம், முறைப்பாட்டிற்காக எடுக்கப்பட்ட முன்நடவடிக்கைகள், தீர்க்கப்பட்ட முறைப்பாட்டு எண்ணிக்கை, ஆகிய விபரங்களை தெளிவாக அடையாளங்காணும் முறைமையொன்று இருக்கவில்லை.

(இ) முறைப்பாடொன்று கிடைத்த பின்னர் அதற்காக கோவையொன்றை திறந்து குறிப்பு பத்திரத்தை (Minute Sheet) இட்டு முன்நடவடிக்கை மேற்கொண்டு செல்ல வேண்டிய போதும், 2020 முதல் 2023 வரையான காலத்தினுள் கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பாக திறக்கப்பட்ட கோவைகள் தொடர்பாக, தகவல்கள் உள்ளடங்கிய கோவை படிவேடொன்றை நடாத்திச் சென்றிருக்காததுடன் கணக்காய்வு சந்தர்ப்பத்தில் நிறுவனத்திலிருந்து கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக பெற்றுக் கொண்ட முறைப்பாடுகள் தொடர்பான 49 கோவைகளில் 33 கோவைகளிற்குரிய முறைப்பாட்டு இலக்கம் மற்றும் காரணத்தை குறிப்பிட்டு முறையாக கோவைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அவற்றில் 42 கோவைகளில் குறிப்பு பத்திரம் இடப்பட்டிருக்கவில்லை.

3.16.3. முறைப்பாட்டு புலனாய்வு உப குழு

இது தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு.

(அ) தனியார் மருத்துவ நிலையங்களுடன் தொடர்புடைய பொது மக்களின் துயரங்கள் / முறைப்பாடுகள் கலந்துரையாடப்பட்டதன் பின்னர் புலனாய்வு செய்து அது தொடர்பான தீர்மானங்கள் முடிவுகளை எடுப்பதற்காக அமைக்கப்பட்ட முறைப்பாட்டு புலனாய்வு உப குழுவிற்காக 2022 ஆண்டு வரை 8 அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டிருந்ததுடன் தனியார் மருத்துவமனை மற்றும் பராமரிப்பு இல்ல சங்கத்தின் 4 அங்கத்தவர் உள்ளடங்களாக ஒழுங்குபடுத்தல் சபையின் கட்டுப்பாட்டு சபைக்கு அமைச்சரினால் 5 அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். 2023 மார்ச் 10 திகதியின் பின்னர் நியமித்திருந்த 8 அங்கத்தவர்களில் தனியார் மருத்துவமனை மற்றும் பராமரிப்பு இல்ல சங்கத்தின் தலைவர் உள்ளிட்ட ஒழுங்குபடுத்தல் சபையின் கட்டுப்பாட்டு சபைக்கு அமைச்சரினால் நியமித்த 3 அங்கத்தவர்கள் இவ் உப குழுவிற்கு நியமிக்கப்பட்டிருந்தனர்.

(ஆ) ஆண்டு முழுவதும் பல தரப்பினர்களிடமிருந்து பல முறைப்பாடுகள் கிடைத்த போதும் இது தொடர்பாக கலந்துரையாடி தீர்வு வழங்க போதியளவு எண்ணிக்கையான உப குழு கூட்டங்கள் நடாத்தியிருக்காததுடன் 2017 முதல் 2023 ஜூன் 30 வரை நடாத்தியிருந்த மொத்த உப குழு கூட்ட எண்ணிக்கை 16 மாத்திரம் ஆனதுடன் அவற்றில் 2023 ஆண்டில் நடாத்தியிருந்த 05 உப குழு கூட்டங்களிற்காக அங்கத்தவர்களின் 37 இலும் குறைவாக பங்குபற்றியிருந்தனர். அவ்வாறே நடாத்தியிருந்த 16 கூட்டங்களில் 10 உப குழு கூட்டங்களிற்காக பங்குபற்றிய எண்ணிக்கையில், ஒழுங்குபடுத்தல் சபையின்

கட்டுப்பாட்டு சபைக்கு அமைச்சரினால் நியமித்த தனியார் மருத்துவமனை மற்றும் பராமரிப்பு இல்ல சங்க அங்கத்தவர்களின் பங்குபற்றல் 50 சதவித்திற்கு மற்றும் அதற்கு அதிகமாக காணப்பட்டதாகவும், இந்த 16 கூட்டங்களில் 03 கூட்டங்களிற்கு மாத்திரம் சட்டப் பிரதிநிதி பங்குபற்றியிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(இ) கணக்காய்வு நடவடிக்கைகளிற்காக சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாட்டு உப குழு கூட்ட அறிக்கை பரீட்சிப்பின் போது, சில முறைப்பாடுகள் பல கூட்டங்களிலும் கலந்துரையாடப்பட்டு இருந்ததாகவும், அதற்காக நீண்ட காலமொன்றை செலவிட்டுள்ளதாகவும் பின்வரும் விடயங்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டன.

(i) இலக்கம் PHSRC/CSC/640/2020 கொண்ட முறைப்பாடு 2020 ஜுலை 24 திகதி இடம்பெற்ற கூட்டத்தில் தனியார் வைத்தியசாலையொன்றில் தற்காலிகமாக பதிவு செய்துள்ள இதய சத்திர சிகிச்சை மருத்துவரொவர் தொடர்பாக கலந்துரையாடப்பட்டிருந்ததுடன் அங்கு செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரமொன்று இன்றி இந்த வைத்தியர் கடமையாற்றியுள்ளதாக வெளிப்படுத்திக் கொண்டுள்ளதால் முன்நடவடிக்கை எடுக்க அமைச்சரின் அறிக்கை கிடைக்கு வரை காத்திருக்க தீர்மானிக்கப்பட்டிருந்தது. மீண்டும் இம் முறைப்பாட்டு இலக்கத்தின் கீழ் கலந்துரையாடிதாக குறிப்பொன்று 2021 செப்டெம்ர் 27 திகதி கூட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அது கொவிட் தடுப்பூசி வழங்குவது தொடர்பான பிரச்சினையானது. அதன் பிரகாரம் ஒரே முறைப்பாட்டு இலக்கத்தின் கீழ் ஒன்றுக் கொன்று முரணான இரண்டு விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளதாக, இந்த முறைப்பாடுகள் இரண்டும் தீர்க்கப்பட்டதற்கான சான்றுகள் இல்லையெனவும், ஓராண்டிற்கு அதிக காலம் இதற்காக செலவிட்டுள்ளதாகவும், கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ii) இலக்கம் PHSRC/CSC/649/2020 கொண்ட முறைப்பாடு தனியார் வைத்திசாலை ஒன்றில் மருத்துவ கவனயீனத்தின் மீது இடம்பெற்ற இறப்பொன்று தொடர்பாக 2020 ஜுலை 24 திகதி கலந்துரையாடியிருந்ததுடன் இம் முறைப்பாடு மேல் மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகத்திற்கு புலனாய்வு நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டிருந்தது. 2022 ஜுலை 21 திகதி கூட்ட அறிக்கையின் பிரகாரம் மேல் மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகத்தில் அலுவல்கள் இந்த வைத்தியசாலையின் மருத்துவ பணிப்பாளர் மற்றும் நிறைவேற்று அலுவலரை சந்தித்ததாக குறிப்பிட்டுள்ளதுடன் பரிந்துரையாக நோயாளியின் மேன்முறையீட்டை கவனத்திற் கொண்டு கட்டணத்தை குறைக்குமாறும் நல்ல நடைமுறைகள் (Good practices) பின்பற்றப்படுமென எதிர்பார்ப்பதாகவும் வைத்தியசாலைக்கு அறிவிக்க தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் இம் முறைப்பாட்டை தீர்க்க இரண்டு வருடங்கள் கடந்திருந்தன.

(iii) இலக்கம் PHSRC/CSC/651/2020 கொண்ட முறைப்பாடு தனியார் வைத்திசாலை ஒன்றினால் மேற்கொள்ளப்பட்ட நியாயமற்ற கட்டண அறவீடு தொடர்பாக கிடைத்திருந்த முறைப்பாடொன்றாகும். இது தொடர்பாக 2021 ஜுலை 24 திகதி கூட்டத்தில் கலந்துரையாடியிருந்ததுடன் மேல் மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகத்திற்கு புலனாய்வு நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டிருந்தது. 2022 ஜுலை 21 திகதிய கூட்ட அறிக்கை பிரகாரம் வைத்தியசாலையினால் நோயளரிற்கு கட்டணத்தை குறைப்பதாக குறிப்பிட்டுள்ளதுடன் இம் முறைப்பாட்டை தீர்ப்பதற்கும் ஓராண்டு காலம் கடந்திருந்தது.

(iv) இலக்கம் PHSRC/CSC/655/2020 கொண்ட தனியார் அறுவை சிகிச்சை வைத்திசாலை ஒன்றிற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடு தொடர்பாக

மற்றும் அதற்காக வைத்தியசாலையினால் வழங்கிய பதில் தொடர்பாக திருப்தியடைய முடியாதென குறிப்பிட்டு கிடைத்திருந்த இம்முறைப்பாடு தொடர்பாக மற்றும் அதற்காக வைத்தியசாலையினால் வழங்கிய பதில் தொடர்பாக திருப்தியடைய முடியாதென 2021 செப்டம்பர் 27 கூட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. 2022 மார்ச் 08 திகதி கூட்ட அறிக்கையின் பிரகாரம் சிகிச்சை தாமதித்தது தொடர்பாக மீண்டும் வைத்தியசாலையிலிருந்து மீட்சிக்கு காரணம் கோரவும், இழப்பீடு வழங்குவதற்காக சபைக்கு சட்ட ஏற்பாடுகள் இல்லையெனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 06 மாதங்கள் கடந்துள்ள போதும், இம் முறைப்பாட்டை தீர்த்திருக்கவில்லை.

(v) இலக்கம் PHSRC/CSC/822/2021 கொண்ட தனியார் வைத்திசாலை ஒன்றில் மேற்கொண்ட கண் சிகிச்சை தொடர்பாக வைத்திய கவனயீனம் என்பது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடு 2021 செப்டம்பர் 27 திகதி கலந்துரையாடப்பட்டு இருந்ததுடன் அங்கு வைத்தியசாலையினால் உள்ளக புலனாய்வொன்றை மேற்கொள்ள வேண்டுமென தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2022 மார்ச் 08 திகதி கூட்டத்தில் இவ் விடயத்தை இலங்கை மருத்துவ சபைக்கு சமர்ப்பிக்க வேண்டுமென முறைபாட்டாளரை அறிவூட்ட தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 06 மாதங்கள் கடந்த பின்னரும் மீண்டும் முறைப்பாட்டாளருக்கே சமர்ப்பித்துள்ளதாக அதவானிக்கப்பட்டது.

(vi) இலக்கம் PHSRC/CSC/842/2022 கொண்ட தனியார் வைத்திசாலை ஒன்றில் மேற்கொண்ட முதலாவது அறுவை சிகிச்சை தோல்வியடைந்த காரணத்தால் மனோநிலை பாதிக்கப்பட்டுள்ளதாக பெண் முறைப்பாட்டாளர் வைத்தியசாலை ஆளணியினரிற்கு குற்றம் சுமத்தி மேற்கொண்ட முறைப்பாடு தொடர்பாக 2022 மார்ச் 08 திகதி கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டிருந்ததுடன் அங்கு வைத்தியசாலை ஆளணியினரிற்கு நோயாளர்களின் துயரங்களை கையாளுவது தொடர்பான பயிற்சி வழங்க வெண்டுமென வைத்தியசாலையை அறிவூட்டவும், விரிவான பட்டியலொன்றை முன்வைக்குமாறும் கலந்துரையாடப்பட்டிருந்தது. 2023 சனவரி 27 திகதி கூட்டத்தில் விரிவான பட்டியலொன்றை வைத்திசாலையிடம் வினவ வேண்டுமென கலந்துரையாடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 10 மாதங்கள் கடந்திருந்த போதும் இம் முறைப்பாடுகள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை என கணக்காய்வின் போது அதவானிக்கப்பட்டது.

3.16.4. ஏனைய தரப்பினரால் முறைப்பாடுகள் விசாரணை செய்தல்

தனியார் சுகாதார சேவை நிறுவனங்கள் தொடர்பாக கிடைக்கும் முறைப்பாடுகளை மேல் மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகத்தினால் புலனாய்வு செய்யப்பட்ட சந்தர்ப்பங்கள் போன்றே சுகாதார அமைச்சின் அவசர சுற்றிவலைப்பு பிரிவினால் புலனாய்வு செய்த சந்தர்ப்பங்கள் கணக்காய்விற்கு அவதானிக்கப்பட்டது.

இது தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு.

(அ) சுகாதார அமைச்சின் அவசர சுற்றிவலைப்பு பிரிவினால் புலனாய்வு நடவடிக்கைகளுக்காக செல்லும் போது குழுவொன்று பங்குபற்றுவதாக அவ் அவ்வறிக்கை பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்ட போதும், மேல் மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகத்தினால் முறைப்பாடுகளை புலனாய்வு செய்யப்பட்ட சந்தர்ப்பங்களில் அதற்காக குறித்த வைத்தியர் மாத்திரம் பங்குபற்றியிருந்ததாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட சில முறைப்பாட்டு அறிக்கை பரீட்சிப்பின் போது முறைப்பாடொன்று கிடைத்த திகதியிலிருந்து அதனை புலாய்வு செய்வதற்காக 04 மாதங்கள் முதல் ஒரு வருட அளவான கால தாமதம் கடந்துள்ளதாக மாதிரி கணக்காய்வின் போது அதவானிக்கப்பட்டது.

(இ) கடந்த 3 ஆண்டுகளினுள் தனியார் சுகாதார சேவை நிறுவனங்கள் தொடர்பாக நுகர்வோர் அதிகாரசபைக்கு கிடைத்த 39 முறைப்பாடுகளில் 24 முறைப்பாடுகள் தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபைக்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் அச்சபையினால் அந்த முறைபாடுகள் தொடர்பாக எடுக்கப்படும் துரித முயற்சிகளை எடுத்திருக்கவில்லை.

3.16.5. தனியார் மருத்துவ நிறுவனங்களில் பௌதீக வளங்கள் / இட வசதிகளை ஒழுங்குபடுத்தல்

2006 இன் 21 இலக்க தனியார் மருத்துவ நிறுவங்கள் (பதிவு செய்தல்) சட்டத்தின் 18 பந்தியின் கீழ் தயாரிக்கப்பட்ட கட்டளையென 2007 நவம்பர் 02 திகதிய இலக்கம் 1521/26 கொண்ட அதி விஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2007 இன் 1 இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல்) கட்டளைகளில், தனியார் மருத்துவ நிறுவனங்களில் பேணிக் கொள்ள வேண்டிய பௌதீக வளங்கள் தொடர்பாக குறிப்பிட்டுள்ள போதும் அதன் பிரகாரம் பௌதீக வளங்களை பேணிச் செல்லாத நிறுவனங்கள் பற்றிய முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

3.17. தனியார் மருத்துவ நிறுவனங்கள் தொடர்பான தரவுத் தொகுதி

இது தொடர்பாக பின்வரும் கொள்கைகள் மற்றும் திட்டங்களினுள் கலந்துரையாடப்பட்டிருந்தது.

(அ) தேசிய சுகாதார மூலோபாய பொது அபிவிருத்தி திட்டம் (National Health Strategic Master Plan) 2016 – 2025 இன் நிவாரண சேவை (Curative Servicee) பிரிவில் தனியார் சுகாதார பிரிவின் ஒழுங்குபடுத்தல், அபிவிருத்தி மற்றும் வலுப்படுத்தல் தொடர்பான நிகழ்சித் திட்டத்தின் கீழ் குறிப்பிட்டுள்ள பிரகாரம் தனியார் மருத்துவ பிரிவினால் தேசிய தரவுத் தொகுதிக்கு சுகாதார தகவல்களை பெற்றுக் கொள்வது தொடர்பாக குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை தேசிய சுகாதாரக் கொள்கைளின் பரந்த உபாய வழிகாட்டலின் (ஈ) பிரிவின் பிரகாரம் சேவை வழங்கும் தரவுகளின் அடிப்படையிலான முறைமையொன்றின் ஊடாக சுகாதாரத் தொகுதியை வலுவூட்டி தொடர்ச்சியான சேவையை அனைத்து நோயாளர்களிற்கும் வழங்குதல் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் (ஈ) (1) பந்தி பிரகாரம் அனைத்து அரச மற்றும் தனியார் சுகாதார நிறுவனங்களிலும் நோயாளர்களின் உரிமைகள், பொது மக்களின் நம்பிக்கை மற்றும் நோயாளர்களின் / சேவை பெறுனர்களின் திருப்தியை உறுதி செய்வது தொடர்பாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(இ) 2017 சுகாதார தகவல்கள் தொடர்பான தேசிய கொள்கையில் கொள்கை வெளியீட்டு இலக்கம் 2.2 பிரகாரம் அரச மற்றும் அரச சார்பற்ற பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளும் சுகாதாரத்துடன் தொடர்புடைய தரவு உறுப்பை / தகவல்களை தேசிய சுகாதார தகவல் தொகுதியுடன் இணைக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. அங்கு பிரதான செயற்பாடுகள் இலக்கம் 2.2.1.1 பிரகாரம் அனைத்து அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் (தனியார் சுகாதார பாதுகாப்பு சேவை உள்ளடங்களாக), தேசிய சுகாதார தகவல் தொகுதிக்கு வழங்கும் சுகாதாரம் தொடர்பாக குறைந்தபட்ச தரவு உறுப்பு தொகுதியை 06 மாத காலத்தினுள் இணங்காண வேண்டுமென குறிப்பிட்டுள்ளதுடன், பிரதான செயற்பாடுகள் இலக்கம் 2.2.1.2 பிரகாரம் சுகாதாரம் தொடர்பான தரவு உறுப்புக்கள், அரச (சுகாதாரமற்ற) மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களிலிருந்து (தனியார் சுகாதார பாதுகாப்பு சேவை உள்ளடங்களாக) அறிக்கையிடும் பொறிமுறையொன்றை 18 மாத காலத்தினுள் நிறுவுவதனையும் குறிப்பிட்டுள்ளது.

(ஈ) 2006 இன் 21 இலக்க தனியார் மருத்துவ நிறுவங்கள் (பதிவு செய்தல்) சட்டத்தின் 10 (இ) பிரிவின் பிரகாரம் தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையின் ஒரு பணியாக குறித்த சுகாதார தகவல்கள் மற்றும் புள்ளிவிபரங்களை திரட்டுதல் மற்றும் வெளியிடுதல் மேற்கொள்ளப்பட வேண்டுமென குறிப்பிட்டுள்ளது.

(உ) தேசிய சுகாதார ஆய்வுகூட கொள்கை (National Health Laboratory policy) அமைச்சரவையினால் 2006 திசெம்பர் 01 திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், இக் கொள்கையினூடாகவும் அரச மற்றும் தனியார் பிரிவின் அனைத்து ஆய்வுகூடங்களினூடாக சுகாதாரம் தொடர்பான அனைத்து தரவுகளையும் திரட்டி குறித்த அரச நிறுவனங்களிற்கு வழங்க எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

மேற்குறித்த கொள்கை மற்றும் திட்டத்தினுள் குறிப்பிட்டுள்ள விடயங்களை 2023 ஜுன் 30 திகதி வரை எதிர்பார்த்தவாறு அடைந்து கொண்டிருக்கவில்லை. விபரம் பின்வருமாறு.

i. சுகாதார அமைச்சினால் 2020 ஆண்டில் சில தனியார் வைத்தியசாலைகளிற்காக தரவுகள் திரட்டுவது தொடர்பாக விழிப்பூட்டும் நிகழ்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தி இருந்தது. எனினும் தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையின் கட்டுப்பாட்டு அங்கத்தவர்களாக செயற்படும் தரப்பினருடன் தொடர்புடைய 09 தனியார் வைத்தியசாலைகளில் 03 வைத்தியசாலைகள் (02 வைத்தியசாலைகள் 2021 முதல் 2023 வரையும், ஒரு வைத்தியசாலை 2021 ஆண்டு மாத்திரமும்) மற்றும் இன்னும் ஒரு தனியார் வைத்தியசாலை 2021 முதல் 2023 வரையும் என்றவாறு சுகாதார அமைச்சிற்கு நோய், பால் மற்றும் வயதின் பிரகாரம் பகுப்பாய்வு செய்யப்பட்ட நோயாளர்களை வைத்திசாலைக்கு உட்சேர்த்தல் (Live Admissions) மற்றும் நோயாளர்கள் வைத்தியசாலைகளில் இருந்து வெளிச்செல்லல் (Live Discharges) மற்றும் இறப்பு ஆகிய தரவுகளை வழங்கியுள்ளதாக அவதானிக்கப்பட்டன. இதன் பிரகாரம் நாட்டின் பல தரப்பினர் பலதரப்பட்ட தீர்மானங்களை எடுப்பதற்காக அடிப்படையாகக் கொள்ளும் சுகாதாரம் தொடர்பான தரவுகளை உள்ளீடு செய்து சுகாதார அமைச்சினால் வருடாந்தம் வெளியிடும் சுகாதார தரவுகள் கைநூலில் (National Health Bullatien) தனியார் சுகாதார பிரிவின் செயற்பாடுகள் உள்ளடங்காமை தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக எடுக்கப்படும் தீர்மானங்கள் தொடர்பில் சீரற்றவாறு தாக்கம் செலுத்த முடியுமென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

ii. இலங்கையினுள் அமைந்துள்ள அனைத்து வகைக்கும் சொந்தமான தனியார் மருத்துவ நிறுவனங்களின் எண்ணிக்கை தொடர்பான சரியான தரவுகளை பெற்றுக் கொள்ளக் கூடிய மூலாதாரத்தை இனங்காண முடியாதிருந்ததுடன் இலங்கை மத்திய வங்கி அறிக்கையின் பிரகாரம் 2017 ஆண்டு முதல் 2022 வரை தனியார் வைத்தியசாலைகள் எண்ணக்கை மற்றும் கட்டில்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.



மூலாதாரம்:- மத்திய வங்கி அறிக்கை



மூலாதாரம்:- மத்திய வங்கி அறிக்கை

3.18. தனியார் சுகாதார சேவை நிறுவனங்கள் அரச துறைக்கு ஆற்றும் பங்களிப்பை மதிப்பிடல்

இது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு

(அ) வலயத்தின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையின் மரணங்களில் தொற்றாத நோய் காரணமாக ஏற்படும் இறப்பு 83 சதவீதமாவதுடன் நோய்களை முன்கூட்டி இனங்காணல் மற்றும் முகாமைத்துவம் தொடர்பாக அதற்காக ஆரம்ப மட்டத்தில் பங்களிப்பை வழங்கும் சுவ திவிய நிலையங்களில் காணப்படும் மனித மற்றும் பௌதீக வசதிகளில் குறைபாடுகளை போன்றே நரம்பியல் இதய நோய் இலங்கையில் மரணத்திற்கு பிரதான காரணமாக இருக்கும் பின்னணியில் மொத்த சனத்தொகைக்கு ஒப்பாக இதய அறுவை சிகிச்சைக்காக வைத்தியசாலை வசதிகள் இல்லாமை, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் காணப்படும் நெரிசல் போன்ற விடயங்களின் பொது உலகளாவிய சுகாதார மேவுகை எண்ணக்கருவின் பிரகாரம் (Universal Health Coverage) இலங்கை சமூகத்தை ஆரோக்கியமான தேசமொன்றாக உருவாக்கும் முயற்ச்சியை தனியாக அரச துறைக்கு மாத்திரம் சுமக்க முடியாத சுமையாக மாறியுள்ளது. அதன் பிரகாரம் அரசாங்கத்தினால் வழங்க முடியாத இந்த அதிக சுகாதார தேவைப்பாடுகளின் ஓர் பகுதியை தனியார் சுகாதாார துறையினால் வழங்கி சிறந்த பங்கழிப்பொன்றை வழங்கியுள்ளது. அவ்வாறே கடந்தகால கொரோனா தொற்று போன்ற நிலைமைகளிலும் அத்தொற்று நிலைமைகளை கட்டப்படுத்துவதற்காக தனியார் சுகாதார துறையினால் செய்யப்பட்ட பணிப்பொறுப்பை அரசாங்கம் என்ற வகையில் பாராட்ட வேண்டும்.

(ஆ) நாட்டின் பிரபலமான சில வைத்தியசாலைகளின் உத்தியோகபூர்வ இணையத்தளங்களில் தரவேற்றம் செய்யப்பட்டடுள்ள 2022 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i 2022 ஆண்டினுள் நிவாரண சேவைகள் மற்றும் விசாரணை நடவடிக்களிற்கு போன்றே அறுவை சிகிச்சைகளிற்கான தனியார் வைத்தியசாலைகளின் பங்களிப்பு பினவருமாறு.

பிரதான தனியார் வைத்தியசாலைகள்	**காணப்படும் கட்டில்கள் எண்ணிக்கை/ அறைகள் எண்ணிக்கை**	**நோயாளர்கள் உட்படுத்தல்**	**நிபுனத்துவ சந்திப்புகள்**	**ஆயுகூட பரிசோதனை எண்ணிக்கை**	**மேற்கொண்ட அறுவை சிகிச்சை எண்ணிக்கை**	**காணப்படும் ஆயுவுகூட எண்ணிக்கை**
------------------	-----------------	---------------	-----------------	------------------	-----------------	------------------
நவலோக வைத்தியசாலை	400	22,406	385,282	குறிப்பிடப்படவில்லை	11,501	குறிப்பிடப்படவில்லை
ஆசிரி வைத்தியசாலை குழுமம் (6 வைத்தியசாலைகள்)	700	3.5 மில்லியன்	குறிப்பிடப்படவில்லை	450,000 (மாதாந்தம்)	குறிப்பிடப்படவில்லை	குறிப்பிடப்படவில்லை
டர்டன் வைத்தியசாலை	அறைகள் -60 வாட்டுகள் -12	436,251	குறிப்பிடப்படவில்லை	2,468,515	36,590	1,617
லங்கா வைத்தியசாலை	350	25,019	குறிப்பிடப்படவில்லை	குறிப்பிடப்படவில்லை	குறிப்பிடப்படவில்லை	குறிப்பிடப்படவில்லை
ஹேமாஸ் வைத்தியசாலை	192	குறிப்பிடப்படவில்லை				32

மூலாதாரம் :- தனியார் வைத்தியசாலைகளின் வருடாந்த அறிக்கை

ii தேசிய / சர்வதேச நியமங்களிற்கு இணங்குதல்

தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையினால் கட்டாய தேவைபாடாக காண்பிக்கப்படாத போதும் தனியார் வைத்தியசாலைகளினால் பின்வருமாறு தேவையான தர சான்றிதழ்களை பெற்றுக் கொண்டு, தரமான சேவையை வழங்குவதற்கு முயன்றுள்ளதையும் அரசாங்கத்தினால் மேலும் தூண்டுதல் வேண்டும். நாட்டின் பிரபலமான சில வைத்தியசாலைகளினால் பெற்றுக் கொண்ட அவ்வாறான தர சான்றிதழ்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு

அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழின் பெயர்	**கட்டுப்பாட்டு சபையை பிரதிநிதிப்படுத்தும் வைத்தியசாலைகள்**			
	ஆசிரி வைத்தியசாலை குழுமம்	**நவலோக வைத்தியசாலை**	**டர்டன்ஸ் வைத்தியசாலை**	**ஹேமாஸ் வைத்தியசாலை**
--------------------------------------	-----------------	-----------------	------------------	------------------
ISO-9001:2015 Quality Management SystemsCertificates	Only Asiri Central Hospital	உள்ளது	குறிப்பிடப்படவில்லை	குறிப்பிடப்படவில்லை
OH-SAS 18001:2007 Occupational Health & Safety Management Systems Certification	Asiri Group of companies (6 hospitals	குறிப்பிடப்படவில்லை	குறிப்பிடப்படவில்லை	குறிப்பிடப்படவில்லை

ISO 14001:2015 Environmental Management System	Asiri Group of companies (6 hospitals	குறிப்பிடப்பட வில்லை	குறிப்பிடப்படவி ல்லை	குறிப்பிடப்படவில் லை
ISO 22000:2018 Food Safety Management Certification	Asiri Group of companies (6 hospitals	குறிப்பிடப்பட வில்லை	குறிப்பிடப்படவி ல்லை	குறிப்பிடப்படவில் லை
Australian Council ON Health care Standards International(ACH-SI)	Exclude Asiri Central Hospital(5)	குறிப்பிடப்பட வில்லை	குறிப்பிடப்படவி ல்லை	குறிப்பிடப்படவில் லை
Joint Commission International(JCT)Accrediation the gold standard in global healthcare.JCT is widly accepted to be the author & evaluator of the most rigorous international standards in patient safety & quality	Only Asiri Central Hospital		குறிப்பிடப்படவி ல்லை	குறிப்பிடப்படவில் லை
ISO-15,189:2012	குறிப்பிடப்படவி ல்லை	குறிப்பிடப்பட வில்லை	பெறப்பட்டுள்ள து	பெறப்பட்டுள்ளது
ISO-27,001	குறிப்பிடப்படவி ல்லை	குறிப்பிடப்பட வில்லை	பெறப்பட்டுள்ள து	
MTQUA-Certification	குறிப்பிடப்படவி ல்லை	குறிப்பிடப்பட வில்லை	குறிப்பிடப்படவி ல்லை	பெறப்பட்டுள்ளது
CAP Certification	குறிப்பிடப்படவி ல்லை	குறிப்பிடப்பட வில்லை	குறிப்பிடப்படவி ல்லை	பெறப்பட்டுள்ளது

மூலாதாரம்:- தனியார் வைத்தியசாலைகளில் வருடாந்த அறிக்கை

(இ) ஊழியர் படை பயன்படல்

இந்த தனியார் சுகாதார நிறுவனங்களில் பணியாற்றும் பகுதி நேர அரசு சுகாதார தொழிற்துறையினரிற்கு மேதிகமாக அவற்றில் பணியாற்றும் முழுநேர மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை தொடர்பாக தரவுகள் சேகரிக்கப்படாததுடன் தேசிய பொருளாதாரத்திற்கு பயனுள்ள சேவையை வழங்க முடியுமான ஊழியர் படையினரால் வழங்க வேண்டிய பகுதியை சேவையாற்ற இந்த நிறுவனங்களினால் வழங்கும் பங்களிப்பும் கவனிக்கத்தக்க நிலையில் காணப்படுவதாக அந்நிறுவனங்களின வருடாந்த அறிக்கைகளை பகுப்பாய்வு செய்யும் போது அவதானிக்கப்பட்டது. நாட்டின் பிரபலமான சில மருத்துவமனைகளில் 2022 ஆண்டின் மொத்த மனித வளங்கள் பற்றிய தரவுகள் பின்வருமாறு.

வைத்தியசாலையின் பெயர் ----------------------------	நிபுனத்துவ மருத்துவர்களின் எண்ணிக்கை ----------------------------	மொத்த ஊழியர் எண்ணிக்கை ---------------------
நவலோக வைத்தியசாலை	800	2,095
ஆசிரி வைத்தியசாலை குழுமம்	1,700	
டர்டன் வைத்தியசாலை	குறிப்பிடப்படவில்லை	2,032
ஹேமாஸ் வைத்தியசாலை	குறிப்பிடப்படவில்லை	2,974
லங்கா வைத்தியசாலை	1016	2,008

மூலாதாரம்:- தனியார் வைத்தியசாலைகளில் வருடாந்த அறிக்கை

3.19. தனியார் சுகாதாரப் பிரிவு அபிவிருத்திப் (PHSD) பிரிவின் மற்றும் தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையின் (PHSRD) நிறுவன கட்டமைப்பு

3.19.1. ஆளணியினர்

(அ) தனியார் சுகாதார பிரிவு அபிவிருத்திக்காக பணிப்பாளர் ஒருவரின் தலைமையில் தனியார் சுகாதார அபிவிருத்தி பிரவொன்று சுகாதார அமைச்சினால நிறுவப்பட்டுள்ளதுடன் அங்கு தனியார் மருத்துவ பிரிவு அபிவிருத்திக்கு பொறுப்பான பணிப்பாளர் மற்றும் 03 உதவி ஆளணியினரும் பணியாற்றி வருகின்றனர். தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் சபையினால், 11 அலுவலர்களைக் கொண்ட ஆளணியினரை பேணிச் செல்வதுடன் 2021 நவம்பர் 16 திகதி பொது முயற்சிகள் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட செயற்பாட்டு கைநூலின் 3.1 பத்தி பிரகாரம் அந்த ஆளணியினரற்காக பொது திறைசேரியின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டிய போதும், அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக அனைத்து மாகாண சுகாதார சேவை அலுவலகங்களிலும் குறிப்பாக தனியார் மருத்துவ நிறுவனங்களின் ஒழுங்குபடுத்தல் பணிகளிற்காக நியமிக்கப்படாத போதும் சில ஆளணியினர் இப் பணிக்காக பங்களிக்கின்றனர்.

(ஆ) அலுவலக முகாமைத்துவ உப குழு

இந்த குழுவிற்காக 2017 முதல் 2022 வரை 10 அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டிருந்ததுடன் 2023 மார்ச் 10 திகதியின் பின்னர் அது 07 பேர்களாக இருந்தனர். ஒழுங்குபடுத்தல் சபையின் கொள்வனவுகள், மனிதவள முகாமைத்துவ பிரச்சினைகள், நிர்வாக முடிவுகள், தீர்மானமெடுத்தல் போன்றவற்றின் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக நிறுவப்பட்ட இந்த உப குழுவிற்கு 2023 இல் தெரிவு செய்யப்பட்டிருந்த 7 பேர்களில் 5 பேர்களுமே ஒழுங்குபடுத்தல் கட்டுப்பாட்டு சபைக்கு அமைச்சரால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்கள் ஆவர். அவற்றில் 2 உறுப்பினர்கள் தனியார் மருத்துவமனைகள் மற்றும் பராமரிப்பு இல்ல சங்கத்தின் பிரதிநிதிகள் ஆவர். இக் குழுவின் தலைவராக தனியார் மருத்துவமனைகள் மற்றும் பராமரிப்பு இல்ல சங்கத்தின் தலைவரே நியமிக்கப்பட்டிருந்தார்.

2023 ஆண்டில் இந்த உப குழுவிற்கான ஒழுங்குபடுத்தல் சபையின் கட்டுபாட்டு சபைக்கு அமைச்சரால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் பங்குபற்றல் 67 சதவீதம் முதல் 75 சதவீதம் வரை ஆகும்.

3.19.2. நிதிய அமைவு

2006 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல்) சட்டத்தின் 12 பிரிவின் பிரகாரம் தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் சபைக்கு ஒரு நிதியம் இருக்க வேண்டுமெனவும், சபையினால் தமது கடமைகளை நிறைவேற்றும் போது கட்டணம், உப அளவுகள், அறவீடுகளாக அல்லது வேறு வகையில் அல்லது சபைக்கு கிடைக்க முடியுமான அனைத்து தொகைகளும் நிதியத்திற்கு கிடைக்க வேண்டியதாக குறிப்பிபட்டுள்ளது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்யும் போது பதிவுக் கட்டணமாக சபைக்கு வருமானம் கிடைத்த போதும் ஒழுங்குபடுத்தல் சபை ஆரம்பம் முதலே (2007) 2023 செப்டம்பர் 15 திகதி நடைபெற்ற கட்டுப்பாட்டு சபை கூட்டத்தில் பதிவுக் கட்டணத்தை 50 சதவீதத்தால் அதிகரிக்கும் தீர்மானிக்கும் வரை எவ்வித திருத்தமும் செய்யப்படவில்லை. அறவிடப்படும் பதிவுக் கட்டணம் பற்றிய தகவல் பின்வருமாறு.

தனியார் மருத்துவ நிறுவனம் -------------------------------	**வகை** ---------	**வருடாந்த பதிவுக் கட்டணம்** -------------------- **(ரூபா)**
தனியார் வைத்தியசாலை மற்றும் பராமரிப்பு இல்லம்	கட்டில் 1 முதல் 25	20,000
	கட்டில் 25 முதல் 50	30,000
	கட்டில் 50 முதல் 100	50,000
	கட்டில் 100 மேல்	ஒரு கட்டிலிற்காக ரூபா 1,000 வீதம்
மருத்துவ ஆய்வுகூடம்	சிறிய ஆய்வுகூடம்/ஒன்று திரட்டும் நிலையம்	5,000
	நடுத்தர ஆய்வுகூடம்	15,000
	பாரியளவான ஆய்வுகூடம்	50,000
மருத்துவ நிலையம்	மருத்துவ நிலையம்/நோயாளர்களை பரிசோதிக்கும் நிலையம் /பல்நேர உபசரணை மருத்துவ நிலையம், செனல் சேவை	15,000
	முழுநேர சாதாரண மருத்துவ தொழிலில் ஈடுபடல் /மருந்து நிலையம் /மருத்துவ பிணி ஆய் நிலையம்/முழுநேர பல் அறுவை சிகிச்சை நடவடிக்கை	10,000
	பகுதிநேர சாதாரண மருத்துவ தொழிலில் ஈடுபடல் /மருந்து நிலையம் /மருத்துவ பிணி ஆய் நிலையம்/முழுநேர பல் அறுவை சிகிச்சை நடவடிக்கை	5,000
	முழுநேர மருத்துவ நிபுணத்துவ தொழிலில் ஈடுபடல்	15,000

	பகுதிநேர மருத்துவ நிபுணத்துவ தொழிலில் ஈடுபடல்	10,000
	தனியார் பிணியாளர் வண்டி சேவை	10,000
	இல்ல பராமரிப்பு தாதி சேவை	5,000
	இரத்த வங்கி	25,000

(ஆ) பதிவு செய்ய வேண்டிய ஒரு குறிப்பிட்ட காலஎல்லை சட்டத்தில் அல்லது முன்னோடி ஆலோசனையினூக குறிப்பிடப்படாதன் காரணமாக மருத்துவ நிறுவனங்களின் பதிவுக்காக எத்தினத்திலேனும் பணம் கிடைத்த பின்னர் குறித்த ஆண்டிற்கான பதிவுச் சான்றிதழ்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதுடன் தண்டப்பணம் அறவிடப்படாததால் ஆண்டின் ஆரம்பத்தில் சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானம் தாமதமாக கிடைத்திருந்தது. இந் நிலைமை 2023 ஆகஸ்ட் 11 திகதி நடைபெற்ற 173 ஆம் கட்டுப்பாட்டு சபைக் கூட்டம் வரை திருத்தப்படவில்லை.

(இ) மேற்குறித்த சட்டத்தின் 3 (5) பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராலும் சேகரிக்கப்படும் கட்டணத்தில் ஐம்பது சதவீதம் அந்தந்த மாகாண சபைக்கு அனுப்பப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ஒழுங்குபடுத்தல் சபைக்கு கிடைத்த பதிவு வருமானத்திலிருந்து மாகாண சபைகளுக்கு அனுப்ப வேண்டிய 50 சதவீதத் தொகையின் 2023 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் செலுத்த வேண்டிய மீதி ரூபா 44,518,057 ஆனதுடன் 2023 ஆம் ஆண்டு செலுத்த வேண்டிய தொகை ரூபா 13,828,250 தொகையுடன் செலுத்த வேண்டிய மொத்த தொகை ரூபா 58,346,307 இலிருந்து 2023 ஆண்டினுள் ரூபா 21,446,466 தொகை அதாவது 37 சதவீதத்தை மாத்திரமே தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஈ) ஒழுங்குபடுத்தல் சபையினால் சேகரிக்கப்படும் வருடாந்த பதிவுக் கட்டண வருமானத்திலிருந்து ஐம்பது வீதத்தை மாகாண பிரதான செயலாளர்களிற்கு வழங்குவதற்கு முன்னர், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் தனியார் சுகாதாரத் துறை அபிவிருத்தி தொடர்பாக வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டுடன் வருடாந்த உத்தேசத்தை சமர்ப்பிக்க வேண்டுமென மற்றும் ஆண்டிறுதியில் செலவினம் மற்றும் செயற்பாடுகள் தொடர்பான அறிக்கையொன்றை சமர்ப்பிக்க வேண்டுமென்ற ஏற்பாடுகளை உள்ளடக்கி 2006 இன் 21 இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்கள் பதிவு செய்தல் சட்டத்தின் 3 (5) ஆம் பிரிவைத் திருத்துவதற்கு 2015 ஜூலை 09 திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது. அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்து 07 வருடங்கள் கடந்துள்ள போதிலும் சட்டத்தை திருத்தியிருக்காததுடன் வருடாந்த பதிவுக் கட்டண வருமானத்தில் 50 வீதத் தொகையில் ஒரு பகுதி மாத்திரம மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

(உ) மாகாண சபைகளின் செலவுகளை மேற்கொள்வதற்கான எந்தவொறு ஏற்பாடும் சட்டத்தில் வழங்கப்படாத போதும் மேல் மாகாண சுகாதார பணிப்பாளர் அலுவலகத்திற்கு இணைக்கப்பட்டுள்ள அலுவலர்களின் தொலைபேசி படிகள், போக்குவரத்து செலவுகள் மற்றும் சம்பளமாக 2023 ஆம் ஆண்டினுள் ரூபா 1,307,300 தொகையும், சபரகமுவ மாகாணத்தில் இரண்டு அலுவலர்களின் சம்பளத்திற்காக ரூபா 1,614,037 தொகையும், ஒழுங்குபடுத்தல் சபையினால் செலுத்தப்பட்டிருந்தன. மேற்படி சட்டத்தின் 3 (5) பிரிவின் பிரகாரம் மேல் மற்றும் சபரகமுவ மாகாண சபைகளுக்கு செலுத்த வேண்டிய பதிவுக் கட்டண வருமானத்தில் இருந்து அத் தொகை கழிக்கப்பட்டிருந்தது.

3.19.3. சபையின் நிதி ரீதியான செயலாற்றுகை

சபையின் கடந்த சில ஆண்டுகளின் நிதி செயலாற்றுகை பின்வருமாறு.

ஆண்டு	வருமானம் (ரூபா)	செலவினம் (ரூபா)	மிகை/(பற்றாக்குறை) (ரூபா)
2007	21,894,960	10,878,557	11,016,403
2008	16,377,970	10,833,136	5,544,834
2009	11,585,241	10,147,526	1,437,715
2010	9,474,746	8,503,857	970,888
2011	13,514,577	12,209,855	1,304,722
2012	14,178,027	14,572,473	(394,446)
2013	20,197,814	16,346,810	3,851,004
2014	20,585,847	19,415,020	1,170,827
2015	18,056,343	19,995,419	(1,939,076)
2016	24,508,082	22,267,174	2,240,908
2017	25,763,278	28,229,653	(2,466,375)
2018	31,016,270	37,183,440	(6,167,170)
2019	30,122,360	33,402,673	(3,280,313)
2020	27,647,089	33,695,769	(6,048,680)
2021	28,926,842	29,619,036	(692,194)
2022	27,800,707	33,173,163	(5,372,457)
2023	44,579,653	43,074,969	1,504,684

மூலாதாரம்:- தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் சபையின் வருடாந்த நிதிக்கூற்றுக்கள்



இதன் பிரகாரம் ஒழுங்குபடுத்தல் சபை 2007 முதல் 2016 வரை (2012 மற்றும் 2015 தவிர) ஈட்டிய வருமானத்தை விட குறைந்த அளவில் செலவு செய்து நிதி மிகையொன்றை பேணிச் சென்ற போதும், 2017 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து நட்டம் ஏற்பட்டதால் 2016 திசெம்பர் 31 திகதி நிலவிய ரூபா 33,719,154 திரண்ட நிதியம் 2023 திசெம்பர் 31 திகதியளவில் ரூபா 10,371,883 வரை 69 சதவீதத்தால் படிப்படியாக குறைந்திருந்ததுடன் 2023 திசெம்பர் 31 திகதியளவில் தேறிய நடைமுறை சொத்துக்களில் ரூபா 48,438,734 ஆன மறை மீதியொன்று நிலவியதால் ஒழுங்குபடுத்தல் சபையில் குறுங்கால வங்கரோத்துத் தன்மை அவதானிக்கப்பட்டது.

4. **கணக்காய்வு பரிந்துரைகள்**

(அ) நாட்டினுள் செயற்படும் தனியார் சுகாதார சேவைகளை வழங்கும் மொத்த நிறுவனத் தொகுதியால் பொது மக்களிற்கு நியாயமான, பொறுப்புவாய்ந்த, சுமக்க முடியுமான அறவீட்டின்கீழ், பாதுகாப்பான, வினைத்திறனான சுகாதார சேவையை வழங்குவதனை உறுதி செய்ய முடியுமான வகையில் ஒழுங்குபடுத்தலை செயற்படுத்துவதற்கு தேவையான தீர்மானங்களை எடுக்க கூடியவாறான கட்டுப்பாட்டு சபை அமைப்புடன் கூடிய புதிய பாராளுமன்ற சட்டமொன்றை அங்கீகரித்து செயற்படுத்த அல்லது 2006 இன் 21 இலக்க தனியார் மருத்துவ நிறுவங்கள் (பதிவு செய்தல்) சட்டத்தின் மூலம் நிறுவியுள்ள தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையின் கட்டமைபை தனியார் சுகாதார நிறுவனங்களை ஒழுங்குபடுத்த தீர்மானிக்கும் அரச துறையின் இயலுமை அதிகரிக்கும் வகையில் திருத்துதல்.

(ஆ) 2006 இன் 21 இலக்க தனியார் மருத்துவ நிறுவங்கள் (பதிவு செய்தல்) சட்டத்தில் தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையை கணக்காய்வு செய்வது தொடர்பான ஏற்பாடுகள் திட்டவட்டமாக குறிப்பிடப்படாததால் அது தொடர்பான பொருத்தமான மதிப்பீட்டின் பின்னர் திட்டவட்டமான ஏற்பாடுகளை உறுவாக்குதல். இங்கு இத்தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்யும் போது அந் நிறுவனங்களினால் வழங்கியுள்ள தரவுகளின் சரியான தன்மை, பதிவிற்காக சமர்ப்பிக்கப்படும் தகவல்களை பரீட்சித்து உறுதி செய்த அரச அலுவலர்களினால் அந்த பணிகள் சரியாக மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என மற்றும் சரியாக பதிவுக் கட்டணம் அறவிடப்பட்டுளளனவா என பரீட்சித்து பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடும் அதிகாரத்தை கணக்காய்வாளர் நாயகத்திற்கு (தனியார் மருத்துவ நிறுவனங்களை கணக்காய்வு செய்வதற்காக அன்றி) வழங்குவது தொடர்பாக மதிப்பீட்டிற்குட்படுத்தி பொருத்தமான ஏற்பாடுகளை சட்டத்திற்கு உட்படுத்துதல்.

(இ) 2006 இன் 21 இலக்க தனியார் மருத்துவ நிறுவங்கள் (பதிவு செய்தல்) சட்டத்தின் மூலம் கட்டளைகளை தயாரிப்பதற்காக வழங்கியுள்ள அதிகாரத்தின் பிரகாரம் இது வரை தயாரித்துள்ள கட்டளைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்து சட்டமொன்றாக்குதல் மற்றும் இது வரை விடயப் பொறுப்பு அமைச்சரினால் தயாரிக்கப்படாத கட்டளைகளை விரைவில் தயாரித்து அரச வர்த்திமானியில் வெளியிட்டு பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்து சட்டமொன்றாக்குதல்.

(ஈ) 2006 இன் 21 இலக்க தனியார் மருத்துவ நிறுவங்கள் (பதிவு செய்தல்) சட்டத்தின் மூலம் விதிகளை உருவாக்க வழங்கியுள்ள விடயங்களிற்குரிய விதிகளை தயாரித்து விடய பொறுப்பு அமைச்சரினால் அங்கீகரித்து அரச வர்த்திமானியில் வெளியிட்டு அமுல்படுத்துதல்.

(உ) நாட்டில் காணப்படும் அனைத்து தனியார் மருத்துவ நிறுவனங்களையும் தரப்படுத்தி பொது மக்களிற்கு சுமக்க முடியுமான நியாயமான கட்டண முறையொன்று தொடர்பாக கட்டளைகளை தயாரித்து அமுல்படுத்துவது தொடர்பாக துரித கவனம் செலுத்துதல்.

(ஊ) காணப்படும் சட்டத்தை திருத்தும் போது அல்லது புதிய சட்டத்தை தயாரிக்கும் போது தனியார் மருத்துவ நிலையங்களில் கட்டாய கடமைகள் எதுவென குறிப்பிடுதல், தனியார் மருத்துவ நிலையங்களினால் கட்டளையொன்றை அல்லது விதியொன்றை மீறியிருப்பின் ஒழுங்குபடுத்தல் சபையினால எடுக்க முடியுமான படிமுறையை திட்டவட்டமாக குறிப்பிடுதல், தொழிநுட்பத்தை மதிப்பிடுதல் மற்றும் ஒழுங்குபடுத்தல் மற்றும் அதனுடன் தொடர்பான ஒழுக்கப் பிரச்சினைகள் தொடர்பாக விழித்தல் ஆகிய விடயங்கள் தொடர்பில் துரித கவனம் செலுத்துதல்.

(எ) சட்டத்தின் நோக்கம் நிறைவேறும் வகையில் பதிவு செய்துள்ள தனியார் மருத்தவ நிறுவனங்கள் பேணிச் செல்ல வேண்டிய நியமங்களை அபிவிருத்திக்கு, மேற்பார்வைக்கு

மற்றும் நியம மதிப்பீட்டிற்கு, ஊழியர்களை ஆட்சேர்க்கும் போது குறைந்தபட்ச தகைமை மற்றும் பயிற்றுவிக்கும் போது குறைந்தபட்ச நியமங்களை பின்பற்றப்படுவதாக உறுதி செய்ய, நோயாளர்கள் பராமரிப்பு சேவைகளின் தரத்தை உறுதி செய்ய ஒழுங்கான முறைமை ஒன்றை தயாரித்து அதனை சட்டமாக்கி நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்தல்.

(ஏ) அனைத்து தனியார் மருத்தவ நிறுவனங்களினாலும் ஊழியர்களை ஆட்சேர்க்கும் போது குறைந்தபட்ச தகைமை பின்பற்றப்படுவதாக, உறுதி செய்தல் மற்றும் ஊழியர்களை பயிற்றுவிக்கும் போது குறைந்தபட்ச நியமங்களை பின்பற்றுவதாகவும், பொறுப்பேற்கும் வகையில் தனியார் மருத்தவ நிறுவனங்களிற்கு தேவையான பயிற்சி பெற்ற ஆளணியினர் இருப்பதாக உறுதி செய்து கொள்ளல் மற்றும் தொழிற்துறையாளர்களை ஆட்சேர்க்கும் போது தேசிய ஆட்சேர்ப்பு பிரமாணங்களை பின்பற்றுவதனை உறுதி செய்தல்.

(ஐ) 2007 ஆண்டில் தீர்மானிக்கப்பட்ட பதிவுக் கட்டணத்தை தற்காலத்திற்கு ஏற்றவகையில் திருத்துதல்.

(ஒ) கம்பனி சட்டத்தின் கீழ் அல்லது ஏனைய ஏற்பாடுகளின் கீழ் தனியார் மருத்தவ நிறுவனங்களை பதிவு செய்யும் போது அல்லது பதிவினை புதுப்பிக்கும் போது அல்லது தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையின் பதிவை பெற்றுள்ளதனை கட்டாய நிபந்தனை ஒன்றாக ஆக்குவது தொடர்பில் காணப்படும் இயலுமை தொடர்பாக கவனம் செலுத்துதல்.

(ஓ) பதிவிற்காக சமர்ப்பிக்கப்படும் நிறுவனங்களிற்காக விரைவில் பதிவினை வழங்கும் வேலைத் திட்டமொன்றை அறிமுகம் செய்தல், பதிவிற்காக தேவையான குறைந்த பட்ச தேவைப்பாட்டை பூர்த்தி செய்யாத தனியார் மருத்துவ நிறுவனங்களிற்காக அதன் குறைந்த பட்ச தேவைப்பாட்டை பூர்த்தி செய்து கொள்ள திட்டவட்டமான காலமொன்றை வழங்குதல் மற்றும் அந்த திட்டவட்டமான காலத்தினுள் குறித்த குறைந்த பட்ச தேவைப்பாட்டை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்காத நிறுவனங்களிற்கு எதிராக துரிதமாக சட்ட நடவடிக்கை எடுத்தல்.

(ஔ) தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையில் பதிவு செய்யாது நாட்டினுள் நடாத்திச் செல்லப்படும் அனைத்து தனியார் மருத்தவ நிறுவனங்கள் தொடர்பாக சட்டத்தின் மூலம் வழங்கியுள்ள அதிகாரங்களை பயன்படுத்தி துரிதமாக சட்ட நடவடிக்கை எடுத்தல்.

(க) தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையினால் வழங்கப்படும் பதிவுச் சான்றிதழை ஏதேனும் திட்டவட்டமான காலத்திற்கு செல்லுபடியாகும் வகையில் தயாரித்தல் மற்றும் செல்லுபடியாகும் காலம் முடிவடைந்த பின்னர் பதிவு செய்யும் போது பொருத்தமான தண்டப் பணத்தை அறவிடும் முறைமையொன்றை தயாரித்து நடைமுறைப்படுத்துதல்.

(கா) ஆய்வுகூட பதிவின் போது, ஆய்வுகூடம் உரிய நியமங்களின் பிரகாரம் காணப்படுவதாக இலங்கை தராதர அங்கீகார தகைமை சபையினால் வருடாந்தம் பரீட்சித்ததன் பின்னர் வழங்கும் அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்வதனை கட்டாயப்படுத்துதல்.

(கி) பிணி ஆய் கழிவுகளை வெளியிடுவதற்காக கட்டாயமாக பெற்றுக் கொள்ள வேண்டிய சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் (Environmental Protection License -EPL) மற்றும் பட்டியறப்படுத்தப்பட்ட கழிவுப் பொருள் முகாமைத்துவ அனுமதிப்பத்திரத்தை (Schedule Waste Management License -SWML) பெற்றுக் கொள்ளும் சட்ட தேவைப்பாட்டை பூத்தி

செய்திருப்பதனை தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்யும் போது கட்டாயப்படுத்தல்.

(கீ) சுகாதார பொதுத் திட்டத்தில் (2016 - 2025) (Health Master Plan) குறிப்பிடப்படுவதன் பிரகாரம் மற்றும் 2006 இன் 21 இலக்க தனியார் மருத்துவ நிறுவங்கள் (பதிவு செய்தல்) சட்டத்தின் 14 ஆம் பிரிவில் குறிப்பிடப்படுவதன் பிரகாரம் ''அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்கள்'' மிகவும் சரியாக வரைவிளக்கணப்படுத்தல் மற்றும் தனியார் சுகாதார சேவைகளின் ஒழுங்குபடுத்தல் தொடர்பாக சுகாதார பொதுத் திட்டத்தின் மூலம் இனங் கண்டிருந்த குறைபாடுகளை தீர்த்துக் கொள்ள துரித நடவடிக்கை எடுத்தல்.

(கு) தனியார் மருத்துவ நிறுவனங்களினால் பொது மக்களிற்கு ஏற்படும் அநியாயங்கள் மற்றும் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாக முறைபாடுகளை சமர்ப்பிக்கும் மற்றும் அவ்வாறு கிடைக்கும் முறைப்பாடுகளை விசாரித்து நிவாரணம் வழங்க ஒழுங்கு முறையான பொறிமுறையொன்றை தயாரித்து நடைமுறைப்படுத்தல் மற்றும் நிகழ்நிலை முறையின் கீழ் (On Line) முறைப்பாடு செய்யும் இலலுமையை வழங்குதல்.

(கூ) பொது மக்களிற்கு தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல்) சட்டம் தொடர்பாக மற்றும் அச் சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட கட்டளைகள் மற்றும் விதிகள் தொடர்பான தெளிவை அவ்வப் போது வழங்குதல்.

(கெ) தனியார் மருத்துவ நிறுவனங்களை பிராந்திய மட்டத்தில் ஒழுங்குபடுத்த சுகாதார மருத்துவ அலுவலகங்களில் கடமையாற்றும் அலுவலர் ஒருவரின் ஒறுங்கிணைப்பின் கீழ் உட்படுத்த வேண்டியமை. பிராந்திய சுகாதார அலுவலர் அலுவலக மட்டத்தில் கள அலுவலர்களை நியமித்து அவர்களினூடாக காலாண்டு ரீதியாக தனியார் சுகாதார நிலையங்களில் மனிதவள தரவுகள், ஊழியர் தகைமைகள், கட்டணம் தொடர்பான தரவுகளை சேகரித்து, உபகரணங்கள் மற்றும் நடைமுறைகளின் தரம் தொடர்பாக உறுதி செய்து கொள்ளல்.

(கே) அனைத்து மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகங்களிலும் தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையின் பதிவிற்குரியதாக மற்றும் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்காக அதிகாரமுடைய வேறான ஆளணியினருடன் கூடிய வேறான அலகொன்றை நிறுவுதல்.

(கை) கட்டுப்பாட்டுச் சபை கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய கால எல்லை மற்றும் தடவைகள் தொடர்பாக நியமங்களை குறிப்பிடுவதனை போன்றே கட்டுப்பாட்டு சபை அங்கத்தவர்களினால் கூட்டங்களிற்காக தொடர்ந்து பங்குபற்றுவதனை உறுதி செய்தல் மற்றும் உரியவாறு கூட்டங்களிற்கு பங்குபற்றாத கட்டுப்பாட்டு சபை அங்கத்தவர்களை நீக்கி பொருத்தமான நபர்களை நியமிக்க நடவடிக்கை எடுத்தல்.

(கொ) மாகாண சுகாதார சேவை பணிப்பாளர்களினால் குழுக் கூட்டங்களிற்கு தவிர்க்க முடியாத காரணத்தின் மீது பங்குபற்ற முடியாத சந்தர்ப்பங்களில் அவரால் அதிகாரமளிக்கப்பட்ட மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளர் மட்டத்தின் அலுவலர் ஒருவருக்கு பங்குபற்ற முடியுமான வகையில் சட்ட ஏற்பாடுகளை வழங்குதல் மற்றும் மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் அல்லது அவரின் பிரதிநிதி ஒருவர் குழுக் கூட்டங்களிற்காக பங்குபற்றுவதனை கட்டாயப்படுத்தல்.

(கோ) உப குழுக்களின் தன்மை மற்றும் எதிர்பார்த்த நோக்கங்களின் பிரகாரம் சுயாதீனமாக மற்றும் நோக்கத்துடன் நடவடிக்கை எடுக்க இயலுமையுள்ள அங்கத்தவர்களை உப குழுக்கழுக்களுக்காக நியமித்தல், அந்த அந்த விடயம் தொடர்பாக நிபுணத்துவ அறிவுடைய அங்கத்தவர்களை உப குழுக்களுக்காக நியமித்தல், உப குழுக்களின்

நிறைவெண்ணை தீர்மானித்தல் மற்றும் உப குழு அங்கத்தவர்கள் குழுக் கூட்டங்களிற்காக தொடர்ந்து பங்குபற்றுவதனை உறுதி செய்தல்.

(கௌ) தேசிய மருந்துகள் ஒழுங்கபடுத்தல அதிகாரசபை, நுகர்வோர் அதிகாரசபை, மத்திய சுற்றாடல் அதிகாரசபை போன்ற நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயற்படுவதற்கான பொருத்தமான பொறிமுறை ஒன்றை தயாரித்து செயற்படுத்தும் இயலுமை தொடர்பாக கவனம் செலுத்துதல்.

(ச) சுகாதார தகவல்கள் தொடர்பான தேசிய கொள்கையின் பிரகாரம் தனியார் சுகாதா பிரிவினால் பெற்றுக் கொள்ளும் சுகாதாரம் தொடர்பான தரவுகள் மற்றும் தகவல்களை தேசிய சுகாதார தகவல் தொகுதியுடன் இணைப்பதன் மூலம் காலரீதியான தகவல்களை வழங்குதல்.

(சா) தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையின் தொடர்ந்து இயக்கத்திற்காக சிறந்த நிதி உறுதிப்பாட்டை பேணிக் கொள்ள வேண்டியதுடன், ஆளணிக்காக பொது திறைசேரியின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டியமை.

(சி) 2006 இன் 21 இலக்க தனியார் மருத்துவ நிறுவங்கள் (பதிவு செய்தல்) சட்டத்தின் மூலம் தயாரிக்கப்பட்டுள்ள கட்டளை பிரகாரம் தனியார் மருத்துவ நிறுவனங்களினால் வழங்கப்படும் சேவைகளிற்காக அறவிடப்படும் கட்டணம் தொடர்பாக பொது மக்களிற்கு அறிந்து கொள்வதற்காக குறித்த நிறுவனங்களில் காட்சிப்படுத்த வேண்டியமை மற்றும் தனியார் மருத்துவ நிறுவனங்கள் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காத சந்தர்ப்பங்களில் அதற்காக பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்தல்.

(சீ) அக்ரஹார காப்புறுதி உத்தேச திட்டத்தின் கீழ் நலன்களை செலுத்தும் போது தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையில் பதிவு செய்த தனியார் வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய தனியார் மருத்துவ நிறுவனங்களிலிருந்து பெற்றுக் கொண்ட சிகிச்சைகளிற்கு மாத்திரம் நலன்களை செலுத்துவது தொடர்பாக கவனத்திற் கொள்வதாக நிபந்தனையொன்றை அக்ரஹார காப்புறுதி உத்தேச திட்டத்திற்கு உட்படுத்தும் இயலுமை தொடர்பாக கவனத்திற் கொள்ளல்.

(சு) தேசிய காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுடன் ஒருங்கிணைந்து தனியார் காப்புறுதி நிறுவனங்களில் சுகாதார காப்புறுதி உத்தேச திட்டத்தின் கீழ் உரிமை செலுத்தும் போது தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தல் சபையில் பதிவு செய்த தனியார் வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய மருத்துவ நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளும் சிகிச்சைகளிற்காக மாத்திரம் உரிமை செலுத்துவதாக முறைமையொன்றை தயாரிக்க காணப்படும் இயலுமை தொடர்பாக கவனம் செலுத்துதல்.

ஒப்பம்./டபிள்யூ. பீ. சீ. விக்ரமரத்ன.
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

டப்லியு.பீ.சீ.விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

2024 யூலை 10 திகதி

இணைப்பு இலககம் : 01
பந்தியுடனான தொடர்ப்பு : 3.11.1(ஆ)

தகவல்களை சமர்ப்பிக்காத சுகாதார மருத்துவ அலுவலர் அலுவலகங்கள் (MOH) தொடர்பான விபரங்கள்.

மாகாணம்	மாவட்டம்	எண்ணிக்கை	மருத்துவ அலுவலர் அலுவலகத்தின் பெயர்
மத்திய	கண்டி	05	தொழுவ/குருந்துவத்த (கங்க இஹல கோரலே) / கங்க வட்ட கோரலே (ஹசலக) / மினிபே) / தலாதுஓய (பாத்தஹேவாஹெட்ட)
	மாதளை	01	மாத்தளை (நகர சபை)
	நுவரெலிய	06	கொத்மலை/மதுரட/வளபனே/ரிகிள்ளகஸ்கட (ஹகுரன்கெத) / ராகல/ நுவரெலிய
மேல்	கொழும்பு	04	பொரலஸ்கமுவ/ஹங்வெல்ல/கடுவெல/கொழும்பு (பொது சுகாதார திணைக்களம்)
	களுதுறை	02	பேருவளை / களுத்துறை
சபரகமுவ	இரத்தினபுரி	01	இரத்தினபுரி (நகர சபை)
தெற்கு	காலி	04	பத்தேகம/ காலி (நகர சபை) கரன்தெனிய (பொரலந்த)/நியகம
	ஹம்பந்தொட்ட	02	ஹம்பந்தொட்ட / வலஸ்முல்ல
ஊவா	மொனராகல	01	மொனராகல
வடக்கு	யாழ்பாணம்	01	யாழ்பாணம்
	கிளிநொச்சி	01	கிளிநொச்சி
	மன்னார்	02	மடு/ ஏம்பன் (மான்னாய் மேற்கு)
	முல்லைத்தீவு	04	முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் / மான்னாய் (கிழக்கு)/ வெலிஓய
	வவுனியா	03	வவுனியா (தெற்கு) / வவனியா /செட்டிகுளம்

இணைப்பு இலக்கம் : 02
பந்தியுடனான தொடர்ப்பு : 3.11.1

நாடு முழுவதும் நாடாத்திச் செல்லப்படும் தனியார் மருத்துவ நிறுவனங்களின் எண்ணிக்கை மற்றும் பதிவு செய்யப்பட்ட தனியார் மருத்துவ நிறுவனங்களின் எண்ணிக்கை

தொடர் இலக்கம்	தனியார் சுகாதார நிறுவன வகை	2023 சனவரி 30 வரை இனங்கண்ட நடாத்திச் செல்லப்படும் நிறுவன எண்ணிக்கை	உள்ளவாறாக பதிவு செய்துள்ள எண்ணிக்கை	பதிவு செய்துள்ள சதவீதம்
01.	தனியார் வைத்திசாலைகள்	275	162	59
02.	தனியார் மருத்துவ நிலையங்கள்	875	183	21
03.	மருத்துவ ஆய்வுகூடங்கள்	1631	469	29
04.	ஏனைய மருத்துவ நிறுவனங்கள்	435	66	15
05.	பகுதிநேர சாதாரண மருந்தகங்கள்	1795	204	11
06.	முழுநேர சாதாரண மருந்தகங்கள்	556	111	20
07.	பகுதிநேர பல் அறுவை சிகிச்சையகங்கள்	172	19	11
08.	முழுநேர பல் அறுவை சிகிச்சையகங்கள்	168	36	21
09.	பகுதிநேர நிபுணத்துவ மருத்துவ சேவை	37	03	8
10.	முழுநேர நிபுணத்துவ மருத்துவ சேவை	27	02	7
11.	தனியார் நோயாளர் வண்டி சேவை	31	10	32
	கூட்டுத் தொகை	**6002**	**1265**	**21**

இணைப்பு இலக்கம் : 03
பந்தியுடனான தொடர்ப்பு : 3.13.3(ஆ)

நுகர்வோர் அதிகாரசபையினால் கொழும்பு மாவட்டத்தில் 13 தனியார் மருத்துவ நிறுவனங்கள் தொடர்பாக மேற்கொண்ட ஆய்வுகூட பரிசோதனை விலைகள் தொடர்பான கணிப்பீட்டு தரவுகள (2023 ஜுன் 07)

மாதிரிக்குட்படுத்திய வைத்தியசாலை	ஒரு பரிசோதனைக்கான கட்டணம் (ரூபாய்)						
	FBS	UFR	TSH	ESR	Lipid Profile	HBA1C	ECG
டேடன்ஸ் வைத்தியசாலை	500	500	2000	500	2500	2250	575
லங்கா வைத்தியசாலை	510	510	2170	420	1970	2320	-
ஹேமாஸ் ஆய்வுகூடம்	540	570	2120	510	2070	2630	-
நவலோக்க ஆய்வுகூடம்	550	560	2480	520	2480	1880	-
ஆசிரி ஆய்வுகூடம்	630	620	2480	590	2770	2870	910
வெஸ்டர்ன் வைத்திசாலை	450	400	1450	425	2200	1900	600
நாவல பிணி ஆய் நிலையம்	300	500	2170	400	1500	2320	800
ஏசியா வைத்தியசாலை – மஹரகம	370	400	2200	340	1600	1950	500
மெடி ஹெல்ப் வைத்தியசாலை -நுகேகொட	370	450	1790	350	1700	2200	750
வின் லங்கா வைத்தியசாலை - கொஹுவல	390	450	1990	350	1900	1990	600
கிங்ஸ் வைத்தியசாலை – பொரல்ல	400	400	1490	350	1500	1800	900
சீமெட் வைத்திசாலை - நுகேகொட	490	470	1790	460	1900	2200	600
பார்க் வைத்திசாலை – கொழும்பு - 5	520	500	2490	400	2900	3010	1200
உச்ச கட்டணம்	630	620	2490	590	2900	3010	1200
குறைந்தபட்ச கட்டணம்	300	400	1450	340	1500	1800	500

இணைப்பு இலக்கம் : 04
பந்தியுடனான தொடர்ப்பு : 3.13.4

நுகர்வோர் அதிகாரசபையினால் உச்ச கட்டணங்களிற்கு எதிராக பணம் அறவிடும் போது தண்டப் பணம் விதித்தல்

சுற்றிவலைப்பு மேற்கொண்ட திகதி	நீதவான் நீதிமன்றம்	வழக்கு இலக்கம்	பரிசோதனை	தண்டப் பணம் (ரூபா)
2022/03/03	பானந்துறை	92161/22	Antigen Test	500,000
2023/03/23	நுவரெலிய	3114	FBC Invoice	500,000
2023/03/16	அவிசாவளை	90115	Medicine	5,000
2023/02/20	மாளிகா கந்தை	6399/23	Medical Test	1,000,000
2023/03/22	ஹோமாகம	51473	Medical Test	500,000
2023/02/20	மாளிகா கந்தை	6400/23	Medical Test	400,000
2023/02/22	கல்கிச்ச	12380/s/23	Medical Test	1,500,000
2023/02/23	கங்கொடவில	13533/23	Medical Test	1,000,000
2023/03/08	கிருலபனை	87684/05/23	Medical Test	1,000,000
2023/03/08	கிருலபனை	87683/05/23	Medical Test	1,000,000
2023/03/23	ஹோமாகம	51472	Medical Test	500,000
2023/03/13	கங்கொடவில	14155/23	Medical Test	500,000
2023/02/03	கிருலபனை	85510/05/23	Medical Test	500,000
2023/02/03	கிருலபனை	85511/05/23	Medical Test	1,000,000
2023/02/15	கிருலபனை	86235/05/23	Medical Test	500,000
2023/02/15	கிருலபனை	86236/5/23	Medical Test	500,000
2023/02/23	கங்கொடவில	13532/23	Medical Test	500,000
2021/08/13	மாரவில	75350	Medical Test	10,000